இணைந்த போதில்.

18 11

14 உ6, 1933

DIGITIZED

JL
m211, N15A8
N33-18.11
190102

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 19 | ஸ்ரீமுக ௵ ஆடி௴ ௧௨ | 1933 ௵ ஜூலை௴ 16௳ | பகுதி 1

## கடவுள் வணக்கம்.

ஆகார புவனமின்பா கார மாக
அங்ஙனே ஒருமொழியால் அகண்டா கார
யோகாது பூதிபெற்ற அன்ப ராவிக்கு
உறுதுணையே என்னளவும் உகந்த நட்பே
வாகாரும் படிக்கிசைகிண் கிணிவா யென்ன
மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கு மாபோல்
தேகாதி யுலகமெங்கும் கலந்து தானே
திகழனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே. (1)

அனந்த பத உயிர்கடொறும் உயிரா யென்றும்
ஆனந்த நிலையாகி அளவைக் கெட்டாத்
தனந்தனிச் சின் மாத்திரமாய்க் கீழ்மேல் காட்டாச்
சதசத்தா யருட்கோயில் தழைத்த தேவே
இனம்பிரிந்த மான்போனன் இடையா வண்ணம்
இன்பமுற அன்பர்பக்கல் இருத்தி வைத்துக்
கனந்தருமா கனமேதண் ணருளிற் றேனே
கனிபலித்த ஆனந்தக் கட்டிப்பேறே. (2)

வான நாயக வானவர் நாயக வளங்கடர்
ஞான நாயக நான்மறை நாயக நலஞ்சேர்
... நாயக நின்னடிக் கன்பின்றி முற்றும்
... கம் வாடவோ என் செய்வேன் செப்பாய். (3)

... வு கட்காமங் கோபம் விட்டாலன்றோ
... நின்னருடான் வாய்க்கும் ... (4)

190/04

# அரும்பொருள் விளக்கம்

(1) (இ-ள்) உருவமாத்திரமாய்க் காணப்படுகின்ற உலகமானது சுக வடிவமாக, அவ்வாறே ஒரு சொல்லினால் அகண்ட ரூபமான யோகானுபவம் பெற்ற அன்பாரது உயிருக்கு மிக்க துணையே! என்னை விரும்பும் விருப்பம் வைத்த சிநேகமே! அழகு பொருந்தும்படிக்கு ஒலிக்கின்ற கிண்கிணிவாய் போல விரிந்த மலர்விடத்தில் பரிமளம் வீசுதல்போல் தனு முதலாகிய உலகமெல்லாங் கலந்து தானேயாகி விளங்குகின்ற முடிவற்ற ஆனந்த ரூபமான தெய்வத் தன்மையுள்ள மலையே என்க.


அருள் வாக்கியத்தால் ஆகார புவன மனைத்தையும் சிவாகாரமாகக் கண்டு, கரணங்களைச் சிவார்ப்பிதம் செய்து வாழும் யோகியரிடத்து முதல்வன் நனது விளங்கிடுவானாகலின், 'ஆகார புவனமின்பா காரமாக அங்ஙனே ஒரு மொழியால் அகண்டாகார யோகானுபூதி பெற்ற அன்பராவிக்கு உறு துணையே" எனவும், அத்தகையோருக் குற்ற துணையா யிருப்பதன்றி அடியேனையும் ஒரு பொருட்டாக மதித்து என்னிடத்தும் அருள் வைத்தனை என்பார் "என்னை விழைந்த நட்பே" எனவும், மலரினிடத்து வாசனை தாதான்மியமாக இருத்தல்போல தனு கரண, புவனபோக மனைத்தினுங் கலந்துள்ளான் என்பார், "மலரிடை வாசம் வயங்கு மாபோல் தேகாதி யுலகமெங்குங் கலந்து" எனவும் கூறினர்.

2. முடிவற்ற குறிகளையுடைய உயிர்கள் தோறும், உயிராகி, எக்காலத்தும் சுக நிலையமாகி, காட்சி முதலிய பிரமாணங்கட்கு மெட்டாத மிகத் தனிமையான சிற்சொரூப மாத்திரமாகி, கீழெல்லை மேலெல்லைகளைக் காட்டாத சத்தும் அசத்துமாகி, திருவருளாகிய கோயிலில் செழித்த தெய்வமே! அடியேன் தன் கூட்டத்தினைவிட்டு நீங்கிய மானைப்போல் வருந்தாவகை சுக வாழ்வுடைய உன் தொண்டரிடத்து இருக்கச் செய்து சிறப்பைத் தருகின்ற பெருஞ் சிறப்பமைந்த பெரிய வஸ்துவே! குளிர்ச்சி பொருந்திய அருள் என்னும் மரத்தில் கனியாகப் பழுத்த இன்பமாகிய சர்க்கரைக் கட்டி என்று சொல்லப்படுகின்ற பரமலாபமே! என்க.

உயிர்வகைகள் எல்லையற்றனவாதலின் "அனந்தபத உயிர்கள்" என்றும், ஆன்மாக்களுக்கெல்லாம் பிராணநாயகனா யிருத்தலின் "உயிர்கடோறும் உயிராய்" என்றும், திருவருவனைத்தும் ஆனந்தமே யாகலினாலும், அவனையுற்று நோக்குவார்க்கும் ஆனந்தமே விளைதலினாலும் "ஆனந்த நிலையாகி" என்றும், பாசானுமானங்களினால் அறியப்படாமையின் "அளவைக்கெட்டா" என்றும், சுசாதி விசாதி பேதமற்று விளங்கலின் "சின்மாத்திரமாய்" என்றும், தான் சத்தாகவிருந்தும் அசத்தினைத்தினையும் அசைப்பித்தலின் 'சதசத்தாய்' என்றும் கூறினர்.

3. விண்ணுலகத் தலைவனே! தேவர்கட்குத் தலைவனே! வளம் மிகுத்த ஞானதீபனே! நான்கு வேதங்கட்கும் முதல்வனே! நன்மை பொருந்திய மௌன நிலைக்கு இறைவனே! தேவரீர் திருவடிகட்கு அன்பு செய்தலில்லாமல் முழுதும் ஏழையாகி மனம் நோவனோ? என்ன செய்யவல்லேன் சொல்லுவாயாக என்க.

4. கொலையையும், களவையும், கள்ளுண்டலையும், காமத்தையும், கோபத்தையும் விட்டாலன்றோ உனது திருவருள் மலையிலக்காகக் கிடைக்கும்? என்க.




Vol. 18. பொருளடக்கம் No. 11.


பக்கம்.
1. கடவுள் வணக்கம் ... 801
2. உத்தம ஆலயங்கள் ... 803
3. நேயர்கட்கு ஒரு வேண்டுகோள் 807
4. திருவாசகம் என்னும் தேன் 808
5. ராமாயணமும் கந்தபுராணமும் 812
6. பிராட்டியார் ... 817
7. அத்தியயனோற்சவத் தத்துவம் 825
8. தன்னிஷ்ட சுயாதீனத் தாண்டவம், சிறு கதை 833, 886
9. ஆரம்ப ஆசிரியர் நிலை ... 843
10. இசைப்புலவர் தான்சென் ... 846
11. "ஆலய தத்துவமும் ஆரம்பத்தமும், காதல் 849, 855
12. நூருண்டுப் போர் ... 857
13. புத்தரும் அவரது தத்துவங்களும், வணிக தர்மம் 861, 864
14. விசித்திர விரோதம் ... 863
15. ஆசிரியர் குறிப்புக்கள் ... 878



211,N15AB
N32.18.11
190102

# “ ஆனந்தபோதினி ”

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | ஸ்ட்ரெய்ட், ஸிங்கபூர், தென்ஆப்ரிக்கா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2— |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3— |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 3—அணா வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணா வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணா, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணா சேர்த்து ரூபா 1-6-0 க்கு வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டு யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாத 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரி விப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்கு புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப் பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றி, தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாக வும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 25—0 |

*Telephone* No. 3005. *Telegram* :—"Ananda Bodhini," Madras.

விலாசம்:—நா. முனிசாமி முதலியார், “ஆனந்தபோதினி” 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, தபால் பெட்டி நெ. 167, [illegible]


கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத் தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட் டிருக்கின்றன.
இவ்வருடம் கிறிஸ்துவ பண்டிகைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

108 பக்கங்கள் கொண்ட **ஸ்ரீமுக வருஷத்திய**

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாந்திர ஸௌரமான)

சர்வமுகூர்த்த

“ ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம் ”

நமது வானசாத்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாத்திரக் கணிதத்திலும் திறமை வாய்ந்த, ஸ்ரீ [illegible] C. G. இராஜன் பி. ஏ. (B. A. Mathematics) அவர்க[illegible] பஞ்சாங்கம் சுத்தமாகக் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்களின் நாழிகையோடு, மணி நிமிஷமும் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பஞ்சாங்கத்தில் இருக்க வேண்டிய, நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாக சக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விரதாதி விசேஷங்கள், தசாபுத்தி, கிரக சாரங்கள், தசவிதப்பொருத்தங்கள், சகுனங்கள் முதலியவைகளோடு, நவ நாயகர்கள் பலன் முதலிய வேறு விஷயங்களும் சேர்க்கப்பட்டு சோதிடர்களும் மற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி சோதிட பொது விஷயங்களும் வெளியிடப்பட் டிருக்கின்றன. இவ் வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாயுள்ள நட்சத்திர ஓரை, சந்திர உதையம், கிரக உச்சம், நவக்கிரக நிரயன சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

இது ஜோதிடர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய உபயோகமாகும்.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2.

6-பஞ்சாங்கங்கள் 0—8—0. 12-பஞ்சாங்கங்கள் 0—14—0.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபாற்கூலி ½ அணா சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1—10—0 முன்தி அனுப்பிவிட்டு தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரி வித்தால் பார்சலாக அனுப்பிவிடுவோம். ரயில் சார்ஜ் நீங்கள் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

☞ எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

[illegible] கம்பெனியார் வெளியிடும் 6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்களும் எமது அச்சுக்கூடத்திலேயே [illegible] பதிப்பிக்கப்பெற் றிருக்கின்றன.

பஞ்சாங்கம் 1-க்கு அணா ½.

[illegible] அணா 2½. 12-பஞ்சாங்கம் அணா 4.

ஷை வருஷத்திய தெலுங்கு கிம்மகேட்ட பஞ்சாங்கம்.

1-க்கு அணா ½. 6-க்கு அணா 2½. 12-க்கு அணா 4.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்

அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று!

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

## (நான்காம் பதிப்பு)

அழகிய சிலை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளிப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாரா



சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இடபாச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

# இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இந்த சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி, சாஸ்திர ஆராய்ச்சி, தந்திரம் சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குங் கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்வனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர் பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிகாத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-38 வரை விலை ரூ. 1—4—0

# தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்.

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. ...ன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மி... Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டு மென்பதை இந்... நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி Ct. 167, ...

**புதிய நாவல்!** **புதிய நாவல்!!**

# கிருஷ்ணஸிங்

அல்லது

## துப்பறியும் சிடன்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

**அறிவைப் புகட்டும் அரிய நாவல் இதுவே.**

துப்பறியும் இரகசியங்களும், தந்திர சாமார்த்தியங்களும், வீரதீரச் செயல்களும், உலகில் பல படுமோசப் படுகுழியிலிருந்து தப்புவதற்கான புத்தி மதிகளும், கெடுவான் கேடு நினைப்பான் என்பதற்கிணங்க நீதிமதியோடு கூடிய பல அத்தாட்சிகளும், இன்னும் பல இனிய அரிய போதனைகளும் அடங்கியது.

**இதன் விலை அணா 14.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை அணா 10.

# அம்பாலிகை

அல்லது

## அதிசய மரணம்

அறிவைப் புகட்டும் ஓர் அருமையான துப்பறியும் நாவல் இதுவே. இதில் கொலைகளவுக் கஞ்சாப் பாதகனான கறுப்பண்ணன் என்பவன் தந்திர சாமர்த்தியமாய் அம்பாலிகை யென்னும் தன் உறவினளை அவள் ஆஸ்திக்காக மணம் புரியக்கருதி, அவளை இறந்தவள் போல யாவரும் நம்பும்படியான சூழ்ச்சிசெய்து, ஏற்கனவே அவளுக்குச் சகோதரன் முறையும் அவளால் காதலிக்கப்பட்டவனு மான மனோகரன் என்பவன் மேல் குற்றஞ்சுமத்தி, குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிக்க தவறுதலாய், பல கொலை களவுகளைக் கண்டுபிடித்தும், ரஸாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவனும், மகா வீரதீர சிங்கமும், ஆபத்துகளை அணுவளவும் மதிக்காது நேர்முகமாக எதிர்த்து வெற்றிமாலை சூடுபவனுமாகிய துப்பறியும் ஆனந்த சிங்கை ஏற்படுத்துவதும், கடைசியில் ஆனந்தஸிங் உண்மையான குற்றவாளியை அதாவது கறுப்பண்ணனையே, பலவித தந்திர சாமர்த்தியங்களால் கண்டு பிடிப்பதும், அம்பாலிகையை உயிருடனேயே மீட்பதும், தவறுதலாக அம்பாலிகையால் கருதப்பட்ட மனோகரன் கடைசியில் அவளை மணம செய்துகொண்டு இன்புற்று வாழ்வதும், கறுப்பண்ணன் தான் செய்த குற்றங்களுக்காக தேசாந்தரம் போய்விடுவதும் துப்பறியும் ஆனந்தசிங் வெற்றிமாலை சூடி தான் அமிர்தம்மாள் என்னும் கன்னிகையை மணம் செய்துகொண்டு மேலும் பிரக்யாதி அடைவதும் படிக்கப் படிக்க மிகவும் அறிவை வளர்க்கும் என்பது நிச்சயம்.

**இதன் விலை அணா 12.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை அணா 8.

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

**புதிய நாவல்!** **பெருகும் ஆவல்!!**

# சற்குணவல்லி

அல்லது

## சித்தூர் இளைய ஜமீன்தாரணி.

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடி கொடு நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோடீஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொற்பின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் ஆபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகட்கும், ஆபத்துகளுக்கும உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிமதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை வாசித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

**இதன் விலை ரூபா 1—8—0.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33-வரை விலை ரூபா 1—0—0.

# கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை ரூ. 1—2—0.

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும்

ஆனந்த

# ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

**800 பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.**

பற்பல கதைகளும், நாடகக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிய சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர் பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அந்நிலைமையோர் கற்றுக்கொள்வதற்குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனைமுறை நூலாசிரியரால் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷகம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சியுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர்கள் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணி வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

ஔவையார் அருளிச்செய்த

## பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 2.

# கற்கோட்டை

**ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.**

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டியது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குல மகுட வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க் காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேடமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

**இதன் விலை ரூபா 2—0—0.**

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

**விலை ரூபா 1—8—0.**

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

சே. இராஜு செட்டியார், எம்.பி. பி.ஜ., அவர்கள் இயற்றியவை.

**புதிய நாவல்! புதிய நாவல்!!**

# சந்திரசேகரி.

(இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண அறிவும் விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் பெருமை, கேடு நினைப்போர் கெடுவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் விளக்கமாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அறிவை விருத்திசெய்யக்கூடிய நாவல் இதுவே.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை ரூ. 1.

# காதலி?

ஒரு இனிய அருமையான தமிழ் நாவல்.

இதில் நவீன நாகரிகம், காதலின் வெற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'விதியின் வலி' என்னும் பல உயரிய நீதிகள் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை, சீர்திருத்தத்தின் சீர்கேடு ஆகிய பல அரிய அறிவைப் புகட்டும் அதியற்புத விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை அணா 8.

# அன்பானந்தன்

அல்லது

அருந்தச்செல்வன் விலைமதித்த பெருஞ்செல்வம்

இந்நூலின் கதாநாயகன் பெயரே இந்நூற்கும் பெயராய் அமைந்தது. அன்பானந்தன் என்னும் பெயரால் இரண்டு உண்மைகள் அறியலாகும்; அன்பு, ஆனந்தத்தில் முடிந்து அதனோடு ஒன்றாகி விளங்கும் என்பதொன்று; மற்றொன்று இந்நூல் எந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ளதோ, எந்தப் பாஷை நமக்குத் தாய்ப்பாஷையாக உள்ளதோ, அந்தப் பாஷையின் பெருமை இப்படிப்பட்டதென்பது. தமிழ் என்னும் சொல்லே இனிமை என்று பொருள்படும். அன்பைவிட இனிமையானது வேறில்லை. இவ்வன்பும் அவ்வினிமையும் கலந்தால் ஆனந்தம் பிறந்தது தடையேயல்லவா? இந்த ஆனந்தம் தமிழ்ப்பாஷை முழுவதும் நிரம்பியிருக்கிறது என்பதைக் குறிப்பிக்கவே, தமிழ் எழுத்துக்களின் முதலெழுத்தாகிய 'அ' என்பதும், இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதும் இந்நூற் பெயர்க்கு முதலும் இறுதியுமாக அமைந்தன.

இதன் விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை ரூ. 1.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 107, சென்னை.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:


# ஆனந்தபோதினி


"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 18 | ஸ்ரீமுக வருஷ வைகாசி மீ 1உ | 1933வருஷ மேமீ 14உ | பகுதி 11

## கடவுள் வணக்கம்.

செப்பரிய சமயநெறி யெல்லாந் தந்தம்
தெய்வமே தெய்வமெனும் செயற்கையான
அப்பரிசா லருமஃதே பிடித்தால் இப்பால்
அடுத்தவர்நூல் களும்விரித்தே அநுமானாதி
ஒப்பவிரித் துரைப்பரிங்ஙன் பொய்மெய் யென்ன
ஒன்றிலையொன் றெனப்பார்ப்ப தொவ்வாதார்க்கும்
இப்பரிசாம் சமயமுமா யல்ல வாகி
யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி (1)

இயல்பொன்றும் திரியாமல் இயம மாதி
எண்குணமும் காட்டியன்பால் இன்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப்
பண்புறவும் சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதிடாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச் சென் னியில்வைத்து ராஜாங்கத்தில்
அமர்ந்ததுவை திகசைவ மழகிதந்தோ (2)

சேராமல் சிற்றினத்தைப் பிரிந்தெந்நாளும்
திருவடிப்பே ரினத்துடனே சேரவண்ணம்
ஆராக கானலைக்தேன் அரசே நீதான்
அறிந்திருந்தும் மாயையிலேன் அழுந்தவைத்தாய் (3)

சிந்தையுமென் போலச் செயலற் றடங்கிவிட்டால்
வந்ததெலா நின்செயலா வாழ்வேன்பராபரமே. (4)

## அரும்பொருள் விளக்கம்

(1) (இ-ள்.) சொல்லுதற்கரிய சமய மார்க்கங்களெல்லாம் தங்கள் தங்கள் தெய்வங்களையே தெய்வங்கள் என்று சாதியா நிற்கும். அந்தச் செய்கைக்குள்ளான அந்தச் சமயநெறியினரும் அதையேபற்றி, ஆரவாரத்தால், தமக் கடுத்தனவாகிய அச்சமய நூல்களை விரித்தும், அநுமானம் முதலிய பிரமாணங்களுக் கிணங்க விவரித்தும் பேசுவார்கள். இப்படி ஒன்று பொய் ஒன்று மெய் என்றும், ஒன்று இல்லை, ஒன்று உண்டு என்றும் நோக்குவது யாவருக்கும் ஒத்திராது. இத்தன்மை வாய்ந்த சமயங்களாகியும், அவை யல்லாதனவாகியும், எந்தச் சமயமும் தொழும்படியான இயற்கையுடையதாகி என்க.

சமயமானது மனிதர்கள் அறிவு விளக்கம் பெற்று உறுதி எய்தி இன்ப வாழ்வு அடைதற்குச் சாதனமாயுள்ளதாகலின் "செப்பரிய சமயநெறி" என்றனர். ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் தங்கள் சமயத்திலே பிரதிபாதிக்கப் படுகிற கடவுளையே முழுமுதற் கடவுளெனச் சாதித்தும், அதற்கேற்றபடி பற் பல நூல்கள் எடுத்துக் காட்டியும் பேசி முன்னுக்குவா அவர்கள் கொள்கையினைப் பொய்யென்றுவது மெய்யென்றுவது காட்ட வாக்குவல்லமையினல் இயலாதாகலின் "தந்தம் தெய்வமே தெய்வமெனும்...........ஒவ்வாதார்க்கும்" என்றனர்.

(2) எக்காலத்திலும் தன்னியற்கை கெடாமல் இயமம் முதலாகிய எட்டுக் குணங்களையும் காட்டி அன்பினுல் ஆனந்தமாகிப் பயன் அளிக்கப் பொருள்களும், பிரிவாரங்களும் ஆகி, குணத்தைப் பொருந்தவும், சௌபாந பக்ஷத்தினைக் காட்டி மயக்கமறுக்கைக் கேதுவான மந்திரமும் சிக்ஷையும், சோதிட முதலாகிய மற்ற உறுப்புநூல்களும், தொழும்படி, மௌனநிலையாகிய கிரீடத்தினைச் சோர்வறச் சிரசில் வைத்து ராஜரீகத்தில் வீற்றிருந்தது வேதசம்பந்தமாகிய சைவசமயம். இது அழகியது அன்றோ என்க.

(3) சிற்றினத்தவர்களைக் கலவாமல், அவரினின்று நீங்கி எப்போதும் தேவரீர் திருவடியை அடைந்த பேரினத்துடனே கூடாதபடி, யாரென நினைத்துக்கொண்டு நான் திரிந்தேன்! அரசனே! தேவரீர் இவ்வுண்மை அறிந்திருந்தும் யாதுக்கு மாயையிலேமூழ்க வைத்தீர் என்க.

(4) (இ-ள்,) மனமும் என் அறிவினைப்போலச் செய்கையற்று ஒடுங்கி விட்டால், நேரிட்ட தெல்லாம் நின் திருவருட் செயலாகவே பாவித்து வாழ்ந்திருப்பேன் என்க.

ஆனந்தபோதினி
ஸ்ரீமுக
௵ வைகாசி மீ 1௳

## உத்தம ஆலயங்கள்

நமது நாடு ஆன்மார்த்த நாகரிகத்தில் தலைசிறந்தது என்ற பேரும் புகழும் உலகம் முழுவதிலும் உண்டு. அந்த ஆன்மார்த்த நாகரிகச் சின்னங்களாக விளங்குவன நம் தேவாலயங்கள். இமயம் முதல் குமரிவரை—பரதகண்டம் முழுவதும் கோவில் மயமே. இவற்றிற்கு நமது முன்னோர்கள் விடுத்துச் சென்ற மானியப் பொருள்கட்கும் வருவாய்க்கும் கணக்கு வழக்கில்லை என்றே கூறவேண்டும். ஆனால் இம்மானியப்பொருள்களும் வருவாய்களும் இக்காலத்தில் விழலுக்கிறைத்த நீர்போல் வீணில் கழிந்து கொண்டிருக்கின்றன என்பது பகிரங்க ரகஸியம். நமது நாட்டில் கோவில்கள் வேண்டாம், குளங்கள் வேண்டாம், சமயம் வேண்டாம், சாஸ்திரம் வேண்டாம், மடங்கள்வேண்டாம், சாமி வேண்டாம் இவற்றையெல்லாம் அழிக்க வேண்டும் என்ற கிளர்ச்சியும் வேகமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றன என்னும் உண்மையை நாம் மறுப்பதற்கோ மறைப்பதற்கோ இல்லை. இத்தகைய கிளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஆதரவாகப் பல பத்திரிகைகளும், சங்கங்களும், மகாநாடுகளும் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகின்றன என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஒன்று மறியாத மூடப் பூச்சிகளான பாமர மக்கள் அப் பிரசாரகர்களின் பேச்சிலும் எழுத்திலும் மயங்கி விடுகின்றனர். எனவே சமயங்களின் மீதும் சாஸ்திரங்களின் மீதும் தெய்வங்களின் மீதும் அலக்ஷிய புத்தி காட்டும் கூட்டம் மேன்மேலும் திரண்டு வருகின்றது. இவற்றையெல்லாம் கண்டுங் காணுதவர்போல் நம்முடைய சமய சாஸ்திர அறிஞர்கள்-மடாதிபதிகள் வாளா உறங்கிக் கிடக்கின்றனர். இத்தகைய நிலை இனிமேலும் நீடித்துக்கொண்டே போனல் நமது இந்து

சமூகத்தின் கதி என்னவது? நேயர்களே! சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

நமது நாட்டுச் சைவ—வைஷ்ணவ தேவாலயங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அநியாயங்கட்கும் அக்கிரமங்கட்கும் எல்லை இல்லை. அன்பும் அருளும் குடிகொண்டிருந்த திருக்கோவில்களில் இப்பொழுது வன்பும் துன்பும் செறிந்து கிடக்கின்றன. தூய்மைக்கும் பக்தி சிரத்தைகட்கும் புறம்பான பல தீயொழுக்கங்கள் வெகு சகஜமாகி விட்டன. இக்காலத்தில் திருவிழாக்களெல்லாம் வெறும் குழந்தை விளையாட்டுக்களாகி விட்டன. மிகுந்த பொருட் செலவும் காலச் செலவும் செய்துகொண்டு போகும் யாத்திரைக்காரர்கள் திருவிழாக்களில் என்ன காண்கின்றனர்? கொட்டு முழக்கும் வாண வேடிக்கைகளும் தேவதாசிகளின் ஆடல் பாடல்களுந்தான் தற்காலக் கோவில் திருவிழாக்களின் திருக்காட்சிகளாக அவர்கள் காண்கின்றனர்.

இப்பொழுது தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேச உரிமைபற்றி நாடெங்கும் ஒரு கிளர்ச்சி இருந்து வருகிறது. கோவில்கள் சாமானிய அறிவு படைத்த மக்கட்கு என்று சொல்லப்படும் உண்மையை மறந்து பலர் அவ்வுரிமையை எதிர்த்து வருகின்றனர். காந்தியடிகள் கோவில்களையும் இந்து தருமத்தையும் தூய்மைப் படுத்தும் திருப்பணியில் இப்பொழுது இறங்கியிருக்கின்றார். அதற்காகத் தமது ஆருயிர் வழங்கவும் அடிகள் தயாராகி விட்டார். முன்னர் காந்தி யடிகள் தென்னாட்டுக்கு விஜயம் செய்திருந்த காலத்தில், இவ்விடத்திலுள்ள கோவில்களின் இழி நிலை கண்டு அவைகளை "விபசார விடுதிகள்" என்று வருணித்திருந்தார். இதனால் காந்தியடிகட்குக் கோவில்களில் நம்பிக்கையில்லை என்று பொருள் கொள்ளல் தவறு என்பதே நமது கருத்து. காந்தியடிகட்கு ஆலயங்களில் நம்பிக்கை இல்லையென்றால் அவர் ஆலயப் பிரவேசப் பேச்சே பேசமாட்டார் என்பது உறுதி. தற்காலக் கோவில்களின் ஊழல்களைப் பற்றிப் பலர் மகாத்மாவுக்குக் கடிதங்கள் எழுதுகிறார்கள். சிலர் கோவில்களே வேண்டாம் என்கிறார்கள். சிலர் கோவில்கள் இருக்க வேண்டியது தான், அவற்றில் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்கிறார்கள். புதிதாய்க் கோவில்கள் கட்டுவதானால் அவை எவ்வாறு நிர்மாணிக்கப்படவேண்டும் என்று அறியச் சிலர் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் காந்தியடிகள் "ஹரிஜன"ப் பத்திரிகையில் தக்க விடை தந்திருக்கிறார்கள். அதை நேயர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டுகின்றோம்.

"தற்காலம் ஹிந்துக் கோவில்கள் மூட நம்பிக்கைகளுக்கு உறைவிடங்களாயிருக்கின்றன. ராஜகோட்டை சமஸ்தானத்தில் புதிதாய்க் கோவில் நிர்மாணிப்பதற்கு ஓர் திட்டம் போடப்பட்டிருக்கி-

14/1/02



றது. ஆலயச் சீர் திருத்தம் அவசியம் என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். எல்லாக் கோவில்களையும் ஒன்றுபோல ஆக்கிவிடுவது முடியாது. வெளித் தோற்றத்தில் கவனம் செலுத்துவதைவிடத் தூய்மையிலேயே அதிக கவனம் செலுத்தவேண்டும். ஆகையால் முதலில் கவனிக்க வேண்டியது குருக்கள் விஷயம். நான் உத்தமமாகக் கருதும் குருக்கள் உண்மையில் கடவுள் தன்மையை அடையப் பாடுபடுகிறவராய் இருக்கவேண்டும். யாருக்காகப் பிரார்த்தனை நடத்துகிறாரோ அவருக்கு நண்பராகவும் வழி காட்டியாகவும் இருக்குந் தகுதி படைத்தவராக இருக்கவேண்டும். அவருடைய தேவைகள் மிகவும் குறைவாக இருக்கவேண்டும். சாஸ்திரங்களில் நல்ல பயிற்சி பெறவேண்டும். பொது மக்களின் க்ஷேமமே அவரது லக்ஷியமாக இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் எதிர்பார்ப்பது வெறும் கனவு என்று நான் எண்ணவில்லை. இத்தனை தன்மைகளும் பொருந்திய ஒருவரை நான் இளமையில் கண்டிருக்கிறேன். கோவில் கட்டுவதற்கான இடம் விசாலமானதாக இருக்கவேண்டும். அது கிராமத்தின் மத்தியில் இருக்கவேண்டியதில்லை. சுகாதாரமான இடத்திலிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் வருவதற்கு வசதியாக அவர்களுக்குச் சமீபத்தில் இருப்பது நலம். இடம் சுற்றுப்புறங்களைவிட மேடாக இருக்கவேண்டும். கோவிலைச் சுற்றியும் சிறிது தூரத்தில் ஒரு பள்ளிக்கூடம், ஒரு ஆஸ்பத்திரி, ஒரு வாசகசாலை முதலியன இருக்கவேண்டும். கோவிலின் ஆதரவில் ஓர் தருமசாலையும் வெளியூர் ஜனங்களின் சௌகரியத்திற்காக ஏற்படுத்தலாம். கோவிலின் கட்டடம் பெரிதாயிருக்க வேண்டியதில்லை. கட்டடம் ஆரம்பிப்பதற்கு முன்பே கோவிலுக்காக ஏற்பட்ட இடம் கோவிலாகவே பாவிக்கப்பட்டு உரிய கிரியைகள் நடைபெறலாம். பிரார்த்தனைகள் ஆரம்பமாகிவிடலாம். "எங்கு ஜனங்கள் ஒன்று சேர்ந்து ஹிருதயத்தினால் கடவுளின் திருநாமத்தை உச்சரிக்கின்றார்களோ அந்த இடத்தில் கடவுள் குடியிருக்கிறார். அந்த இடமே கோவிலாம் விடும்." என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது" நேயர்களே! நமது நாட்டில் உள்ள கோவில்களிலும், குருக்கள்மாரிடமும் காந்தியடிகள் எடுத்துக் காட்டிய இலக்கணம் சிறிதேனும் இருக்கிறதா என்று சிந்திக்குமாறு வேண்டுகின்றோம். தொன்றுதொட்டு இருந்துவரும் கோவில்களிலும் தற்காலம் நிர்மாணிக்கப்பட்ட-நிர்மாணிக்கப்படும் புதியகோவில்களிலும் பெரும்பாலும் வெளித் தோற்றங்களிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. தூய்மையைப் பற்றி அணுவளவும் கவலை செலுத்தப் படுவதில்லை. நம் நாட்டுக் கோவில் குருக்கள்மாரின் லக்ஷியமெல்லாம் பணத்தைத் தவிர வேறொன்றில்லை என்பது கண்கூடு. இந்தக் குருக்கள்மாரிடம் கடவுள் தன்மை அடையும்படியான முயற்சி அணுவளவும் கிடையாது. இவர்களுடைய ஒழுக்கங்களைப் பற்றியும் விரிவுரை கூறவேண்டியதில்லை. அவசர ஆத்திரமாக அரைகுறையான மந்திரங்களை உச்-

சரிப்பதும் காசு வாங்குவதுந்தான் அவர்களுடைய முக்கிய லக்ஷியமாயிருந்து வருகிறது. கடவுளுக்கென அளிக்கப்படும் அலங்கார மலர் மாலைகளையும் வாசனைத் திரவியங்களையும் விபசாரிகளுக்குக் கொடுத்துக் களிக்கும் குருக்கள்மார் நமது நாட்டில் அநேகமாய் இருந்து வருகிறார்கள். சமய வளர்ச்சி, சாஸ்திர விசாரணை, பொது ஜனத் தொண்டில் ஆர்வம் முதலியன படைத்த குருக்கள்மார் இந் நாட்டில் முயற்கொம்பென்றே கூறவேண்டும். காந்தியடிகளே "இத்தனை தன்மைகளும் பொருந்திய ஒருவரை நான் இளமையில் கண்டிருக்கிறேன்" என்று கூறும்பொழுது இப்போதைய குருக்கள்மாரைப் பற்றி நாம் பேசவும் வேண்டுமோ? நிற்க, நமது நாட்டுப் பேர்பெற்ற கோவில்களெல்லாம் பிரமாண்டமானவை; சிற்ப-சித்திர வேலைப்பாடுகள் அமைந்தவை என்பதில் ஐயம் இல்லை. ஆனால் உள்ளே நுழைந்தால் இருட்டறைகள்—வௌவால் குகைகள் என்றே கூறவேண்டும். சுகாதாரத்திற்கும் நம்முடைய கோவில்கட்கும் வெகு தூரம். அதிலும் மூலஸ்தானங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. விசேஷ காலங்களில் இருட்டும் குறுகிய இடமும் படைத்த மூலஸ்தானங்களில் பக்தகோடிகள் படும் பாட்டை ஆண்டவனே அறியவேண்டும். நெருக்கடியும், முதுகடியும், பெண்கள் மானக்கேடும் சர்வ சாதாரணக் காட்சிகள். கோவில்கள் சாமானிய மக்கட்கே தேவை என்று நாம் முன்பு குறிப்பிட்டிருக்கின்றோம். காந்தியடிகளும் தாழ்த்தப்பட்ட மக்கள் வருவதற்கு வசதியாக, அவர்களுக்குச் சமீபத்திலேயே கோவில்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றார். கோவில் வருவாய்களையும், மடங்களின் வருவாய்களையும் கல்வி வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும், வைத்திய உதவிக்கும் பயன் படுத்த வேண்டும் என்று நாம் அடிக்கடி எடுத்துக் காட்டி வந்திருக்கும் இந் நன்னோக்கத்தைக் காந்தியடிகளும் ஆதரித்திருப்பது பெரிதும் குறிப்பிடத் தக்கதாகும்.

கிறிஸ்தவ சமயம் உலகம் முழுவதிலும் வளர்ச்சிபெற்றிருப்பதற்கு அச்சமயத்தினரின் சமூகத் தொண்டே முக்கிய காரணம் என்பதை எவரே மறுக்க வல்லார்? நமது நாட்டிலுள்ள கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்கட்கும், கலாசாலைகட்கும், கல்லூரிகட்கும், ஆஸ்பத்திரிகட்கும் எல்லையுண்டோ என்று கேட்கின்றோம். கிறிஸ்தவ மிஷனரிகள் எங்கே பிறந்தனர்? எங்கே வளர்ந்தனர்? அவர்கள் இங்கே வந்து என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? என்பன போன்ற உண்மைகளை நம்முடைய சமயத் தலைவர்களும் கோவில் தர்மகர்த்தர்களும் உணரும் நாளே நமது நாட்டுக்கு விமோசனம் கிடைக்கும் நன்னாளாகும். ஆகையால் காந்தியடிகள், எடுத்துக் காட்டிய உத்தமமான கோவில்களின் இலக்கணத்தை எல்லாரும் பின்பற்ற வேண்டும் என்று விரும்புகின்றோம்.

# நேயர்கட்கு ஒரு வேண்டுகோள்.

## 19-வது ஆண்டின் முன்னறிக்கை

**நா**ளிது ஸ்ரீமுக ஆண்டு ஆடித்திங்கள் 1-ம் தேதி (16-7-33) நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகைக்கு 19-வது ஆண்டு பிறக்கப் போகிறது. "ஆனந்தபோதினி" பருவத்திற்கேற்ற வளர்ச்சி பெற்றுப் பற்பல சிறப்பியல்புகளுடன் விளங்கி வருவது நேயர்கள் அநுபவத்தில் உணர்ந்துள்ள விஷயமாகும். தமிழ் மக்கட்கு எல்லாத் துறைகளிலும் ஒரு விழிப்பையும், எழுச்சியையும் உண்டாக்கித் தக்க வழிகாட்டியாய் விளங்குவதே "ஆனந்தபோதினி"யின் முதற்பெரு நோக்கம். 19-வது ஆண்டில் இன்னும் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சங்களுடன் "ஆனந்தபோதினி" உங்கட்கு மகிழ்ச்சிப் பெருக்கை அளிக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஆகையால் "ஆனந்தபோதினி"யின்பால் அன்பு பூண்டு ஆதரித்துவரும் அன்பர்கள் எல்லாரும் 19-வது ஆண்டின் சந்தாத் தொகையை நாளிது ஸ்ரீமுகவரு ஆனிமீ 27-ம் தேதிக் (10-7-33)குள் மணியார்டர் மூலமாகவோ நேரிலோ எங்கட்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டுகின்றோம். சந்தாத் தொகையின் பொருட்டு வி. பி. அனுப்புவதால் தபால் செலவு 4-அணா மணியார்டர் கமிஷன் 2-அணா ஆக 6-அணா அதிகச் செலவும் சஞ்சிகை வந்து சேர வீண் காலதாமதமும் ஆகும். ஆகையால் எல்லா நேயர்களும் மேற் குறிப்பிட்ட தேதிக்குள் மணியார்டர் செய்து விடுவதுதான் உங்கட்கும் எங்கட்கும் லாபமும் சௌகரியமும் ஆகும். வி. பி. அனுப்புவதால் இன்னொரு சங்கடமும் உண்டு. அதாவது வி. பி. வந்தால் ஏழு நாளைக்குமேல் தபாலாபீஸில் வைத்திருக்கமாட்டார்கள். அதற்குமேல் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கள் நாள் 1-க்கு 2-அணா வீதம் ஸ்டாம்பு வாங்கி ஒட்டி விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும். அதுவும் பத்து நாட்களுக்குமேல் தபாலாபீஸில் வைத்திருக்க மாட்டார்கள். இந்தச் சங்கடங்களையெல்லாம் நோக்கும்போது அன்பர்கள் எல்லாரும் சந்தாத்தொகையை முன்பணமாக அனுப்பி ஆதரிப்பதே நலம்.

குறிப்பு:—முன் பணம் அனுப்புவோர் பழைய சந்தாதாரர்களாயிருந்தால் மணியார்டர் கூபனில் தங்களுடைய சந்தா நம்பரைக் குறிப்பிட்டு "19-வது ஆண்டுக்கு" என்று விவரம் எழுதவேண்டும். புதிய சந்தாதாரர்கள் 'புதிய ஆண்டுக்கு' என்று விவரம் எழுத வேண்டும்.

**மானேஜர்.**




# திருவாசகம் என்னும் தேன்

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி. எல்.)

இயற்கையோடியைந்த இன்பம் நுகர்ந்து, ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இறைவனது பேரின்பம் துய்த்த பெரியார், தாம்பெற்ற இன்பத்தை உலகெலாம் பெற்று உய்யுமாறு மன்னுயிரை ஆதரித்து அழைக்கும் பான்மை மிக அழகு வாய்ந்ததாகும். அன்பினால் உருகும் அடியாரது உள்ளத்தடத்தில் ஊற்றெடுத்துப் பெருகும் பரமானந்த வெள்ளத்தில் எல்லா உயிர்களும் தோய்ந்து இன்புற வேண்டுமென்று கருதும் பெரியார் மனப்பான்மை போற்றுதற்குரியதன்றோ? கல்லைப் பிசைந்து கனியாக்கும் இறைவனது பெருங் கருணையையும், ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் உலப்பிலா ஆனந்த ஒளியையும், நறை பழுத்த துறைத்தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையையும் அறிந்து மாறிலா இன்பத்தில் மகிழ்ந்த ஆன்றோர், இயற்கை இன்பம் நுகரும் இன்னுயிர்களை அழைத்து இறைவனது புகழைப் பாடுமாறு பணிக்கும் திறம் அறிந்து மகிழத்தக்கதாகும். நறுமணம் கமழும் சோலை மலர்களில் அமர்ந்து மதுவுண்டு மதுர கீதம் பாடும் வண்டுகளை நோக்கிய மணிவாசகப்பெருமான், அளவிறந்த கருணையால் அவற்றை அழைத்து இறைவனது புகழை இசைக்குமாறு பணிக்கும் பான்மை உலப்பிலா இன்பம் பயப்பதாகும். மலர் தொறும் சென்று மதுவுண்ணும் கொம்பார் சோலைக் கோலவண்டை நோக்கி,

> "தினைத்தனை யுள்ளதோர் பூவினில் தேனுண்ணாதே
> நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
> அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
> குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று மணிவாசகப்பெருமான் அருளிய திருவாசகம் செந்தேன் சொரியும் செம்மை வாய்ந்ததாகும். "தினையளவு தேன் கமழும் மலர்களில் தேனுண்டு திளைக்கும் வண்டுகாள்! மலர்களில் அமைந்த நறுந்தேன் நாவினுக்கே இனியதாகும்; எம் இறைவனது செந்தேன், எண்ணும் மனத்திற் கினியதாகும்; காணும் கண்ணுக் கினியதாகும்; பேசும் நாவுக் கினியதாகும்; இத்தகைய ஆனந்தத்தேனை இறைவன் வாரிச் சொரிகின்றான்; இவ்வாறு எங்கும் பொங்கித் ததும்பும் ஈசனது பேரானந்தத் தேனை அருந்தாது துளித் தேனமைந்த மலர்களில் சுழன்று திரிவது மடமையன்றோ? ஆதலால் எங்கும் ஓடி இடரும் வண்டுகாள்! இனி இறைவனிடம் அமைந்த அருந்தேனுண்டு அவன் புகழையே பாடுமின்" என்று மணிவாசகர் அருளிய மணிமொழிகளில் தமிழ் மணமும் சிவமணமும் ஒருங்கே கமழக் காணலாம்.



இன்னும் அடியார்க்கெளியனாய், ஏழை பங்காளனாய், உள்ளுவார் உள்ளத்தில் உதிக்கும் ஒளியாய், விளங்கும் இறைவனது இணையற்ற புகழை இசைக்குமாறு மணிவாசகர் தும்பியை நோக்கி அருளும் மொழிகள் நேசம் நிறைந்த அப்பெரியாரது நெஞ்சின் நீர்மையை நன்குணர்த்துவனவாம்.

> "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
> என்அப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
> வண்ணப்பணித் தென்னை வாவென்ற வான்கருணைச்
> சுண்ணப் பொன்நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்னும் திருவாசகம் அன்பில் விளைந்த ஆரமுதமாகும். "இறைவனது கண்ணில் நேர்ந்த புண்ணைக் கண்டு ஆற்றாது ஆராத அன்பினால் அகங்குழைந்து ஊனுக்கு ஊனே ஏற்ற மருந்தாகு மென்றுணர்ந்து தன் கண்ணையும் கொடுத்த கண்ணப்பனது எல்லையற்ற அன்பினைக்கண்ட ஈசன், கல் மனம் படைத்த என்னையும் கருணையால் ஆண்டு கொண்டானே! வண்டுகாள்! அப்பெருமானை வாழ்த்தி வணங்கிப் பாடுமின்" என்று மணிவாசகர் இறைவனது எல்லையற்ற கருணையை வியந்து புகழ்ந்தார்.

இன்னும் கல் மனம் படைத்த கடையரையும் கைவிடாது அவர் உள்ளத்தை உருக்கி உயரிய அருளால் ஆளும் இறைவனை

> "வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
> கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட
> அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
> பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று மணிவாசகர் ஆராத அன்பினால் வாயார வாழ்த்துகின்றார். ஆதியும் அந்தமு மற்ற இறைவன் அம்பலத்தில் நடமாடும் அழகினைக் கண்டு அன்னங்களும் தில்லையில் நடமாடித் திளைக்குமென்று மணிவாசகர் அருளிய மணிமொழிகள் இயற்கை இன்பம் வாய்ந்தனவாம். படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் முறையாய் நடத்தும் இறைவனது இன்னருள் பெற்றோர், அவனடியின் கீழ் அமர்ந்து நெடிது வாழ்வர் என்று மெய்யறிவு பெற்ற மேலோர் கூறுதலால் அப்பொன்னடிகளைப் புனைந்து பாடி மகிழுமாறு மணிவாசகர் வண்டுகளைப் பணிக்கின்றார். சரவாடும் வன்னெஞ்சக் கள்வனையும் கருணையினால் ஆட்கொள்ளும் இறைவன் அன்போடு உருகி அகங் குழைந்து பாடும் வண்டுகளுக்கு எளி வந்து அருள் செய்தல் திண்ணமாதலின் அப்போருளாளனது பாதம் பணிந்து பெருவாழ்வை அடையுமாறு மணிவாசகர் அருளிய பொன்னுரை தெய்வ மணம் கமழ்வதாகும்.

இவ்வாறு இறைவனது பெருங் கருணைத் திறத்தினை வியந்த பெரியார் அப்பெருமானது அன்பைத் "தாய் அன்பு" என்று தலைக்கொண்டு போற்று

கின்றார். பால் நினைந்தூட்டும் தாய்போல் பரிந்து, உன்னுவார் உள்ளத்தில் அமுத ஊற்றாய் ஆனந்தப் பால் சொரியும் ஈசனைத் தாய் என்று போற்றிய மணிவாசகரது மனப்பான்மை அமுதினும் இனியதன்றோ? இத் தன்மை வாய்ந்த இறைவன் மக்கள் சிறுமையால் செய்யும் பிழைகளைத் தன் பெருமையால் பொறுத்து அருள்செய்வன் என்றும், சிறியோர் செய்யும் சிறுபணிகளையும் பெரும் பணிகளாகக் கருதிப் பேரின்பம் அளிப்பன் என்றும் மணிவாசகன் அருளிய இன்கவி இன்பம் தேனினும் இனியதாகும்.

" நாயேனைந் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று பண்ணார்ந்த இசைபாடும் வண்டுகளை நோக்கி மணிவாசகர் கூறும் மொழிகள் மிக்க மாண்பு வாய்ந்தனவாம். அவனன்றி ஓர் அணுவும் அசையாதெனும் உண்மையை அறிந்த அடிகள் பண்ணமைந்த இசைபாடும் திறமையும் இறைவனது அருளாலேயே எய்தப் பெறுமென்று உணர்த்தும் உண்மை பொன் போல் போற்றத் தக்கதாகும். அவனருளாலே அவன் தாள் வணங்கும் அருமை பெற்ற இப் பெருந்தகையார் இன்னிசைபாடும் இயல் அமைந்த வண்டை நோக்கி, "ஏ இனிய வண்டே! ஈசனது இன்னருளால் இசைபாடும் திறம்பெற்றாய்! அவன் அருளால் பெற்ற செல்வத்தை அவன் பணியிலேயே செலுத்துவாய். இசை நலம் வாய்ந்த நீ, அவ்விசை தந்த ஈசனது இசையையே இசைத்தல் நன்றாகும்" என்று அளவிறந்த ஆர்வத்தால் அருளிப் போந்தார்.

இன்னும், 'சிற்றுயிராய சிறுவண்டே! எங்ஙனம் எல்லாம் வல்ல ஈசனது புகழைப் பாடுவதென்று ஏங்கி மயங்க வேண்டாம். ஐயா! என் ஆருயிரே! அம்பலவா என்று அழைத்து அவ்வள்ளலது மலரடியை வாழ்த்தி வணங்குக' என்று மணிவாசகர் வண்டுக்கு வழி காட்டும் முறை மிக அழகு வாய்ந்தாகும்.

"பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா என் ஆருயிரே அம்பலவா என்றவன்தன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ "

என்று அடிகள் அருளிய நயம் அறிந்து உய்தற்குரியதாகும். "ஐயோ! இறைவா! பொய்யாய செல்வத்தை மெய் என்று கருதி உன்னைப் போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே! பொருள் அல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளால் என் வாழ்நாளைப் பாழ்நாளாய்ப் போக்கினேனே! செல்வன் கழல் ஏத்தும் செல்வமே செல்வம் என்று அறியாது சால நாள் வறிதே கழித்தேனே! இத்தகைய பேதையையும் ஆட்கொண்ட உன் பெருமையை எவ்வாறு புகழ்வேன்! அருங்கருணைப் பெருங்கடலாய உன்னை ஐயா! ஆருயிரே! அம்பலவா! என்று அழைத்து, அழைத்து அகங் குழைவதல்லால் வேறு என் செய் வல்லேன்" என்று இறைவனது புகழைப்பேசி நெக்கு நெக்குரு



கிய மணிவாசகர் தாம் கண்ட உண்மையை வளமார்ந்த இசை பாடும் வண்டுகளிடம் எடுத்து உரைக்கும் நயம் மிக இனிமை வாய்ந்ததாகும்.

இத்தகைய இன்பம் நிறைந்த இறைவனைப் பேரொளிப் பிழம்பாகவும் பெருங்கருணைக் கடலாகவும் பேரழகின் கொழுந்தாகவும் பேரானந்த அமுதாகவும் அறிந்த மணிவாசகப் பெருமான் தான் பெற்ற இன்பத்தை மற்றைய சிற்றுயிர்களும் பெற்று உய்யுமாறு வண்டுகளை நோக்கியும், குயில்களை நோக்கியும், இறவாத இன்ப அன்பை எடுத்துரைக்கும் இன்மொழிகள் இம்மையும் மறுமையும் இன்பம் பயப்பனவாம். இவ்வாறு அன்பு நிறைந்து அலையெறியும் "திருவாசகம்" என்னும் தேனை மாந்தித் திளைத்தோர்கள்


" வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாறதனில்
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே "

என்று கூறுவதும் வியப்பாமோ?

# மகாத்மாவின் 21 நாள் பட்டினி

மேமீ 8-ந்தேதி முதல் காந்தியடிகள் 21-நாள் உண்ணாவி[illegible]ம் மேற்கொண்டுள்ளார். அதுபற்றி மகாத்மா வெளியிட்டிருக்கும் அறிக்கையின் சாராம்சமாவது:—தனிப்பட்ட எவருக்கும் விரோதமாக பிரஸ்தாப பட்டினி விரதமேற்கவில்லை. சிறப்பாக என்னை உத்தேசித்தே நான் இம்முடிவு செய்திருக்கிறேன். இது, ஆன்ம சுத்திக்காகச் செய்துகொள்ளும் ஆன்மார்த்த பிரார்த்தனையாகும்.

நான் உத்தேசித்துள்ள பட்டினியைப் பற்றி எவ்வித தப்பபிப்பிராயங்களுமிருக்கவேண்டாம். இறந்துவிட வேண்டுமென்ற விருப்பமெனக்கில்லை. ஹரிஜனப் பணி செய்ய நான் இருக்கவேண்டுமென்றே விரும்புகிறேன். அதற்காக உயிர் கொடுக்கவும் தயாராயிருப்பதாக நான் எண்ணியிருக்கிறேன். எனினும் அப்பணி செய்ய உயிருடனிருக்கவே விரும்புகிறேன். எனக்கும் எனது சகாக்களுக்கும் அதிக சுத்தமும், உறுதியும், தியாக புத்தியும் அவசியம் வேண்டியிருக்கிறது. பரிசுத்தமான மாசற்ற ஊழியர்கள் அதிகமாக எனக்குத் தேவையாக இருக்கிறது. திடுக்கிடச் செய்யும்படியான ஆபாசங்களும் அசுத்தங்களும் சில ஊழியர்களிடையே இருப்பது என் கவனத்திற்கு வந்திருக்கிறது. இவ்வியக்கத்திலிருந்து அத்தகைய பேர்வழிகள் விலகிவிட, எனது பட்டினி ஓர் அவசர வேண்டுகோளாக இருக்கவேண்டுமென்பது எனது விருப்பம். எனது சனாதன நண்பர்களும், மற்றும் சிலரும் பிரஸ்தாப இயக்கம், ஓர் ஆழ்ந்த அரசியல் சூழ்ச்சி என நினைக்கிறார்கள். உண்மையில் ஹரிஜன இயக்கம் சுத்த மத சம்பந்தமானதே என்று அவர்களுக்கு எனது பட்டினி அறிவுறுத்துமென விரும்பியிருக்கிறேன்.




# இராமாயணமும் கந்தபுராணமும்

(பண்டித. பு. ஸ்ரீநிவாசன்.)

இராமாயணம் ஓர் இதிகாசம்; கந்த புராணம் புராணவகைகளு ளொன்று; இராமாயணம் வைணவர்களால் போற்றப்படுவது; கந்த புராணம் சைவர்களுக்குரிய நூல். இவ்விரண்டு நூல்கள் நுவலும் சரிதைகள் அனைவர்க்கும் தெரிந்தவையே. எனினும், இராமாயணத்தைப் போல கந்தபுராணம் அவ்வளவு நன்றாய் எல்லோராலும் அறியப்பட்டதன்று. ஆகவே இவ்விரண்டின் சரிதைகளையும் சுருங்கக் கூறிப் பின்னர் இவைகளைப் பற்றிச் சில விஷயங்களை ஆராய்வோம்.

**இராமாயணம்:**—இராவணனுதி ராட்சதரால் இடும்பை யெய்திய இமையவர்கள், நாராயணனிடம் சென்று முறையிட, அவர் தசரதன் மதலையாய் தாரணியிலவதரித்தார். அவருடன் பிறந்தோர் பரதன் இலக்குவன் சத்ருக்னன் என்போர். இராமர் சீதையை மணந்த பின் சிற்றன்னையின் சூழ்ச்சியால் தம்பியுடனும் தாரத்துடனும் ஆரணியமேகினர். இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகை சீதையைக் கவரச் சென்று, மூக்கறுப்புண்டு தமையனுக்குரைப்ப, அவன் மறைந்து சென்று சீதையைக் கவர்ந்து வந்து சிறையிலிட்டனன். சீதையைத் தேடுமாறு இராமனுலேவப்பட்ட அனுமான் கடல் கடந்து சென்று, இலங்கை முழுதும் தேடி சீதையைக் கண்டு தேறுதல் கூறிப் பின் இராவணனைக்கண்டு நற்புத்திகள் புகட்ட, அவன் வெகுண்டு வாலிற்றீயிட, அனுமான் அத்தீயால் இலங்கையை அழித்து மீண்டான். இராவணன் அழிந்த நகரைப் புதிப்பித்து மந்திராலோசனை செய்கையில் கும்பகர்ணனும் விபீஷணனும் நன்மதி நவின்றனர். இராவணன் வெகுண்டான். அதற்காற்றுது விபீஷணன் இராமன் பால் அடைக்கலம் புகுந்தான். இராம ராவண யுத்தம் நிகழ்ந்தது. முடிவில் இராமர் வெற்றிபெற்று சீதையை மீட்டுக்கொண்டு அயோத்திமா நகரை நண்ணினர்.

**கந்தபுராணம்:**—சூரபதுமன் முதலிய அரக்கரின் கொடுஞ்செயலுக்காற்றுது அமரர் அலைந்தனர். சூரன் இந்திரன் மனைவியைக் கவர்ந்து செல்லக் கருதினன். அதனை யறிந்த வாசவன் மனைவியுடன் மன்னுலகெய்தி மறைந்திருந்தான். சூரன் இந்திரன் மைந்தனுகிய சயந்தனையும் மற்றும் பலரையும் சிறைப்படுத்தினன். சூரன் தங்கையாகிய அஜமுகி அயிராணியைக்கண்டு அண்



ணன் பால் விடுக்க பற்றிய வளவில் காவலாக விருந்த ஐயனுர் அவள் கரத்தைத் துணித்தனர். அவள் அண்ணனிடமேகி அழுதாள்.

விண்ணவர் குறை தீர்க்கக் கண்ணுதல் கார்த்திகேயனை யேவ அவர் வீரவாகுவைச் சூரனிடம் தூதாக அனுப்பினர். தூதன் மொழியைச் சூரன் செவிக்கொளாது சினந்து பேசவும் வீரவாகு நகரை யழித்து மீண்டான். சூரன் நகரை புதுப்பித்து மந்திராலோசனை செய்கையில் சிங்கமுக னென்னும் இளவல் பல நீதிகளைக் கூறியும் கேளாதொழிந்தான். போர் நிகழ்ந்தது. சூரன் அழிந்தான். முருகப் பெருமான் வெற்றி பெற்றுச் சயந்தன் முதலானேரைச் சிறை மீட்டுத் திரும்பினர்.

இராமாயண கந்தபுராணக் கதைகளின் சுருக்கமிதுவே. இவ் விரண்டு நூல்களையும் தனித்தனியாக வாசித்த காலத்தில் எனது உள்ளத்தில் ஓரையம் நிகழ்ந்தது. அதாவது இரண்டு கதைகளின் போக்கும் ஒரே மாதிரியாக விருந்ததால் ஒன்றைப் பார்த்து மற்றொன்று எழுதப்பட்டிருக்குமோ (என்றெண்ணக் கூடியபடி ஒற்றுமை காணப்பட்டது) என்பதேயாம். இப்படிக் கூறுவதனுல் இரண்டும் பொய்க்கதைகளென்றே ஒன்றைப் பார்த்து ஒன்று எழுதப்பட்டதென்றே நாம் கூறியதாகக் கருதாமலிருக்குமாறு வாசகர்களை வேண்டிக்கொள்ளுகின்றேம். இவ்விரண்டு நூல்களிடத்தும் பரமபக்தி பாராட்டும் அன்பர்கள் பலர் உளர் என்பதை நாம் அறிவோம். வீணுக அவற்றைப் பொய்யெனக் கூறி அவர்களின் மனத்தைப் புண்படச் செய்ய நாம் விரும்பவில்லை. ஆனுல், இரண்டு கதைகளுக்கும் ஐயப்படக் கூடியவாறு மிகுந்த ஒற்றுமை யிருக்கின்றதென்பதே நாம கண்ட விஷயமாகும். அதனை ஆனந்தன் வாசகர்களுக்கும் ஈண்டுக் காட்ட அவாவுகின்றேம். இராமாயணத்தில் தேவர்கள் முறைபாட்டிற்கிரங்கிய முகுந்தன் தாமே இராமனுக அவதரித்தார்.

கந்த புராணத்தில் சிவபெருமான் ஒரு குமரனைத் தருவோம் என்றியம்பி அவ்வாறே ஆறுமுகனை அளித்தார். இவ்விஷயம் அவ்வளவு ஒற்றுமைப் பட்டிருக்கவில்லை.

இராமாயணத்தில் இராமர் பரசுராமரைப் பங்கப்படுத்தினுர்; கந்த புராணத்தில் ஆறுமுகப் பெருமான் நான்முகனைப் பங்கப் படுத்தினுர்.

இராமாயணத்தில் இராவணன் தேவர்களைத் துன்பப் படுத்தினுன்; சீதையை யபகரித்துச் சிறைப் படுத்தினுன்; கந்த புராணத்தில் சூரபதுமனென்பவன் தேவர்களைத் துன்புறுத்தி இந்திரன் மனைவியை யபகரிக்க முயன்றுன். சயந்தனைச் சிறை படுத்தினுன்.

இராமாயணத்தில் சூர்ப்பநகை என்னும் இராவணன் தங்கை ஆரணியத்திலிருந்த சீதையைத் தூக்கிச்செல்ல முயன்றபோது இலக்குவனுல் மூக்கறுபட்டாள்; கந்த புராணத்தில் சூரன் தங்கை அஜமுகி ஆரணியத்திலிருந்த இந்திராணியைத் தூக்கிச் செல்ல முயன்றபோது அங்கு காவலாக இருந்த வீரமாகாளரால் கையரியுண்டாள். சூர்ப்பநகை புலம்பலும் அஜமுகி புலம்பலும் ஒரு தன்மைத்தாக விருத்தலை அந்நூல்களைக் காண்போர் எளிதிலுணர்வர்.

" கானமதி னிடையிருவர் காதொடு மூக்குடனரிய
மானமதாற் பாவியேன் இவண்மடியக் கடவேனோ!
தானவரைக் கருவறுத்துச் சதமகனைத் தளையிட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ! மருகாவோ!!"

என, இராவணன் தங்கை இராவணியை (இந்திரசித்தனை) யழைத்து முறை யிடுகின்றாள். அசமுகியும்

" பிறைசெய்த சிறுவக் குழவியுருங் கொண்டுழுநாள் பெயர்ந்து வானின்
முறை செய்த செங்கதிரோனுசுப மெய்தீண்டுதலும் முனிந்து பற்றி
சிறைசெய்த மருகாவோ! மருகாவோ!! ஒருவனெனைச செங்கை தீண்டிக்
குறைசெய்து போவதுவோ' வினவுகிலா யீதென்ன கொடுமைதானே."

என்று புலம்புகின்றாள்.

இந்திரசித்தன் ஸ்தானத்திலிருக்கத் தக்கவன் பானுகோபன். பிறந்த போதே மேகம்போல முழங்கி யழுத காரணத்தால் மேகநாதன் என்று பெயர் பெற்ற இராவணன் குமரன் இந்திரனை ஜெயித்து இந்திரசித் என்னப் பட்டான். அப்படியே சூரன் மதலையும் தொட்டிலிலுறங்கும் பிள்ளைப் பருவத்திலே பானுவை (சூரியனைக் கோபித்துப் பிடித்து வந்து தளை யிட்டதனால் பானுகோபன் என்னப்பட்டான். மாயாவல்லபத்திலும் போர்த்திறமையிலும் வீரத்திலும் தீரத்திலும் சௌரியத்திலும் மற்றச் செயல்களிலும் இவ்விரு வீரர்களிலும் 'ஒருவர்க் கொருவர் ஒத்திருத்தலை யன்றி இரு நூல்களையும் வாசிப்பின் நன்குணரலாம். அன்றியும், இராவணன் தம்பியாகிய கும்பகர்ணன் தூங்குதலாகிய ஒரு செயலைத் தவிர மற்றெல்லாவற்றாலும் சூரன் தம்பியாகிய சிங்கமுகனோடு ஒத்தவனாயிருக்கக் காண்கின்றோம். ஆனால் இவ்விருவர்க்கு முள்ள மற்றொரு வேறுபாடு யாதெனில் கும்பகர்ணன் ஒரு சிரமுடையோனாக வும் சிங்கமுகன் ஆயிரந் தலைகளுடையோனாகவும் இருந்தனர். அன்றியும் இவன் முகம் சிங்கத்தின் முகம்போலிருக்கும். சரீர காத்திரத்திலும் அம ராடும் தன்மையிலும் ஏற்றத் தாழ்வின்றி இருவரும் ஒரேவிதமா யிருந்தனர். இவற்றைப் பின்னர் விளக்கி ஆதாரத்தோடு காட்டுவாம். இனி,

இராமாயணத்தில் சீதையின் சிறைமீட்சியும் கந்த புராணத்தில் சயந்தன் சிறை மீட்சியுமே போர் நிகழ்தற்குக் காரணங்களாக நிற்கின்றனவென்பதும் கண்டறியத் தக்கனவாம்.

இராமாயணத்தில் இராமர் ஸ்தானத்தில் முருகப்பெருமான் நிற்கின்றா இலக்குவன் அனுமான் இவ்விருவர் ஸ்தானத்திலும் கந்தவேளின் தம்பியாகி வீரவாகு ஒருவனே நிற்கின்றான். அவ்விருவர் செய்த செயல்க ளனைத்தை யும் இவன் ஒருவனே செய்திருக்கின்றான்.

அனுமான் கடல் கடந்து இலங்கையை யெய்துகின்றான். வீரவாகுவு கடல் கடந்து சூரனிருக்கையாகிய வீரமகேந்திரஞ் செல்கின்றான்.

இராவண னிருக்கையாகிய இலங்கையும் சூரனிருப்பிடமாகிய வீ மகேந்திரபுரமும் தென்கடலி னிடையேயுள்ள தீவுகளேயாம். ஆனால் கந் புராணத்தில் இலங்கைக்கு மப்பால் வீரமகேந்திரபுர மிருப்பதாகக் கூறப்ப



டிருக்கின்றதோடு வீரவாகு கடல் தாவுகையில் இலங்கையி லிறங்கி ஆண் டிருந்த அரக்கரை யழித்துவிட்டுச் சென்றாரென்றும் கூறப்பட்டிருத்தலைக் காண்கின்றோம்.

அனுமான் கடல்தாவுங்கால் மகேந்திர மலையின் மீதேறிப் பாய்ந்தான். வீரவாகு கந்தமாதன மென்னும் பருவதத்தின் மேலேறிப் பாய்ந்தான். இரு வரும் பேருருக்கொண்டே கடலைக் கடந்து சென்றிருக்கின்றனர். இராமாய ணத்திலுள்ள 'கடல் தாவு படல' வருணனையும், கந்தபுராணத்திலுள்ள 'கடல்பாய் படல' வருணனையும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. இரண் டொரு செய்யுளையேனும் உதாரணமாகக் காட்டலாமெனின், வியாசம் விரி யுமே என்னும் அச்சம் அவ்வெண்ணத்தைத் தடுக்கின்றது. நிற்க,

அனுமான் இலங்கைக்குட் செல்லுங்கால் அந்நகர்க் காவலுக்கமைந்த இலங்கிணி என்றவள் வழி மறித்தலும் அவளை யழித்துத் தன்னை யொருவ ருங் காணாதவாறு சிற்றுருக்கொண்டு சென்று சீதையைத் தேடி யலைந்து அசோக வனத்தில் காண்கின்றான். அப்படியே, கந்த புராணத்தில் கடல் கடந்து சென்ற காளையாகிய வீரவாகு கயமுக னென்னும் காவலனால் தடுக் கப்பட்டு, அவனுட னமர்மலைந்து அழித்தபின்னர், தன்னை ஒருவருங் காணா திருக்குமாறு வேற்றுருக்கொண்டு சென்று நகர் வளங்கண்டு செல்லுங்கால் சயந்தனைக் காண்கின்றான்.

அனுமானும் வீரவாகும் தங்கள் நிலையை யெண்ணிப் பெரிதும் வருந்தி நிற்கும் நிலையில் முறையே சனகியையும் சயந்தனையும் சந்தித்துத் தேற்றுகின் றனர். சீதையின் துயரமும் சயந்தன் சோகமும் ஒரே தன்மையினவாம். இராவணனுக்கு மனைவி யாகுமாறு சீதையை அரக்கர் வருத்த, இந்திரனும் அவன் மனைவியு மிருக்குமிடத்தை யறிவிக்குமாறு சயந்தனை அரக்கர் வருத்தி னர்.

அனுமான் அன்னையைக் காணுஞ் சமயம் அரக்கர் காணாதிருக்குமாறு மாருதி இராம நாமத்தை யுச்சரிக்க அம்மந்திரத்தின் மகிமையால் சீதைக்குக் காவலா யிருந்த அரக்கியர் அறிவற்று மயங்கி வீழ்கின்றனர்.

" காண்டற் கொத்த காலமுமீதே தெறுகாவல்
தூண்டற் கொத்த சிந்தையினாரும் துயில் இல்லார்,
வேண்டத் தஞ்சா ரென்றொரு விஞ்சை வினைசெய்தான்
மாண்டற்குற்றா ராமெனவெல்லா மயர்வுற்றார்"

என்கிறது இராமாயணம். அப்படியே வீரவாகுவும் சயந்தனைச் சிறையிற் காணுதற்கு அரக்கர் தடையா யிருத்தலை நோக்கி முருகக் கடவுளைத் தியா னித்தவளவில் அரக்க ரனைவரும் அயர்வுறுகின்றனர்.

" ஓங்காரமூலப் பொருளா யுயிர்தோறு மென்றும்
நீங்காதமரும் குமரேசனை நெஞ்சி னுன்னி
ஆங்கா குவதோ ரவன்மந்திர மன்பினோதித்
தீங்கா மவுணர் செறிகாப்பகஞ் சென்றுபுக்கான்"

என்கின்றது கந்த புராணம். அன்றியும்,

தேறுதல் கூறும் முறையும் இரண்டிடத்தும் ஒத்திருத்தலும் உணரத் தக்கதாம். இராமன் பெருமைகளைக்கூறி 'கணை யொன்றினால் இலங்கையை யழித்துனை மீட்பான். அன்னாய்! அஞ்சல்' என்று அனுமான் தேற்றுகிறான். முருகன் பெருமைகூறி 'வேலாயுதம் அரக்கரை யழித்து உங்களைக் காக்கும். சயந்த! சஞ்சலம் விடுக' என்கின்றான் வீரவாகு. ஆனால், இராமன் கணையாழி நல்கியதும் சீதை சூடாமணி தந்ததும் இராமாயணத்திலுள்ள விசேஷ பாகங்கள். அன்றியும், அனுமான் சீதையைத் தேடிவந்தான். வீரவாகு சயந்தனிருக்கை தெரியுமாகலின், தேடிச் செல்லாமல் தூதாகச் சென்றான்.

இராமசாமி தூதனெனச் சொல்லிக்கொண்டு இராவணனைக் காண விழைகின்றான் வாயுவின் மைந்தன். அதற்கோர் நெறியாகச் சோலையை யழிக்கிறான். வனக் காவலரையும் பஞ்ச சேனாபதிகள் முதலாயினோரையும் அழித்தலுமன்றி அரக்கர்கோன் மைந்தன் அட்சனையும் அந்தகனுலகிற் காளாக்குகின்றான். முடிவில் இந்திரசித்தனுடைய பிரமாஸ்திரத்திற்கு மரியாதை தருவதற்காகச் சிறிதுபோழ்து கட்டுண்டு நிற்கின்றான். இந்திரசித்தனும் கட்டுண்ட காளையைத் தசகண்டன் எதிரில் விடுகின்றான். மாருதி தசகண்டனைப் பொருட்படுத்தாது அவனுக்குச் சமானமாகத் தானும் உட்கார வேண்டுமென்றெண்ணி தன் வாலைச் சிங்காதனம்போலமைத்து அவனுக்கெதிரில் அமர்கின்றான். இராமனது பெருமைகளைப் பலதிறப்படப் பேசிச் சீதையைவிட்டால் பிழைத்திருக்கலாமென அறிவுறுத்துகின்றான். இராவணன் சினந்து வாலிற் றீயிட அனுமான் அத்தீயினால் இலங்கையை யெரித்து மீள்கின்றான். அப்படியே,

வீரவாகு சயந்தனைத் தேற்றிய பின்னர் சூரனைக் காண அவன் சபைக்குச் செல்கின்றான். சிங்காதனத்தில் சிறப்புடன் வீற்றிருக்கும் சூரனுடன் பேச விரும்பும் தான் தரையில் நின்றவாறு பேசுதல் தகாது என்றெண்ணினான். அவ்வளவில் விண்ணினின்றும் ஓர் அரியணை அவைக்கண் வந்துசேர வீரவாகு அதன்மேல் தன் வீறுதோன்ற அமர்ந்து, முருகன் மொழிந்த தூது வார்த்தைகளை விளம்புகின்றான். முருகன் பெருமையை முறைபட மொழிந்து சயந்தனைத் தளை நீக்காவிடின் நமனுலகடைதல் தவறாதென நவில்கின்றான். அவ்வுரைகளைச் செவிக்கொளாத சூரன் சீற, அவன் குறிப்பறிந்த வீரர் பலர் வீரவாகுவைக் கொல்ல முயல்கின்றனர். வீரவாகு எதிர்த்தோரனைவரையும் எமனுலகோட்டி அந்நகரத்தையும் அழித்து மீள்கின்றான். அப்போரில் சூரன் மக்களிலொருவனும் மாள்கின்றான்.

கடல் தாவுதல், வாயிற் காவலரைக் கொல்லுதல், சிறைப்பட்டோரைத் தேற்றுதல், வேறு சிங்காசனத்தில் அரக்கருக்கெதிரில் அமர்தல், சிறையிடப் பட்டோரை விடும்படி கேட்டல், சேனைகளைச் சிதைத்தல், அரசர் மக்கள் சாதல், நகரழிதல் இவை யாவும் இரண்டு சரிதைகளிலும் ஒத்திருத்தல் காண்க.




# பிராட்டியார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

அனுமானுடைய ஆலோசனை பிரதமத்தில் அனுமானுக்கே இடர் தரும் என்பதையும், பிறகு தன்னை இங்கு அனுப்பிய தலைவனாகிய இராகவனுக்கே பழியைத் தருவதாகும் என்பதையும், அதற்கடுத்தாற்போல் தனது உயர்குடிப் பிறப்பும் கற்பின் பெருமையும் உலகினர் அனைவரும் காணும்படி ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தினை இச்செயல் தவிர்த்துவிடுமென்பதையும், நான்காவது தன்னை வஞ்சம் செய்து கவர்ந்த கள்வன் போர்க்களத்தில் இராமனம்பால் கொல்லப்படுவதைக் கண்களாரக் காணாமல் விடுதலையைப் பெறினும் அது ஆறுதல்தாராதென்பதையும், ஐந்தாவதாகக் கொடியவன் மீறி ஒருகால் அடாச் செயல் புரிய எண்ணுவானாயின் தனது கற்புக் கனலால் சாம்பராக்கலாம் என்னும் துணிவுண்டென்பதையும், ஆறாவதாக இதுகாறும் அவ்விதம் செய்யாமல் சிறையிலிருந்து தளர்வது வில்லாளரிற் சிறந்த தனது வேந்தன் புகழ் மாசுறூஉம் என்னும் கருத்தினாலேயே என்பதையும், ஏழாவது அவனுக்கு ஏற்பட்டுள்ள சாபத்தால் அவன் தடுக்கப்பட்டிருப்பதால் அஞ்சுவதற்கே இடமில்லையென்பதையும், தொடர்ச்சியாகக் கூறிவந்த பிராட்டியார் எட்டாவதாக வேறொரு காரணமும் தனியாக எடுத்துக் காட்டுகின்றார்.

அதாவது கற்புடை மடவார் எவரும் எக்காரணம்பற்றியும் பர புருஷ ஸ்பரிசத்தை மனதார ஏற்கமுடியாதென்பதே யாகும். அன்றியும் ஈண்டும் இளவலாகிய இலக்குவனால் வேயப்பட்ட தழைக்குடிலும் உள்ளது. உயிர் சோருங்கால் அதனைக் காக்கும் எண்ணத்தினால் வீரன் மேனியை ஒத்து விளங்கும் இப்பொய்கையின் தெண்ணீரைப் பருகி வருகின்றேன். ஐயனே இவைகளையும் நினது மெய்யுணர் கண்களால் காண்பாயாக என்று முடிவாகக் கூறி விடையளிக்கின்றனர். இவைகள் அனைத்தையும் கேட்ட அனுமான் நன்று நன்று உலக நாயகனாகிய இராமனது ஒப்பற்ற பெரியதேவியாரின் தவத்

தொழில் என்று வியந்துமகிழ்ந்து தன்னுள் எழுந்த ஐயம் அச்சம் இரண்டும் நீங்கப் பெறுகின்றான். அந்த நிலையில் தேவியாரை நோக்கித் தாயே, தாம் இன்னும் சின்னாள் இங்கு தங்குவ தொன்றினாலேயே இராவணன் காரணமாக இவ்வுலகமே இருண்டு பாழ்படும் என்று மதித்துத் துதித்தவராய் மன்னர் மன்னராகிய இராமனுக்கு நான் விண்ணப்பிக்கக்கூடிய செய்தி யுளதேல் அதனையும் அருளிச் செய்வீராக என்று அடிகளில் வீழ்ந்திறைஞ்சினான் அநுமான். அதன்பேரில் பிராட்டியார் கட்டுரை சில பகர்கின்றார்.

முதலாக நான் இன்னும் ஒருமாதமே உயிர் தாங்குவதேன். அத்தவணை தீர்ந்தால் அவரது திருவடி சாட்சியாகவே மாய்வேன்-என்பதை நீ முதலில் மனதிற்கொண்டு உணர்த்தல்வேண்டும். தனக்குத் தகுதியுள்ள மனைவியாள் அல்லள் எனினும், ஜீவகாருண்யமின்றி இளவலை மனநோகப் பேசியவள் என்றாலும், தனது வீரத்தைக் காக்கவேண்டினேன் என்பதை அறிவுறுத்துவாயாக. தவிர தமையன் ஆணைப்படி என்னைக் காத்திருந்தவராகிய இளையவருக்கே என்னை மீட்கவேண்டிய கடமையுண்டென்பதையும் இளவலை நோக்கி நினைவூட்டுக. மேலே குறிப்பிட்ட ஒருமாத எல்லைக்குள் இங்கு வந்து சேரவில்லையாயின் தான் அவ்விடத்திலேயே கங்கைக் கரையிலேயே எனக்காற்ற வேண்டிய இறுதிக் கடனைச் செய்துவிடும்படி சொல்லுக.

அயோத்தியில் உள்ள எனது ஒப்பற்ற மாமிமார்கள் மூவருக்கும் சீதை இலங்கையில் இறக்கின்றாள். தங்களை நமஸ்கரித்தாள் என்னும் வார்த்தையை இராமன் என்பால் அன்பின்றி மறந்தாராயினும் நீ மறவாது புகல்வாயாக.

என்னைக் கரம்பற்றிய தினத்தில் இந்தப் பிறவியில் சிந்தையாலும் பிறிதொரு மாதரைத் தொடுவதில்லை என எனக்கு நாயகன் கூறிய வாக்குறுதியை நீர் ஞாபகப்படுத்த வேண்டுமெனவும் விரும்புகிறேன். இப் பிறவியில் அவரோடு வாழும் பேற்றினை நான் அடையாமல் இறப்பினும் அடுத்த பிறவியிலாவது தனது திருமேனியைத் தீண்டும் வரத்தை வேண்டினேன் என்றும் விண்ணப்பிக்கவேண்டும்.

அரசாட்சி புரிவதையும் அயோத்தியில் பட்டத்து யானையின்மேல் பவனி வரும் காட்சியையும், மகுடாபிஷேக வைபவங்களையும் காணப் ணியம்புரியாத நான் வாயாற் பலவும் உரைத்துப் பயன் யாது? தன்னை நகர மாந்தர் படும் துயரத்தையும் கௌஸல்யா தேவியாரின் சோகத் பாதரின் ஏக்கத்தையும் மதித்து நாட்டை நோக்கிப் புறப்பட எண் வருமேயன்றி என்னை நாடி இங்கு எவ்வாறு வர நினைப்பார்? என் தாய் த தங்கையார் ஆகியவர்கட்கும் எனது வந்தனங்களை விளம்புதி. ஆடவர் மையை அவாவும் தோளினனாகிய எனது காதலனைத் தனிமையில் அ மல் தொடர்ந்து அயோத்தி சென்றடைவித்து மகுடாபிஷேக வைபவ விக்கும்படி உனது தலைவனாகிய கவியரசன் சுக்கிரீவனிடம் நான் விரு தாகக் கூறுவாயாக என்று இன்னன பலபடியாகப் புகல்கின்றார்.



இவைகளை ஊன்றி நோக்குவோர்க்குப் பெண்மைக் கியல்பான நிஷ்டூர வசனங்களைப் பிராட்டியாரும் வழங்குவது விளங்கும். பெண்பாலார் கற்பருங் கலனாக விருப்பினும் தங்கள் காதற்குரிய நாயகர்களிடம் கொண்டுள்ள உரிமைபற்றி அவர்களுடைய ஆழ்ந்த அன்பில் நம்பிக்கை யில்லாதவர்கள் போலப் பேசுவது இயற்கையாகும். அவ்வாறு பேசுவதனால் அன்னார் காதலன் உள்ளத்தில் பின்னும் தீவிரமாக அன்புணர்ச்சி பொங்கித் ததும்பும். இவர்களைத் திருப்தி செய்விப்பதில் தலையாய ஊக்கம் தளராது நிலைபெறும். பெண்கள் நாயகர்களிடம் தமக்கிஷ்டமான காரியங்களைச் சாதித்துக்கொள்ளக் கைக்கொள்ளும் சிறந்த ஆயுதம் பெரும்பாலும் இதுவே யென்பது மறுக்கமுடியாத உண்மை.

தசரதர் கைகையின் அரண்மனையில் துக்கத்தால் பீடிக்கப்பட்டிருந்த அம்மகிஷியைக்கண்டு பதறிக் காரணம் வினவினர். அந்நிலையில் அவ்வரசியும் இதே உபாயத்தைக் கைக்கொண்ட பான்மையைக் கவி சிரேஷ்டர், "உண்டுகொலாம் அருள் என் கண்" என்ற அடியினால் சித்திரிக்கின்றார்.

அவ்வாறே ஈண்டு பிராட்டியும் தனது ஆர்வலனின் அன்பு, வீரம், அறியாதவரல்ல. அறிந்திருப்பினும் தனது பெண்மைக் கியல்பாகிய முறையில் அறியாதவரைப்போல், திங்கள் ஒன்றில் இங்கு வாராவிடில் கங்கைக்கரையில் எனக்குச் செய்யவேண்டிய இறுதிக் கடனைச் செய்யும்படியாகவும், அறத்தின் நாயகன்பால் அருள் இன்மையால் என்னை மறக்கும் எனவும், ஈன்றதாய், பிறந்த நாடு, உடன்வந்த தம்பி இவர்களைநோக்கி அங்குசெல்ல எண்ணம் வருமன்றி இடையில்வந்த என்னைக் கவனித்து நாடிவரப் போகின்றாரா? என்றும் இராம பாணத்திலும் கூரிய சொல்லம்புகளைப் பிரயோகித்தனர். உண்மையிலேயே பிராட்டியார் இராமனது அன்பில் ஐயம்கொண்டு புகன்றனரோ? என எண்ணுவது பெருந்தவறு. பின்னர் இராவணனிடம் ஒருசமயம் பிராட்டியார் பேசுகையில்,

" எனக்குயிர் பிறிதும் ஒன்றுண் டென்றிரே எனக்குமன்றித்
தனக்குயிர் வேறில்லாதவர் "

எனத் தங்கள் நாயகி நாயக நேயத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றார். இராமனை வெல்ல உன்னால் முடியாது, என்னைக் கொன்றால் இராமன் உயிர் அங்கே பிரியும் என்றும் வேறோர் சமயம் குறிக்கின்றார். ஆகவே தனது நாயகனுக்கு உயிர்நிலை தானேயென்பதை நன்றாக உணர்ந்திருப்பது தெளிவு. அங்ஙனம் உணர்ந்திருந்தும் பின்னும் அவரது அன்பை வளர்க்கவே ஐயுற்றவர்போலப் பேசியுள்ளார். இந்த சொற்களின் மர்மத்தை நித்திய பிரமசாரியாகிய அநுமான் எவ்வண்ணம் உணரமுடியும். கேட்டதும் தாங்காத [illegible]பத்தினால் இவ்வாறு கூறுகின்றார் என வருந்தி தத்துறல் ஒழிந்திசி [illegible] என ஒருமொழி துணிந்துரைத்து தேற்று முகத்தால் பற்பல [illegible]

னங்களைப் பகர்ந்து இராமன் இவாது பிரிவினால்படும் சோகங்களை விளக்கமாக விரித்துக்கூற முற்படுகின்றார்.

'தத்துறல் ஒழிந்திலீர் தையலீர்' என்பதனால் போவிறிற் சிறந்ததாமும் சாதாரணப் பெண்பாலாரைப்போல இன்னமும் தளர்ச்சி அடைகின்றீர். இது பெண்மைக் கியல்புபோலும் என நொந்து கொள்கின்றார் என்பது பெறப்படுகின்றது. அன்னையாரின் அவலந் தீர அவர் தலைவரின் தாபத்தை,

" ஆவி யுண்டெடன்னும் ஈதுண்டுன் னாருயிர்ச்
சேவகன் திருவுருத் தீண்டத் தீதிலாப்
பூவிலை தளிரிலை பொரிந்து வெந்திலாக்
காவிலை கொடியிலை நெடி.. கானெலாம் "

" சோகம் வந்துறுவது தெளிவு தோய்ந்தன்றோ
மேகம் வந்திடித்து வந்துருமு வீழினும்
ஆகமும் புயங்களும் அழுந்த வைந்தலை
நாகம் வந்தடர்ப்பினு முணர்வு நாறுமோ "

எனவும்,

" மத்துறு தயிரென வந்து சென்றிடை
தத்துறு முயிரொடு புலன்கள் தள்ளுறும்
பித்தநின் பிரிவினிற் பிறந்த வேதனை
எத்தனையுள அவை எண்ணும் ஈட்டவோ"

எனவும் வரும் செய்யுள்களினால் விளக்கிவிட்டு இறுதியில்,

"குராவரும் குழலி இக்குறித்த நாளினே
விராவரு நெடுஞ்சிறை மீட்கிலா னெனில்
பராவரும் பழியொடு பாவம் பற்றுதற்
கிராவணன் அவன் இவன் இராமன்."

என்பதான கொடிய சபதமும் செய்கின்றார். பிராட்டியாரின் ஐயுற்றதாகக் காட்டிய சொல்லாயுதம் அனுமானையே இத்தகைய கடும் சபதம் செய்யும்படி தூண்டிய தென்னில் இராமன் விஷயத்தில் யாதாகும் என்பதை அறிஞரே உணரத்தகும். இவ்விதமான வீரசபதத்தையும் தன் நாயகனது பிரிவாற்றாமையினால் நேர்ந்த தாபத்தினையும் கேட்ட பிராட்டியார் ஓகைகொண்டு களிக்கு மனத்தினர் ஆயினார் என்று கவியரசர் பொறிக்கின்றார். இவைகளினால் பிராட்டியாரின் பெண்மை யியல்பிற் குறைபாடில்லாத பெருமை விளக்கமுறுகின்றது. தவிரவும் தனது தனிமைக்காக இரங்க வேண்டாமெனத் தன்னைத்தேற்றி பிராட்டியாரே மனம் உடைந்து இறந்து விடுவதாகவும், இராமனுக்குத் தன்னிடம் மெய்க்காதல் மறைந்து விட்டதாக எண்ணி உள்ளம் நெகிழ்ந்து கரைந்தும், தன்னை மீட்காமலும் நகரம் செல்வாரென்று மருண்டும், தன்னைத் தவிர (தானிறந்த பின்பும்) பிறிதொரு பெண்ணை மணக்கக் கூடாதென்கிற கருத்தை வெளியிட்டும், புகன்ற மொழிகளை நோக்கியே, பேரறிவுடையீராக இருந்தும் தளர்கின்றீர் இஃது பெண்மைத்தன்மை போலும் என்று குறிப்பிடலானார். தான் மரித்தாலும் தனது நாயகன் பிறிதொரு பெண்ணை விரும்புவதற்குப் பெரும்பாலும் பெண்கள் உள்ளம் உடன்படுவதில்லை என்னும் பொதுவியதியைக் கம்பநாடார் பிராட்டியார் கூற்றினாலும் வெளிப்படுத்தி யுள்ளார். ஆதலின் இக்குணம் பெண்மைக்கு ஓர் அழகு செய்யும் குணமாகுமன்றிக் குற்றமாகாதென்று கொள்ளுதல் வேண்டும். தனது மனையாள் தன்னைத் தவிர வேறு ஒரு ஆடவனுடன் அன்பாக உரையாடுவதையும் ஆண்மகனால் சகிக்க முடியாதது போலவே பெண்ணும் தனது நாயகன் வேறொரு மாதினை மனதால் மதித்தாலும் சகிப்பதில்லை. இது உயிர்களின் பொது இயற்கை. ஆனால் ஆடவன் அமைதி யிழந்து சீறிச் சோறலை மேற்கொள்ளுவ தியல்பு. பெண்ணோ மனமுடைந்து தனக்கே அறிவைத் தேடிக்கொள்ளுதல் இயற்கை. இது பெண்மைக்குரிய சகிப்புத் தன்மையினால் வேறு உருவம் பெறுகின்றது. ஈண்டும் பிராட்டியாரும் இராமன் தன்னைத் திருமண முடித்த தினத்திலேயே மனதாலும் உன்னைத் தவிர பிறிதொரு பெண்ணைத் தொடுவதில்லையென்று கூறிய ஏகாந்த கால வாக்குறுதியை மெல்ல அவரது செவிகளில் படும்படி கூறுக என்று புகன்றனரேயன்றி, அதிகார தோரணையில் அளித்த வாக்குத் தத்தத்தினை நிறைவேற்றும்படி சொல்லு எனக் கூறினாரில்லை. பெண்மை யுள்ளத்தின் பெற்றியைக் கவி ஓவியத்திற் பொறிக்கும் கம்பநாடரை எவ்வுரைகளால் புகழ முடியும்.

தவிர பெண்கள் கைமை நோன்பினை மேற்கொள்ளுவது அறமாகக் கருதப்படுவதுபோல ஆடவனும் ஏகபத்தினி விரதனாயிருந்து வால் அறம் என்பதே கம்பநாடரின் கொள்கையும் என்று தெளிதல் வேண்டும். காலக்கிரமத்தில் பெண்களின் சாந்தம் சகிக்கும் இயற்கை ஆகிய தெய்வீகப் பண்புகளினால் ஆடவர் ஒழுக்கம் இழுக்குதலும் இயல்பாயிற்று. நாயகன் வழுக்குவது கண்டு தானும் பிழைபுரிய எண்ணும் பெண்கள் உயர்குடிப் பிறந்தோரில் இரார். அவ்வாறு இருப்பர் என்னில் அவர் இப்பாரத பூமியில் பிறந்தவராக மதிக்க முடியாது. பாரத பூமியிலும் கன்மவசத்தினால் தீயொழுக்கமுடைய பெண்கள் காணப்படுகின்றனர் என்ப துண்மையே. அன்னாரை உத்தமமங்கையரென எண்ணுவோரில்லை. சரித்திரங்களெல்லாம் ஒழுக்கத்திற் சிறந்த இருபாலாரையே குறிக்கொண் டெழுந்த தென்பதை மனதிற் கொள்ளுதல் வேண்டும். அவர் தம் தூலவுடல் மறைந்தும் புகழ்உடல் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் பல இலட்சம் ஆண்டுகள் சென்றாலும் மக்கள் மனத்தைக் கவர்ந்து நிற்கின்றமை கண்கூடு.

இந்திய மக்கள் உள்ளத்தில் இத்தகைய சீரிய ஒழுக்கம் கால் சாயா

திருக்கும் வண்ணம் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுள் இன்னருள் துணைநிற்றல்வேண்டும். எந்நாட்டிலும் கட்டாய வழக்கில் கைக்கொள்ள முடியாத இவ்வரிய நிறை என்னும் குணத்தினைக் கொல்ல விழைவோரும் உளர். இவ்வித கொள்கையாளர் தத்தம் இறுதிக்காலத்திலாவது தமது செய்கைக் கிரங்காமற் போகார். தேமா மரத்தில் மாங்கனி உண்டாதல் இயல்பேபோல இந்திய மக்களிடை ஒழுக்கப்பற்று வளர்வதும் இயற்கை. இயற்கை மாற்றும் வன்மை செயற்கைக்கில்லை யென்பதை யெண்ணி ஆறுதல் பெறுதல் வேண்டும். இனி இதுபற்றிப் பிராட்டியார் கலங்காது உறுதி கொள்ளும்படியாகச் சபதம் புகன்ற தூதுவனை நோக்கி இவனுக்கு நல்விடை யளித்து, அடையாளச் செய்திகளும் புகன்று கையுறையாகத் தனது கூந்தலில் அணிந்திருந்த சூளாமணியாகிய இரத்தினத்தினையும் நல்கி விரைந்து செல்லும்படி வேண்டுகின்றார். இத்துடன் பிராட்டியார் விஷயம் இப்படலத்தில் முற்றுப்பெறுகின்றது. விடைகொண்ட தூதுவனாகிய அநுமான் இம்மட்டில் திரும்பிச் செல்ல மனம் இசையாதவராய்த் தனது ஆண்மையைக் காட்டிச் செல்லுதல் சிறப்பென மதித்தவராய்த் தனிமையில் சிந்தித்து அழகிய அடர்ந்த அப்பெரும் வனத்தை அழிக்கவும், அதன் காரணமாக அரக்கரையும் அரக்கர் தலைவனையும் காணவும், தன் வன்மைகண்டு ஒருகால் தேவியாரை விடுப்பரேல் அவரையும் மீட்டுக்கொண்டு வெற்றியுடன் செல்லலாம் என்றும் கருதுகிறார்.

இது அவரது ஆற்றலுக்கேற்ற ஒரு முறை என்னினும், பிராட்டியார் பிறரால் விடுதலை பெறுவதை வரவேற்காமையையும் அதனால் இராமன் வில்லாற்றலுக்கு இழுக்கென்னும் கொள்கையினையும் சிந்தியாதது கவனிக்கத் தக்க தொன்றாம். இது வடநூலார் மர்க்கடப் பிடி என்று வழங்கும் பழமொழியை நினைவுறச் செய்கின்றது. யுக்தாயுக்தங்களை நோக்காமல் எவருக்காக ஆட்பட்டு வினையாற்றுகின்றாரோ? அன்னார் விருப்பு வெறுப்புகளையும் கவனியாமல் தான்பிடித்த பிடியை விடாமல் சாதிக்க எண்ணி முயற்சியிற் றலைப்படுவதாகும். இதனால் தவத்தாற் பெரியோராயினும் ஞானத்தாற் சிறந்தோராயினும் அவரவர் தோன்றிய இனத்திற்குரிய குணங்குறிகள் மாற்றம் பெறுவதில்லை என்னும் உண்மையும் புலனாகின்றது. இது மக்கள் உணர்ச்சி அன்றென்பதே அறிஞர் கொள்கை. பிடிவாதக்காரர் செயலைக் காண்போர் அவரை நோக்கி குரங்குப்பிடி என்று வருணிப்பது இன்றும் வழக்கில் உளது. இவ்வாறெண்ணிய அநுமான் வனத்தை அழித்து அதன் மூலம் அரக்கர் பலரை விண்ணுலகேற்றி இராவணன் இளையமகனையும் கொன்று பின்னர் இந்திரசித்து ஏவிய பாசத்தினால் பிணிப்புண்டு இலங்கேசனது அரசவையை நண்ணியதும் தான் இராமதூதனென்பதை யுணர்த்தி சீதையை விடும்படி அறத்துறை யுரைத்ததும், அவன் வெகுண்டு வாலைச் சுட்டெரிக்கும்படி ஆணைதந்ததும், அவ்வாறே தனது வாலினில் வைக்கப்



இடப்பட்ட தீயின் உதவியால் விண்ணிற்றாவி இலங்கையை அனலூட்டுகின்றதும் கதை தொடர்புகளாகும். இவ்விவரங்களை யெல்லாம் அசோகவனத்திலிருந்த பிராட்டியார் அவ்வப்போது பிறர்கூற உணர்ந்து

“உயிர் பதைத்தாள், வேர்த்தாள் உலர்ந்தாள்
விம்மினாள் விழுந்தாள் அழுதாள் வெய்துயிர்த்தாள்.”

என்றும்,

“நீயே யுலகுக்கொரு சான்றுநிற்கே தெரியுங் கற்பதனிற்
றாயேன் என்னிற் றொழுகின்றேன்
எரியேயவனைச் சுடல் என்றாள்.”

எனவும் வரும் செய்யுள்களால் பிராட்டியார் கற்பின் சூளுக்கஞ்சி அக்கினி சுடாமல் குளிர்ந்ததாகக் கூறவந்த கவி

“மற்றினிப் பலவென் வேலைவடவனல் புவியனாய
கற்றையங்கனலி மற்றை காயத்தீ முனிவர் காக்கும்
முற்றுறு மும்மைச் சைந்தீமுப்புர முருங்கச் சுட்ட
கொற்றவன் நெற்றிக்கண்ணின் வன்னியுங் குளிர்ந்த வன்றே.”

எனவும் வலியுறுத்துகின்றார். அநுமனும், சனகன் பாவை, கற்பினால் இயன்றதென்பான் பெரியதோர் களிப்பனான் என்று குறிக்கின்றார். மேனியை விழுங்கி வெந்தீ, நிற்பினும் சுடாது நின்ற நீர்மையை எண்ணிய அநுமான் உள்ளக்களிப்பினுக்கு அளவு காண முடியுமோ? எனினும் இட்ட தீயினால் மரங்களெல்லாம்பற்றி எரிந்தும் பிராட்டியார் இருந்த சோலைமட்டில் எரிந்துவிடவில்லை என்பதை அநுமானும் பிறர் சொல்லால் அறிந்து அங்கு செல்கின்றார் மீளவும்


“பார்த்தனள் ஜாநகி பாரா
வேர்த்தெரி மேனி குளிர்ந்தான்
வார்த்தை யென் வந்தனை யென்னாப்
போர்த்தொழில் மாருதி போனான்.”

அங்ஙனம் வந்த மாருதியைக்கண்டு அவர் அபாயத்தினின்றும் மீண்டதைக் கண்களாரக்கண்டு உள்ளமும் உடலும் குளிர்ந்த பிராட்டி அரக்கர் தொடர்ந்து பற்றுவரென் றஞ்சி

“வார்த்தை யென்கொல் வந்தனை
எனவிரைந்தேகும்படி பேசாமற் செல்க.”

என ஊக்குவதாகக் கூறும் கவி அவசரத்தைக் காட்டும் குறளடிகளை [illegible] அமைக்கும் திறம் மிக மிக அழகு தருகிறது. பிராட்டியார் சொல்[illegible] அநுமானைச் சுடாத வெந்தீ பிராட்டி வதிந்த சோலையை அழிக்க [illegible]

## எங்கள் புதிய வக்கீலின் சமர்த்து.




# ஸ்ரீ ரங்கம்
# அத்தியயனோற்சவத் தத்துவம்

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை)

'பூலோக வைகுண்டம்' என்றும் 'பெரிய கோயில்' என்றும் அன்பர்களால் போற்றப்படும் திருவரங்கப் பெருநகரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள செங்கோலுடைய திருஅரங்கச் செல்வனார், ஆண்டுதோறும் கண்டருளிவரும் திருவிழாக்கள் எல்லாவற்றிலும் மார்கழி மாதத்தில் கண்டருளும் திருஅத்தியயனோற்சவமே மிக்க பிரசித்தி பெற்றதாகும். வைகுண்ட ஏகாதசிக்கு முன் பத்துநாட்களும் பின் பத்துநாட்களும் திருஅரங்கேசர் கண்டருளும் அவ்வுற்சவத்தைப்பற்றிய பொதுவான சில குறிப்புகளையும் தற்காலத்தில் அவ்வுற்சவத்தில் நிகழும் சில குறைபாடுகளையுங் குறித்து, சென்ற வருடத்துச் சித்திரைமாதத்திய "ஆனந்த"னில் சிறியேன் எழுதியிருந்தது நேயர்கட்கு நினைவிருக்கலாம். அத் திவ்யோற்சவத்தில் அரங்கனைச் சேவித்து மகிழும் பேறு, சென்ற மார்கழி மாதத்திலும் சிறியேற்கு வாய்த்தது. அதன்பயனாக அணியரங்கேசர் அடியேனது அகத்தில் தோற்றுவித்தருளிய சில கருத்துகள், "போதினி" நேயர்கட்கும் பெருமகிழ் வூட்டக்கூடியனவாக இருக்கும் என்னும் எண்ணத்தால் இக்கட்டுரை வரையத் துணிந்தேன். அரங்கநாயகன் கண்டருளும் அத்தியயனோற்சவத்தின் ஒப்புயர்வற்ற அரிய தத்துவங்களை உள்ளபடி உணர்ந்து உரைக்கக்கூடிய ஆற்றல், சிற்றறிவினனாகிய சிறியேற்குச் சிறிதும் இல்லை என்றாலும், "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"—என்னும் ஆர்வங்கொண்டே எழுதப்புகுவதால், இக்கட்டுரையிற் காணப்படும் குற்றங்குறைகளைப் பொறுத்தருளுமாறு அன்பர்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

"வைகுண்ட ஏகாதசி உற்சவத்திற்கு ஸ்ரீரங்கத்திற்குப் போய் வந்தோம்"—என்று பெருமையாகச் சொல்லிக்கொள்பவர்களில், அவ்வுற்சவத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டிய அரும்பொருகள் எவை என்பதைப் பற்றிச் சிறிதளவேனும் சிந்தித்துப் பார்ப்போர் மிக மிகச் சிலரேயாவர். பணத்தைச் செலவிட்டுக்கொண்டு ஸ்ரீரங்கயாத்திரை போய் வந்துங்கூட, தாம் அங்கு கண்டு களித்த பலவகை விநோதங்களைப்பற்றிப் பேசி மகிழுமளவில் நின்றுவிடுவோரும் அவ்விடத்தில் காண நேர்ந்த குறைபாடுகளையே எடுத்துரைத்து அத்தியயனோற்சவத்தைப் பரிகசிப்போருமே பற்பலராக இருந்து வருகின்றனர். அத்தகையோர் பணச்செலவு செய்துகொண்டு யாத்திரை சென்று வந்ததால், எத்தகைய நற்பயனும் எய்தப்பெறுதொழிவர் என்பதைச் சொல்லவேண்டுவேதில்லை. குறைபாடுகளையே ஆராய்வோர் கண்களுக்கு, உற்சவங்களின் உண்மைத் தத்துவம் புலனாவது அரிது. இறைவனிடம் இடை

தோறும் சேவை தொடங்குமுன் முதற்பாசுரத்திற்கு இணங்க அபிநயம் செய்வதும்; 'வ்யாக்யானம்' என்னும் விசேட உரை கூறுவதும் கண்களுக்கும் செவிகளுக்கும் ஒருங்கே பெருவிருந்தளிப்பனவாகும்.

அத்தியயனோற்சவம் நடைபெறும் இருபதுநாட்களிலும், நாடோறும் நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களும் இராமாநுசர் முதலிய ஆசார்யர்களும் தத்தம் சந்நிதிகளுக்கு எழுந்தருளும் வைபவத்தைக் கண்களாரக் கண்டு களிக்கவேண்டுமேயன்றி, எழுதி உணர்த்த இயலாது. நம்மாழ்வார் ஸந்நிதியில் ஆழ்வாரது திருமாலையும் 'மதுரகவி'யும் சாதிக்கப்பெறுகிற இராமாநுசர் தமது சந்நிதிக்கு எழுந்தருளியதும், எல்லா அன்பர்களுக்கும் தீர்த்தப்பிரசாத விநியோகம் உடையவர் சந்நிதியில் நடைபெறும் காட்சியைக் காணும் அன்பர்களது நெஞ்சிலே, 'எம்பெருமானார் தரிசனம்' என்று நம்பெருமாள் பெயரிட்டு நாட்டிவைத்தருளிய 'ராமாநுஜ ஸித்தாந்த'த்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆசார்ய அநுக்கிரகமும் பகவத் கிருபையும் வாய்க்கச்செய்வது, தமிழ் மறைகளாகிய திவ்யப்பிரபந்தங்களை உண்மையன்போடு பயில்வதே'—என்னும் தத்துவம் நன்கு புலனாகும்; நெற்றியில் திருமண் இட்டுக்கொண்டு விடுவதாலேயே உண்மை வைணவர்களாகிவிட முடியாது என்பதும், ஆன்ம உருக்கத்திற்கேற்ற ஆழ்வார்களது அருளிச்செயல்களை உண்மையன்போடு பயில்வதாலேயே வைணவத்தன்மையை எய்தக்கூடும் என்பதும் இனிது விளங்கும்.

பெருமாள் ஆஸ்தானத்திற்கு எழுந்தருள்வதற்கு முன்னர், தாஸநம்பிகள் பந்தம்பற்றி அசைய—அரையர்கள் 'ஆலியன் பரவும் பெருமாள்!' 'மல்லாண்ட திண்டோள் மணிவண்ணனுக்குப் பல்லாண்டுபாடிய பட்டர்பிரான் பரவும் பெருமாள்!' வண்டணியும் மகிழ்மாறன் வண் தமிழ்தன் இசைகொண்டு வரியரவிலே துயிலும் பெருமாள்!' 'நல்லார்கள் வாழும் நளிரரங்க நற்பெருபெருமாள்!' 'குளிர்சோலை சூழ்பெரியகோயில் குடிகொண்ட திருவரங்கேசப் பெருமாள்!'—என்று கொண்டாட்டங்கள் கூறி அசைய—ஸ்ரீபாதந்தாங்கிகள் தோள்களில் தாங்கி அசைய—ஸ்தானீகர்கள் திருத்தோளுக்கினியானைப் பற்றி அசைய—அர்ச்சகர் திருவடிகளைப்பற்றி அசைய—சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர்கள் மலர் இதழ்களோடு கலந்த பச்சைக்கற்பூரத்தூளை வாரி இறைக்க—திருவரங்கேசர் சாதித்தருளும் 'படியேற்றசேவை' ஒப்புயர்வற்ற அற்புத திவ்ய ஸேவையாகும்.

பகற்பத்து உற்சவத்தில், திவ்யப்ரபந்தப் பாசுரங்களில் வரும் பகவத் வைபவங்களுக்கு இணங்க 4-5-7-8-9-10 வது திருநாட்களில், முறையே 'கம்ஸ வதம்' 'ஸ்ரீரங்கராஜ அத்யயனோத்ஸவம்' 'வாமனாவதாரம்' 'அம்ருதமதனம்' 'முத்துக்குறி' 'ராவணவதம்' முதலிய வைபவங்கள் விசேஷ அபிநயங்களாக அரையர்களால் அபிநயித்துக் காட்டப்படுகின்றன. அவற்றுள், 'கம்ஸவத அபிநயம்'—'யான்' 'எனது' என்னும் செருக்கு மிகுந்து இறைவனை மறந்து தீவினைகளில் அஞ்சாது தலைப்படுவோர் முதலில் சுகமாக வாழ்வதாகத் தோன்றினாலும், முடிவில் தமது தீவினைகளுக்குத் தகுந்த தண்டனையைத் தவறாது அடைவர்' என்னும் தத்துவத்தையும்; 'ஸ்ரீரங்கராஜ உத்ஸவ அபிநயம்'—'கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து உண்மைப் பேரின்பம் ஊட்டி ஆன்மாவை உய்விக்கக்கூடிய அரங்கேசர் திருவடிகளில் அன்பு கொள்ளாமல், பொய்யின்பப் பொருள்களில் மையல்கொண்டு பலவகைத் துன்பங்களுக்கும் உட்படுவது பெரும் பேதைமையாகும்' என்னும் தத்துவத்



தையும்; 'வாமனாவதார அபிநயம்'—'இறைவனுக்கே உரிய பொருள்களைத் தன்னுடையனவாகக்கொண்டு 'எனதுடைமை' 'எனதடிமை' 'எனதுரிமை' என்றிருக்கும் அகங்காரம்கொள்வோர், பகவத்விஷயத்தில் பெரிதும் அபசாரப்படுவோராவர்' என்னும் தத்துவத்தையும்; 'அம்ருத மதன அபிநயம்'—வடமொழி மறைகளாகிய பரந்த கடலைத் தமது திருநாவாகிய மந்தரகிரியால் கடைந்தருளிய நம்மாழ்வார் மெய்யன்பர்கள் உய்யுமாறு அளித்தருளியதும் நினைக்குந்தோறும் பயிலுந்தோறும் இணையற்ற இன்பம் நுகர்விப்பதுமாகிய தெவிட்டாத தெள்ளமுதமாம். 'திருவாய்மொழி'யின் இன்சுவையை அனுபவித்தவர்கள், வேறு எச்சுவையையும் சிறிதும் மதிக்கமாட்டார்கள்' என்னும் தத்துவத்தையும்; 'முத்துக்குறி அபிநயம்'—'பகவத்வைபவங்களை நல்லாசிரியர் சொல்லக்கேட்டு உண்மை தெளிந்து இறைவனது திருவருள் ஒன்றையே எதிர்பார்த்துக் கிடப்பது மெய்யன்பர் இயல்பு' என்னும் தத்துவத்தையும்; 'ராவணவத அபிநயம்'—'ஆண்டவன் உண்மையன்போடு உள்ளம் உருகி நின்று தனது திருவடிகளில் அடைக்கலம் புகுவோரது பிழைகள் எவற்றையும் பொறுத்தருள்புரியும் பெருங்கருணைக்கடலாக இருந்தும், அவனைச் சரணடைய ஒருப்படாத அகங்காரிகள் முடிவில் அடியோடு அழிந்துபடுவர்' என்னும் தத்துவத்தையும் உண்மையன்பர்களுக்குச் செவ்விதில் விளக்கிக் காட்டுவனவாக விளங்குகின்றன.

பகற்பத்து உற்சவத்தின் கடைசித் திருநாளாகிய பத்தாந் திருநாள் மாலையில், திருவரங்கேசர் 'மோகினி அலங்காரம்' பூண்டு எழுந்தருள்கிறார். வருடந்தோறும் அன்று ஒரே ஒருநாள்மட்டும் 'நாச்சியார் திருக்கோலம்' சாத்திக்கொள்ளும் நம்பெருமாள், வேறு எந்த உற்சவத்திலும் எத்தகைய திருக்கோலமும் சாத்திக்கொள்வதில்லை. பெண்மையின் பெருமையும் தனிப்பட்ட இயற்கைப் பேரழகும் அன்புததும்பும் வசீகரத் தோற்றமும்—தாய்மையின் அருள் நிரம்பிய பார்வையும் உயிர்களின் தோற்றத்திற்கும் ஆக்கத்திற்கும் காரணமாய் நிற்கும் நீர்மையும் அன்பர்களது பிழைகளைப் பொறுத்து அருள்புரியும் தனிப்பெருங்கருணையும்—இறைமையின் இன்னருளும் சாந்தமும் சிங்காரமோகன ரங்கேசரது மோகனாவதாரத் திருக்கோலத்தை உண்மையன்போடு சேவிப்போர் உள்ளத்தில் தோன்றுவனவாகி, 'இமையவர்கட்கு அளித்த இன்னமுதத்தினும் பன்மடங்கு சிறந்த தெள்ளமுதமாகிய அருளிச்செயல்களின் சுவையை நுகரும் பேற்றைத் தென்னரங்கத்து இன்னமுதர் தமது அன்பர்கட்கு அளித்தருள்கிறார்'—என்னும் தத்துவத்தை இனிது விளங்கச் செய்யும்.

இனி, 'வைகுண்ட ஏகாதசி உற்சவ வைபவ'த்தைச் சிறிது கவனிப்போம். திருப்பாற்கடலில் ஆலிலைமேல் அறிதுயில்கொண்டிருந்த அமலனது திருவுந்திக் கமலத்திலிருந்து தோன்றிய நான்முகன் ஆணவம் கொண்டபோது, இரு அரக்கர்கள் தோன்றிப் பிரமனை வென்று செருக்கடக்கினர். பின்னர், அப்பெருமாளுடனேயே போர்தொடங்கி அவரால் கொல்லப்பட்டு வைகுந்தம் அடைந்த அவ்வரக்கர்கள், அவர் தங்களுக்கு அனுக்கிரகம் செய்ததைப் பூவுலகில் உற்சவமாகக் கொண்டாடுமாறு வரந்தரவேண்டுமென்று பெருமாளைப் பிரார்த்தித்துக்கொண்டனர். பெருமாள் மார்கழி மாதத்திய சுக்கில பட்சத்து ஏகாதசியன்று அருணோதயவேளையில், வடக்குவாசலைத் திறந்து அதன் வழியாக அவ்வரக்கர்களை அழைத்துச்சென்று வைகுந்தமாநகரில் சேர்த்

தருளினார். அவ்வாறு அரக்கர்களுக்கு அருள்செய்த வைபவத்தைக் குறிப்பிக்கவே, இப்பொழுதும் இரத்தமெனச் சிவந்த இரத்தினகவசம் அணிந்து மார்கழி சுக்கில ஏகாதசி காலையில் புறப்பட்டருளும் திருவரங்கேசர், வடக்குத் திருவாசலாகிய வைகுந்தவாசலைத் திறந்து ஆயிரக்கால் மண்டபமாகிய பரமபதத்திற்கு அன்பர்களை அழைத்துச் செல்கிறார் என்று பெரியோர் கூறுவர். (ஏகாதசியன்று தொடங்கிப் பத்துநாட்கள் நடைபெறும் இராப்பத்து உற்சவத்தில், 1-7-8 ஆகிய மூன்றுநாட்கள் தவிர ஏனைய திருநாட்களில் பெருமாள் போர்வை சாத்திக்கொண்டு புறப்படுவது, தனது சிந்தைக்கினிய அன்பன் பொய்யின்பப்பொருள்களில் மையல் கொண்டு விடாதவாறு அவனைத் தன்னோடு போர்த்துக்கொண்டு இட்டுச் செல்வதைக் குறிப்பிடுவதாகும். விரஜாநதியில் தீர்த்தமாடியவுடனே பிரகிருதி சம்பந்தம் நீங்கித் திவ்யதேகம் பெற்றுவிடுவதை உணர்த்தியருள, அரங்கேசர் வேதவிண்ணப்பம் கேட்டருளும் இடமாகிய விரஜையைத் தாண்டியவுடனே வைகுந்தவாசலில் திரைக்குள் நின்று போர்வை களையப்பெற்றுத் திருமாலை சாத்திக்கொண்டருள்கிறார்.) பெருமாளையும் பரமபதத்திற்கு வரும் அன்பர்களையும் நித்தியசூரிகள் வரவேற்க வருவதைக் குறிப்பிக்க, அன்பர்களுடன் எழுந்தருளும் அரங்கேசரை ஆழ்வார்கள் எதிர்கொள்ள எழுந்தருள்கின்றனர்.

இராப்பத்து உற்சவத்தில், கடைசிநாள் தவிர ஏனைய ஒன்பது நாட்களிலும், பெருமாள் உள்ளே எழுந்தருளும்போது வீணைகானம் கேட்டுக்கொண்டே எழுந்தருள்வது, 'முன் நல் யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவை' என்று நம்மாழ்வார் அருளியவாறு இணையற்ற இனிய கானமாகிய வீணை கானத்தால் இறைவன் எத்தகைய இன்பம் எய்துகின்றான் என்பதை இனிது புலப்படுத்துகின்றது. 'உள்ளம் உருகுமாறு தன்னைமறந்து இன்னிசை பாடித் துதித்து நிற்போர், 'சாமவேத கீத'னாகிய அரங்கநாயகனது இன்னருளை எளிதில் எய்தப்பெறுவர்'—என்னும் உண்மை, அரங்கேசர் வீணைகானம் கேட்டருளும் 'ஏகாந்த ஸேவை'யை உண்மையன்போடு ஸேவிப்போர்க்கு இனிது விளங்கும். 'பாலேய் தமிழர் இசைகாரர்'—என்று நம்மாழ்வார் அருளியவண்ணம் இன்னிசையில் பெரும் பற்றுடைய தமிழர்களுக்கு, ஒப்பற்ற இன்பம் ஊட்டும் உயிரற்ற தோழனாகவே யாழ் விளங்கிவந்திருக்கின்றது' என்னும் உண்மை, தமிழ்மறையாகிய பிரபந்தத்திலே பலவிடங்களில் விளங்கக்கிடக்கின்றது.

இராப்பத்து உற்சவத்தில் ஏழாந் திருநாளன்று திருவரங்கப் பெருமா[illegible]ரின் மங்களாசாசனமாகிய "கங்குலும் பகலும்"—என்னும் திருவாய்மொழி நேர்வதால், அன்று "திருக்கைத்தலஸேவை"—நடைபெறுகின்றது. அரங்[illegible]னிடம் கொண்ட காதல் மிகுதியால் தம்மை ஒரு நாயகியாகப் பாவித்துக் கொண்ட நம்மாழ்வார், 'தம்மைக் குறித்துப் பெருமாள் என்ன சிந்தித்திருக்கிறார்' என்பதை, (தமது மனத்தால் சிருட்டிக்கப்பெற்ற தமது) தாயார் வினவுவதுபோல, அத்திருவாய் மொழியில் நம்பெருமாள் விஷயத்தில் ஈடுபட்டிருக்கின்றார். அவ்வைபவத்தை அன்பர்கட்கு உணர்த்தியருள்வதற்காக, இன்றுமட்டும் நம்மாழ்வார் 'நாச்சியார் திருக்கோலம்' பூண்டு எழுந்தருள்கிறார். பெருமாள் மண்டபத்திற்கு எழுந்தருளியதும் போடப்படும் திரை சிறிது நேரத்திற்குப் பின்னர் நீக்கப்பட்டவுடனே, "மையல் செய்து என்னை மனம் கவர்ந்தானே!" என்று தம்மைக் கூவியழைக்கும்படி தம்மிடம் 'கடலினும்



பெரிய காதல் கொண்ட' பராங்குச நாயகிக்கு, அருட்பெருஞ்சோதியாளராகிய அணியரங்கேசர் பட்டர்களது திருக்கைத்தலங்களில் நின்று பேரொளியினிடையே அற்புத திவ்யஸேவை சாதித்தருள்கிறார்.

அனைவரையும் தான் விரும்பியவாறு ஆட்டிவைக்கும் தனிப்பெருஞ் சுதந்திரம் உடையவனாக விளங்குவதுபற்றி 'புருஷோத்தமன்' என்று போற்றப்படும் அரங்கநாயகனால் காக்கப்படும் அனைவரும் பெண்தன்மை உடையவர்களேயாவர். அதனை வலியுறுத்தவே நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் முதலிய அடியார்கள், தங்களைப் பெருமாளாகிய நாயகனது கருணையையே எதிர்பார்த்துக்கிடக்கும் நாயகியாகப் பாவித்துக்கொண்டு பெருமாள் விஷயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இறைவனது திருவருட்பெருக்கை உணர்த்தும் வைபவங்களைப்பற்றி அடிக்கடி சிந்திப்பதும்; இரவும் பகலும் தன்னையே நினைத்துத் தவித்து நிற்பதறிந்தும் விரும்பிநிற்கும் அரும்பேற்றை விரைந்தளிக்கத் திருவுள்ளங்கொள்ளாத இறைவன், தன்னைப் பலவகைப்பட்ட கொடிய சோதனைகளுக்கும் உட்படுத்தும் திருவிளையாட்டை எண்ணித் திகைப்பதும்; முதலில் மெய்யன்பர்களைப் பெரிதும் சோதிப்பதாகத் தோன்றினாலும், முடிவில் தனது இன்னருளுக்கு இலக்காக்கிக் கொண்டருளும் இறைவனது தனிப்பெருங் கருணைத்திறத்தைப் பகவத்பக்தர்களது வைபவங்கள் உணர்த்தும் உண்மை தெளியப்பெற்று அகம் தேறுவதும்; எத்தகைய சோதனைகளுக்கு உள்ளாகநேர்ந்தாலும் மன உறுதி குன்றாது, தன்னைக் காத்தருளும் பொறுப்பை இறைவனிடமே ஒப்புவித்துவிட்டு நிற்பதைக் குறிக்க, இருகரங்களையும் தலையின்மேல் கூப்பித் துதித்து நிற்பதும்; தனது சிறுமையையும் இறைவனது பெருமையையும் சிந்தித்துச் சிந்தித்துத் தன்னை உய்விக்கக்கூடிய தயாநிதி ஆண்டவனைத் தவிர வேறு எவரும் இல்லை என்பதை உணர்ந்து, தன்மேல் திருவுள்ளம் இரங்கியருளுமாறு இதயம் உருக—இருவிழிகளிலும் இன்பக்கண்ணீர் பெருகி வழியநின்று இறைவனைத் துதிப்பதும் உண்மையன்பர்க்கு உரிய இலக்கணங்களாகும். அவ்வண்ணம்,

"சிந்திக்கும்; திகைக்கும்; தேறும்; கைகூப்பும்;
திருவரங்கத்து உள்ளாய்' என்னும்;
வந்திக்கும்; ஆங்கே மழைக்கண்ணீர் மல்க
வந்திடாய்! என்றென்றே மயங்கும்"—

என்று நாயகா பாவம் கொண்ட நம்மாழ்வார் நம்பெருமாள் விஷயத்தில் ஈடுபட்ட வைபவம், பெருமான் சாதித்தருளும் திருக்கைத்தலச் சேவையை உண்மையன்போடு சேவிப்போர் உள்ளத்தில் தோன்றி அவர்களைப் பெரிதும் உருகி நிற்கச்செய்யும்.

எட்டாந் திருநாளன்று மாலையிலே, தமது அரச மிடுக்கு முழுவதும் தோன்ற குதிரைவாகனத்தில் ஆரோகணித்து எழுந்தருளும் திருவரங்கச் செல்வனார், 'வேடுபறி உற்சவம்' கண்டருள்வது அற்புதக்காட்சி ஆகும். முதலில் சிலையில் கணையைத் தொடுத்துக் குறிபார்ப்பதுபோன்றும்; பின்னர் படையும் வாளும்பற்றிய கைகள் உடையவராய்ப் பெருமானது பொருள்களைக் களவாட வருவதுபோன்றும் எழுந்தருளும் திருமங்கையாழ்வார்; முடிவில் பெருமானால் வலிந்து தடுத்தாட்கொள்ளப்பெற்று 'யான்' 'எனது' என்னும் செருக்கு நீங்கப்பெற்று ஆண்டவனுக்கு அடிமைப்பட்டதைக் குறிக்க கூப்பிய

கைகளுடன் கூடியவராய் எழுந்தருள்கிறார். அக்காட்சி, தனது ஒப்புயர்வற்ற பேராற்றலை உணர்ந்துகொள்ளப் போதிய மெய்யறிவில்லாதவர்களாய்—மாயையால் மயங்கியவர்களாய்த்—தன்னிடம் பயபக்தி யற்றவர்களாய் உழல்பவர்களிடமும் தனது திருவுள்ளத்தில் கருணை தோன்றிவிட்டால், இறைவன் அவர்களையும் 'பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும்—செயல் நன்றாகத் திருத்திப் பணிகொண்டருள்வான்' என்னும் தத்துவத்தை அன்பர்கட்கு விளக்கிக்காட்டுவதாகும்.

பத்தாம் திருநாளன்று மாலையில் புறப்பட்டருளும் நம்பெருமான், இரவில் ஆயிரக்கால் மண்டபத்தில் திருமஞ்சனம் கண்டருளி—ஏராளமான 'சாற்றுமுறைப் பிரசாதங்கள்' என்னும் பலவகைப்பட்ட பலகாரங்களும் அமுதுசெய்தருளி—நம்மாழ்வாருக்கு மோட்சம் அளித்தருளி—ஆழ்வார்களுக்கு விடை கொடுத்தருளி ஆஸ்தானம் சென்று சேர்வதற்குள், மறுநாள் மாலையாகி விடுவது வழக்கம். ஆதலின், அத்தியயனோற்சவத்தின் இருபத்தொன்றாவது நாள் காலையிலேயே, 'ஆழ்வார் மோட்ச சேவை' நடைபெறுகின்றது. திருவாபரணங்கள் முதலிய அலங்காரங்கள் எவையுமின்றி தூயவெண்கலை அணிந்து 'திருமாமணிமண்டப'த்தில் எழுந்தருளியிருக்கும் செங்கோலுடைய திருவரங்கச்செல்வனாரது செங்கமலவண்ண மென்மலர்த் திருவடிகளிலே, பன்னிரு திருமண்காப்புகளும் திருத்துழாய்மாலையும் வெண்கலையும் அணிந்து கொண்டிருக்கும் நம்மாழ்வார் இரண்டறக் கலந்தருளும் திவ்ய சேவை, உண்மையன்பர்கட்குப் பரமபத ஆனந்தானுபவத்தைப் பூவுலகிலேயே வாய்க்கச் செய்வதாகும். ஒப்புயர்வற்ற அவ்வற்புத சேவை, 'அற்றது பற்று எனில், உற்றது வீடு உயிர்'—என்று திருவாய்மொழியின் முதலிலும்; 'அவா அற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்'—என்று கடைசிப்பாசுரத்திலும் ஆழ்வார் அருளியதற்கிணங்க, 'நில்லாதவற்றை நிலையென நினைத்து அவற்றின்மேல் கொள்ளும் 'ஆசை' என்னும் பேயை அகத்தைவிட்டு அகற்றினாலன்றி, மாயையினின்றும் விடுதலை பெறுவதாகிய 'மோட்ச'த்தைப்பெற இயலாது' என்னும் அரும் பெருந் தத்துவத்தை அன்பர்கட்கு நன்கு உணர்த்துவதாகும்.

'ஆசைக்கு ஓர் அளவில்லை' என்பதும்; அப்பேயின் தூண்டுதலுக்கு இணங்கி அதைத் திருப்திப்படுத்தக் கருதி எவ்வளவு இரை அளிப்பினும், அது மேன்மேலும் இரைவேண்டித் தாண்டிக்கொண்டேயிருக்குமேயன்றி, எக்காலத்திலும் எதனாலும் திருப்திப்பட்டுவிடாது என்பதும்; அப்பேயை அகத்தினின்றும் அகற்றிவிட்டாலன்றி, இறைவனது இன்னருளை எய்த இயலாது என்பதும்; அப்பேயை உள்ளத்தினின்றும் ஓட்டிவிட்டால், இறைவனது திருவருளுக்கு இலக்காகி என்றுங் குன்றாத பேரின்பத்தைப் பெற்று உய்யலாம் என்பதும் வேதாந்தத்தின் முடிவான சீரிய தத்துவங்களாகும். அத் தத்துவங்களை அகத்தில் கொண்டு, நம்பெருமாள் திருவடிகளில் நம்மாழ்வார் கலந்தருளும் காட்சியை உண்மையன்போடு சேவிக்கும் மெய்யன்பர்கள், ஆசைப் பேய்க்கு அடிமைப்பட்டுப் பலவகைப்பட்ட அல்லல்களுக்கும் உட்பட்டு உழலாமல், திருவருளே உருவாகக்கொண்டு பூவுலக வைகுந்தமாக விளங்கும் திருவரங்கப் பெருநகரில் எழுந்தருளியுள்ள திருவரங்கச் செல்வருக்கே அடிமைப்பட்டு என்றுங் குன்றாப் பேரின்பம் எய்தப்பெற்று உய்வர் என்பது உறுதியாகும்.

# தன்னிஷ்ட சுயாதீனத் தாண்டவம்

(தெல்லிப்பிழை-கா. சின்னப்பா)

## அகவற்பா.

இவ்வுலகதனில் எவ்வித மாந்தரும்
செவ்விய சீவியம் செய்திட விரும்பின்
மனமதையடக்கும் மாண்பினைப் பெற்றுக்
கனவிலுமோர் பழி கருதிடாதிருந்து
சினமுடன் ஆசையும் சிந்தையின் தூய்மையைத்
தினமுங் கெடுத்துத் தீங்கு செய்யாமல்
நற்குணமெதுவோ நாடியே யதனைத்
துற்குணம் யாவும் தூரவே தூத்தி
எம்பெருமானின் இணையடி தொழுது
இம்பரிலென்றும் இன்புடனிருந்து
பெறற்கரும் மேலாம் பேற்றினைப் பெற்றுச்
சிறப்புடன் சீவியம் செய்திடத் தெரியா
வாலிபர் சிலர்தம் வயதிற்கேற்ற
நூல்பலகற்று நுண்ணறிவடையுமுன்
சுயாதீனத்தைச் சுகித்திடவுன்னி
நியாயம்பலவும் நினைத்தபடியே
பேசப்பழகிப் பெருமிடர்ப்படுவதித்
தேசத்தவர்கள் தேர்ந்தவொன்றே
பெரியோருடனே பெற்றோர்தம்மையும்
சிரியாதிருக்கத் தெரியாதிவர்க்கே
தங்களைப்போலச் சகல காரியமும்
இங்கறிந்தவர்கள் இல்லையென்னும்
ஆணவமுனைப்பால் அநுதினமிவர்கள்
வீணர்கள்போன்ற வினைகள் விளைத்துச்
சுயாதீனத்தின் தூய நற்பொருளை
நியாயம் பேசி நிலைநிறுத்தற்கு
வழியறியாது மயங்கியோராலும்
பழிபலசெய்து பாவிகளாகித்
தன்னிஷ்டமென்னும் தனிப்பெருங் குணத்தின்

உன்னத நிலையை உணராதிருந்து
சுகிக்கின்றோம் மேலாம் சுயாதீனமென்று
நகைக்கிடமான நடிப்புகள் செய்தல்
கல்வியறிவு கனம்மிகு மொழுக்கம்
பல்கிய பெரியோர் பலரறிந்ததுவே
புண்ணிய பூமியாய்ப் புகழுடன் பொலிந்து
எண்ணரு நலங்கள் எழிலுறவமைந்த
இந்தியா தேசத்தினருக்கு நன்மக்கள்
சிந்தையையடக்கிச் சிவத்தியானத்தால்
சுயநலங் கருதாத் தூயநற்சீலமும்
பயஞ்சிறிதறியாப் பகரும் பான்மையும்
இன்றோரன்ன எழில்பல இலங்கிடும்
பன்னரும் நிலையைப்பற்றி யிருப்பதால்
அல்லும் பகலும் அளவிடற்கரிய
தொல்லைபலதமைச் சூழ்ந்திட்டாலும்
நற்சுயாதீனம் நன்றெனவுணர்ந்து
பற்பல முயற்சியால் பகருஞ்சேவை
புரிந்துமே செப்பரும் புகழ்பெறுவதையும்
தெரிந்தும் மனத்தைத் திருத்துவ தொழிந்து
பிறர்வசையுரைத்தல் பெருமை பொறாமை
அறம் சிறிதின்மை ஆதியவற்றிற்
கடிமையாய் நன்மை அற்பமுமின்றிக்
குடிவெறிகோபம் கொலைகளவோடு
பிறர்மனையவரைப் பீடிலாதணைதல்
துறவிகள் ஞானிகள் தூய்மையைத் தூற்றல்
சந்தியில்நின்றுதூர் மந்திகள்போல
எந்தநேரமும் எவர்போனாலும்
இழிவாய்ப் பேசி எதிர்த்துலையாடி
அழிவினை நாடுதற் கார்வமிக்கோர்போல்
ஒழுக்கமதின்றி ஊரவர்நகைக்க உள்
அழுக்கைப் பெருக்கி அலைவுற்றிடுதல்
ஆதிய தீமைகள் அனைத்துமுடையராய்
நீதியைமறந்து நிற்குமெம்வாலிபர்
சிலர் தன்னிஷ்டம் சிறப்புடைத்தென்பதால்
நலமடைதற்காய் நானிலத்ததனை
விரும்புவோர்போல வெளிக்குக்காட்டி
அருங்குணம் முற்றும் அறவேயகற்றிக்



கல்வியை வெறுத்துக் கசடர்களாகிச்
செல்வமதழிக்கும் சேய்களாய்ப் பெற்றோர்
மனமதுமிகவும் வருந்திடச் செய்வது
கனவல்ல உண்மை கருதிவிடுவீரே.
நற்குணம் பலவும் நனியொருங்கமைந்து
கற்பவையனைத்தும் கருத்தினிலமைத்தபின்
சுகித்திடவிரும்பின் சுயாதீனத்தைச்
சகித்திடவேண்டும் தாங்கருங் கஷ்டமும்,
தாழ்மையில்லாதார் தலைமை வகித்து
வாழ்வதற்கேமனம் வைத்திருந்தாலும்
பெருமையை யடக்கும் பேற்றினைப் பெறும்வரை
அருமையந்நிலையை அடைவதென்றறிவீர்.
கற்றோர் மதிப்பைக் கவர்ந்திடவெமக்குச்
சற்றுமோர் யோசனை தானிருந்தாலும்
நன்றியாய் நாளும் நன்மை செய்தோரை
என்றுமே துதித்தவர் இன்புறச் செய்து
பலரும் வாழ்த்தப் பாவம் விடுத்து
நலஞ்சிறிதில்லா நாரியர் தம்மையும்
பெற்றூர்க்கடங்காப் பேதையர் தம்மையும்
பற்றுதற்கிருக்கும் பாசமதொழித்துச்
சற்சனர் சங்கம் தனிலே தங்கித்
துற்சனருறவைத் துறந்துமே வாழ்ந்தால்
நற்சுயாதீனம் நாடிடுமென்பது
கற்பனையல்ல கருதிடுவீரே.
இச்சுயாதீனம் எய்திடுவோர்கள்
எச்சாதியராய் இருப்பினும் மேலாம்
கதியையடைந்து கடவுளினருளால்
விதியின் வலியையும் விலக்குவாறிவீர்.
தேசாபிமானம் திகழ்ந்திவர் விளங்கி
மாசில்சீர் மாந்தரால் வழுத்துதம ருரியர்,
ஏனெனிலிவரில் இருக்கு நற்குணங்கள்
மானிலத்தவரின் மதிப்பினை வளர்த்து
நல்ல முன்மாதிரி நாட்டவர்க் குதவி
எல்லையிலின்பம் என்றுமே சேர்க்கும்,
சிவபெருமானின் திருவருள்பெற்றுப்
பவமது பற்றுப் பான்மையை யெய்தித்
தூய்மைசேர்ந்திடுநற் சுயாதீனத்துடனே
வாய்மையை யென்றும் வழுவவிடாது
தன்னிஷ்டமென்னும் தகைமையுந் தாங்கி
என்னகஷ்டம் எய்தினுஞ் சகித்து
உய்ந்திடவாலிபர் ஒவ்வொரு நிமிஷமும்
செய்திடின் முயற்சிகள் சித்தியெய்துவரே.

# சிறுகதை

## “காசிக்குப் போய்க் கருமந் தீர்ந்தது”

(ஆர். ராஜாராம்.)

“நமஸ்காரம்! வைத்தீஸ்வர ஐயராவாள். என்ன ஸ்நானத்திற்காக ஆற்றுக்குப் போகிறாப் போலிருக்கிறது.”

“ஆமாம். ஜகதீசா! என்ன நீ வரவரக் கெட்டுப்போகிறாப்போலிருக்கிறதே! நீ பஞ்சமர்களை யெல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு என்னமோ பிரசங்கங்களெல்லாம் செய்து கொண்டிருக்கிறாயாமே.”


ஜ:—“நான் என்ன அப்படி ஒன்றும் கெட்ட வழியில் செல்லவில்லையே. ஒடுக்கப்பட்ட சகோதரர்களை முன்னேற்றும் திருத் தொண்டல்லவோ செய்கிறேன். திக்கற்ற தீனர்கட்கு உதவி செய்ய வாய்த்திருக்கும் சந்தர்ப்பங்களை நழுவவிடலாமா?”

வை:—ஏது! பிராமண குலத்தில் பிறந்த நீ அவர்கள் அருகாமையில் செல்லலாமா? உன்னைக் கண்டால் அவர்கள் எவ்வளவு தூரத்திலிருக்கவேண்டியவர்கள். உன்னால் அவர்கள் அக்கிராஹாரத்துக்குள்கூட வரப்போக ஆரம்பிப்பார்கள் போலிருக்கிறதே.

ஜ:—ஆமாம். நீர் சொல்வது சரிதான். அவர்களும் நம்மைப்போல மனிதர்கள் தானே. நம்மைப் படைத்த கடவுள்தான் அவர்களையும் படைத்தார். அக்குலத்தில் பிறந்ததினாலேயே அவர்களுடன் பேசவும்கூடாது. பழகவும் கூடாதோ? தொட்டால் என்ன தீட்டுவந்து ஒட்டிக்கொள்ளுமா? நாம் அவர்களை ஒடுக்கிவைத்திருப்பதாலல்லவோ அவர்கள் அந்நிலைமையில் இருக்கிறார்கள்.

வை:—போதும்! போதும்! நிறுத்தடா அப்பா! அவர்களிடம் செய்யும் பிரசங்கங்கள் போதாதென்று என்னிடம் பிரசிங்கிக்க ஆரம்பித்துவிட்டாயா? இரண்டு கோணை எழுத்துக்கள் படித்துவிட்டால் இக்கதிதான். காந்தி என்னமோ சொல்லுகிறாரென்று அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஆடுகிறாப்போலிருக்கு.

ஜ:—என்னைக்கூட நீங்களென்ன ஓர் வைதிகப் பிடுங்கலென நினைத்துக் கொண்டீர்களா? யார் என்ன சொன்னபோதிலும் அதினால் என்ன கஷ்டம் வந்தபோதிலும் நான் அவர்களுக்காகத்தான் பாடுபடுவேன். ஏழை மக்களின் கஷ்ட நஷ்டங்களை நீக்கத் தொண்டு புரிதலே கடவுளுக்குச் செய்யும் திருத்தொண்டு. அவர்களுக்குத்தான் அவருடைய ஆசிர்வாதம் கிடைக்கும்.



வை:—வரவர என்ன பேச்சை வளர்த்துக் கொண்டு எனக்குப் புத்தி கூற வந்துவிட்டாயே. உன்னை என்னமோ நல்லபிள்ளையென்று நினைத்திருந்தேன். பெரியவர்களின் பேச்சைக் கேட்காத தறுதலையாயிருக்கிறாயே நீ எக்கேடாவது கெட்டுப்போ.

ஜ:—“சத்தியம் - நியாயங்கட்குத் துணை நிற்பதில் பெரியோர்கட்குக் கீழ்ப்படிய மறுப்பது ஒருக்காலும் தப்பாகாது. பீஷ்மர் தமது குருவான பரசுராமருக்குக் கீழ்ப்படிய ஓர் சமயத்தில் மறுக்கவில்லையா?”

இப்பதிலைக் கேட்டதும் வைத்தீஸ்வர ஐயருக்கு அடக்கமுடியாத அவ்வளவு கோபம் வந்துவிட்டது. தனது கோபம் ஜகதீசனிடத்தில் பலிக்காதென்றறிந்துகொண்டு அவ்விடத்தைவிட்டு ஆற்றிற்குச் சென்றார். ஜகதீசன் யார் வருகையையோ எதிர்பார்த்துக்கொண்டே அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்தான். “சே! நமது நாட்டின் நிலைமைதான் என்னே! வறுமையும் அறியாமையும் நமது நாட்டில் குடிகொண்டிருக்கின்றன. நமது சமூகத்தைப் பொருளற்ற மூடப் பழக்க வழக்கங்கள் ஒரு பக்கம் மென்று தின்றுகொண்டு வருகின்றன. இன்னொரு பக்கம் சாதி சமயப் பேய்கள் தின்றுகொண்டு வருகின்றன. இந்தியா முழுமையும் பரவியிருந்த ஹிந்து சமூகம் எங்கே? இப்போது அதின் நிலைமை என்ன? நமது சமூகம் ஒற்றுமையிலும் வலிமையிலும் சிறந்து விளங்கினாலன்றி, நமது நாடு மற்ற நாடுகளைப்போல் தலை தூக்கி நிற்கமுடியாது. எடுத்ததற்கெல்லாம் நமது நாட்டில் மதம் போச்சு என்ற கூக்குரலே பெரிதாகயிருக்கிறது. மதத்தின் பெயரால் எவ்வளவு அக்கிரமங்கள் நடந்துவருகின்றன” என்று ஜகதீசன் அவ்விடம் நின்றுகொண்டிருந்தபோது யோசிக்கலானான்.

* * *

சென்னையில் திவான்பகதூர் துரைசாமி ஐயர் என்னும் பிரக்யாதிபெற்ற ஓர் பெரிய வக்கீல் இருந்தார். இவர் வக்கீல் தொழிலில் அதிக கெட்டிக்காரரென்று எல்லோருக்கும் தெரியும். இவரிடம் எப்போதும் கட்சிக்காரர்கள் வந்து காத்துக்கொண்டே இருப்பார்கள். வக்கீல் தொழிலில் இவருக்கு ஏராளமான வருமானம் உண்டு. இவர் ஜாதி வித்தியாசத்தை வெறுப்பவர். ஏழைகளுக்கு உதவி செய்வதிலேயே அதிகப் பற்றுடையவர். தமது

ஆயுள் முழுவதும் ஏழை மக்களை முன்னேற்ற அர்ப்பணம் செய்த ஏழை பங்காளரான காந்தியடிகளைப் பின்பற்றி நடப்பதே அவரது நோக்கம்.

நமது ஜகதீசன் திவான்பகதூர் துரைசாமி ஐயருடைய மகன் ஜகதீசன் சென்னை சட்ட கலாசாலையில் வாசித்து வந்தான். இவன் தன்னுடைய பீ. ஏ. பரீட்சையில் இவ்விராஜதானியில் முதலில் தேரியவன். அதிக மார்க்குகள் வாங்கியிருந்தபடியால் சென்னை யுனிவர்சிடியாரால் தங்க மெடல்கள் ஜகதீசனுக்குப் பரிசளிக்கப்பட்டன. தகப்பனாரைப்போலவே குமாரனும் தர்ம சிந்தையுடையவன். நாம் இவ்வளவு வாசித்துவிட்டோமே என்று கர்வங்கொள்ளும் சிலரைப்போலில்லாமல், ஏழைகளாயிருந்தாலும் சரி, பணக்காரராயிருந்தாலும் சரி, கற்றவனா யிருந்தாலும் சரி, கல்லாதவனா யிருந்தாலும் சரி எல்லோரிடத்திலும் அதிகத் தாழ்மையுடனும் அன்புடனும் பேசுவது வழக்கம். சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்னும் பரந்த நோக்கமுடையவன்.

ஜகதீசன் தனது விடுமுறை நாட்களுக்காக மீனாட்சிபுரம் சென்றிருந்தான். மீனாட்சிபுரம் சென்னைக்கு நாற்பதாவது மைலிலுள்ள கிராமம். அக்கிராமத்தில் துரைசாமி ஐயருடைய மூதாதையர்களிருந்து வந்தனர். அவ்வூரில் பேர்பாதி நிலங்களுக்கு மேல் துரைசாமி ஐயருக்குச் சொந்தமானவை. துரைசாமி ஐயருடைய தகப்பனாருக்குப் பட்டினவாசம் பிடிக்காமையாலும் கிராம வாழ்க்கையின் பேரில் பிரிய மிருந்தமையாலும் மீனாட்சிபுரம் சென்று அந்நிலங்களை யெல்லாம் மேற்பார்வை பார்த்துக்கொண்டு அங்கேயே வாசம் செய்து வந்தார். நமது ஜகதீசனும் தனது பாட்டனாரிருக்கும் மீனாட்சிபுரத்திற்குக் கிராம சீர்திருத்த வேலையைச் செய்யும் நோக்கத்துடன் விடுமுறை நாட்களுக்காக வந்திருந்தான்.

ஜகதீசன் மீனாட்சிபுரத்திற்கு வந்து கிராம சீர்திருத்த வேலை செய்ய ஆரம்பித்த சில நாட்களுக்கெல்லாம் தான் ஜகதீசனின் பேரில் வைத்தீஸ்வர ஐயர் கோபித்துக்கொண்டது. வைத்தீஸ்வர ஐயர் மீனாட்சிபுரத்தைச் சேர்ந்தவர். இவருக்கு சைவ சமயத்தில் அதிக பற்றுண்டு. சைவ மதம்தான் எல்லா மதத்தையும்விடச் சிறந்த மதம் என்னும் நோக்கமுடையவர். மற்ற எல்லா மதஸ்தர்களையும் விட வைஷ்ணவ மதத்தைக் கண்டால்தான் கொஞ்சமும் பிடிக்காது. அவர் எதிரில் யாராவது ஒருவர் நாமத்தைத் தரித்துக்கொண்டு வந்துவிட்டால் சிவ! சிவ! என்று கூறிக்கொண்டே கண்களை மூடிக்கொள்வார். வைஷ்ணவ நாமங்கள் காதில் விழாதபடி பார்த்துக்கொள்வார்.

ஓர் நாள் வைத்தீஸ்வா ஐயர் ஸ்நானம் செய்வதற்காக ஆற்றுக்குச் சென்றார். இவர் எப்போதும் வழக்கமாக ஸ்நானம் செய்யும் துறைக்குச் சென்றார். அவ்விடத்தில் ஓர் வைஷ்ணவர் ஸ்நானம் செய்வதைக் கண்டதால் அங்கு ஸ்நானம் செய்யப் பிடிக்கவில்லை. ஏதோ அருவருப்பான ஒன்றைக் கண்டதுபோல் திரும்பிச் சென்றார். தாம் ஸ்நானம் செய்யும் வழக்கமான துறையை விடுத்து அவ்வைஷ்ணவர் கண்ணுக்குத் தெரியாதிருக்கும்படியான வேறு துறைக்குச் சென்று சிவ! சிவ! என்று கூறிக்கொண்டே ஸ்நானம் செய்தார்.

அவ்வைஷ்ணவரும் இவரைப்போலவே அதிக வைதீகர். அவர் கழுத்தில் ஏராளமான துளசிமாலைகளிருந்தன. அவ்வைஷ்ணவர் மூக்கைப் பிடித்



துக்கொண்டு நீரில் முழுகிக்கொண்டிருக்கும்போது அவர் கழுத்திலிருந்த துளசி மாலைகளில் ஒன்று எப்படியோ அவருக்குத் தெரியாமல் கழன்று தண்ணீரில் அடித்துக்கொண்டு போய்விட்டது. வைத்தீஸ்வா ஐயர் வைஷ்ணவர் ஸ்நானம் செய்துகொண்டிருந்த துறைக்குக் கீழண்டைத் துறையில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தபடியால் இவர் குளித்துக்கொண்டிருந்த அந்த



விடத்திற்குத் துளசி மாலை அடித்துக் கொண்டுவரப் பட்டது. துளசி மாலை இவருக்குச் சரியாக மிதந்துகொண்டு வந்த சமயமும் இவர் தண்ணீரிலிருந்து தலையைத் தூக்கிய சமயமும் ஒன்றாயிருந்தபடியால் அவர் கழுத்தில் இத்துளசி மாலை விழுந்துவிட்டது. வைத்தீஸ்வா ஐயர் தம் ஜபதபங்களை யெல்லாம் முடித்த பிறகு தம் கழுத்தில் உருத்திராட்ச மாலைகளுடன் இன்னொரு மாலை யிருப்பதைக் கண்டார். அதுவும் அது துளசிமாலை யென்றறிந்ததே அவருக்கு அதிகக் கோபம் வந்தது. வைஷ்ணவர் முகத்திலே முழிக்காத அவ்வளவு வைராக்ய சைவருடைய கழுத்தில் துளசி மாலை யிருக்குமானால் அவருக்கு எப்படித்தானிருந்திருக்கும். அதை அதிக கோபத்துடன் ஆற்றில் வீசி எறிந்தார். அது கழுத்திலிருந்த பாவம் தொலைவதற்காக மறுபடியும் அனேக தடவை ஸ்நானம் செய்தார். என்ன செய்தும் அவர் மனம் திருப்தியடையவில்லை. வீட்டிற்குச் சென்று அதற்குப் பிராயச்சித்தம் என்னவென்றறிய ஆகமங்களையும் வேதங்களையும் சைவ நூல்களையும் திருப்பித் திருப்பிப் பார்த்தார். என்ன திருப்பியும் அவர் மனம் திருப்தியடைய ஒன்றும் அகப்படவில்லை. கடைசியில் துளசிமாலை அணிந்தபாபம் தொலைவதற்காகக் காசிக்குச் சென்று கங்கையில் ஸ்நானம் செய்வதாகத் தீர்மானித்தார். மறுநாளே தாமதம் செய்யாமல் காசிக்குப் பிரயாணமானார்.

காசிக்குச் சென்ற வைத்தீஸ்வா ஐயர் கங்கையில் ஸ்நானம் செய்வதற்காக கங்கைக் கரையோரம் சென்றார். அங்கு வைஷ்ணவர்களும் சைவர்களும் கலந்தாற்போல ஸ்நானம் செய்துகொண்டிருந்தார்கள். வைஷ்ணவரைக் கண்டால்தான் இவருக்குக் காததூரமாயிற்றே. இவருக்கு அங்கு ஸ்நானம் செய்யப் பிடிக்கவில்லை. கடைசியாக அதிகக் கஷ்டப்பட்டுத் தேடியதின் பேரில் இவருக்கு ஜன நடமாட்டமில்லாத தனியிடம் கிடைத்தது. அங்கு அவர் மார்பு அளவு ஆழத்திற்குச் சென்று தாம் வந்த கோரிக்கையை முடித்துக் கொண்டிருந்தார்.

நமது வைத்தீஸ்வா ஐயர் ஸ்நானம் செய்துகொண்டிருந்த விடத்திற்குப் பக்கத்தில் ஜனங்கள் கூடியிருந்தனர். அவர்களில் ஒருவர் கையில் ஓர் மண் பாண்டம் இருந்தது. வைத்தீஸ்வா ஐயர் அதிக ஆழத்திலிறங்கி ஸ்நானம் செய்துகொண்டிருந்தமையால் அவரை அவர்கள் கவனிக்கவில்லை. அங்குக் கூடியிருந்த ஜனங்களில் ஏதோ கூறிக்கொண்டே அம்மண்பாண்டத்தைக்

கையிலேந்திக்கொண்டு தண்ணீரிலிறங்கிக் கொஞ்ச தூரம் நடந்து வந்தான். கொஞ்சதூரம் தண்ணீரில் வந்தபிறகு அம்மண் பாண்டத்தை வீசி நீரிலெறிந்தான். இவன் வீசி எறியும்போது வைத்தீஸ்வர ஐயர் ஜலத்திற்குள் மூழ்கிக்கொண்டு ஏதோ மந்திரங்களை ஜபித்துக் கொண்டிருந்தார். இவர்மேல் சல சல வென்று விழவும் அவர் அது என்ன என்று எடுத்துப் பார்த்தார். அதைப் பார்த்ததும் அவர் மனம் படாதபாடு பட்டது. அவர்மேல் விழுந்தது எலும்புகளென்றறிந்த அவருக்கு அதிக வருத்தமுண்டாய் விட்டது. “ஐயோ! ஈஸ்வரா! நான் கழுத்தில் துளசிமாலை விழுந்த பாபத்திற்காகக் கங்கைக்கு வந்தால் இங்கு எலும்புகளெல்லாம் விழுகின்றனவே. ஐயோ! நான் இதற்கு எங்கு சென்று அடித்துக்கொள்வ”தென்று வருத்தப்பட்டுக்கொண்டே தலையைத் தூக்கிப் பார்த்தார்.

தலையைத் தூக்கிப் பார்த்ததும் கரையில் ஜனங்கள் கூட்டமாயிருப்பதைக்காண அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. வைதீஸ்வர ஐயர் தலையை தண்ணீரினின்றும் வெளியே தூக்கினதுதான் தாமதம்! கரையிலிருந்தவர்களில் சிலர் ஓடிவந்து அவரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கரைக்கு இட்டுக்கொண்டு போனார். திடீரென்று இவரை வந்து ஆளுக்கொருபக்கமாகப் பிடித்துக்கொள்ளவும் அவர் திகைத்துப்போய் அவர்களுடன் ஒன்றும் சொல்லாமல் சென்றார். கரையிலிருந்தவர்களில் சிலர் அவரை என்னமோவெல்லாம் கேட்க ஆரம்பித்தார்கள்.



“ஐயோ! அப்பா! எங்களையெல்லாம் விட்டுப் பிரிய உமக்கு மனம் வந்ததா?”

“மாமா! நீங்களென்ன இப்படி திடீரென்று இறந்து விட்டீர்களே?”

“அண்ணா! அண்ணா!! நீங்களென்ன வாய்திறக்காம லிருக்கின்றீர்களே”

“பெரியப்பா! நீ போய் விட்டபிறகு பெரியம்மா அழுதுகொண்டேயிருக்கிறார்களே. வாருங்கள் வீட்டிற்குப் போகலாம்.”

இவ்வாறு வைத்தீஸ்வர ஐயரை ஆளுக்கொரு பக்கமாகக் கேட்டார்கள். மற்றவர்களெல்லாம் அவரைச் சுற்றிக்கொண்டு ஆவென்று பார்த்தார்கள். வைத்தீஸ்வர ஐயரை விடாமல் வீட்டிற்கு அழைத்துப் போனார்கள். வீட்டில் தலைவிரி கோலமாக அழுதுகொண்டிருந்தவள் உள்ளிருந்து ஓடிவந்து வைத்தீஸ்வர ஐயரை சேர்த்துக் கட்டிக்கொண்டு “என்னையும் இப்படி விட்டுப் போகலாமா? என்னையும் உங்களுடன் அழைத்துப் போவதுதானே” என்று பிரலாபிக்க ஆரம்பித்தான். அவளுடைய கண்ணீரெல்லாம் இவர் முகத்தில் விழ ஆரம்பித்தன. அவருக்குச் சொல்லொணாத அருவருப்பாயிருந்தது.



வைத்தீஸ்வர ஐயருக்கு அவர்கள் நடுவிலிருப்பது கொடிய நரகத்திலிருப்பது போன்றிருந்தது.


இவ்வாறு வைத்தீஸ்வர ஐயர் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்த போது அவ்வழியே அவர்களின் புரோகிதர் சென்றார். அநேக ஜனங்களின் நடுவில் ஓர் பிராம்மணன் அகப்பட்டுக்கொண்டு விழித்துக்கொண்டிருப்பதைக் கண்ட அப்புரோகிதர் அவர்களின் அருகே சென்று சங்கதி விசாரிக்க ஆரம்பித்தார். அவ்வூரில் ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தலைவனான பொன்னன் என்பவனிறந்துவிட்டான். அவனுடைய எலும்புகளைக் கங்கையில்விட்டால் அவன் மறுபிறப்பில் பிராமணனாய்ப் பிறக்கலாமென்று அப் புரோகிதர் கூறியிருந்தார். முனியனுடைய எலும்புகளைக் கங்கையில் போட்டதும் அந்தவிடத்திலிருந்து வைத்தீஸ்வர ஐயர் தோன்றவும் அவர்தான் முனியன் என்று நினைத்துக்கொண்டு அவரைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டனர். வைத்தீஸ்வர ஐயர் கூறிய விபரத்திலிருந்தும் அவர்கள் கூறியதினின்றும் சங்கதியையறிந்துகொண்ட அப்புரோகிதர் “நான் உங்களுக்கு முனியன் மறுஜன்மத்தில் பிராமணனாக பிறக்கலாமென்றல்லவோ சொன்னேன். இப்பிறவியில் பிறப்பாரென்று கூறவில்லையே” என்று அவர்களுக்குக் கூறி அவர்களுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்து வைத்தீஸ்வர ஐயரை அழைத்துக்கொண்டு போனார். வைத்தீஸ்வர ஐயருக்குத் தான் பட்டபாடு போதுமென்றாய்விட்டது.

மீனாட்சிபுரத்தில் முத்தையாப் பிள்ளை கனக சுந்திர முதலியார் என இருவரிருந்தனர். இவர்கள் சிறு வயதில் அடுத்த கிராமத்திலிருந்த போர்டு பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றவர்கள். அவர்கள் அவ்வூரிலுள்ள மற்ற அறிவீனர்களைப்போலப் படித்தது போதும் என்று சும்மா யிராமல் தங்களுடைய புத்தியை விருத்தி செய்துகொள்ளும் பொருட்டு ‘ஆனந்தபோதினி’ வாரப் பத்திரிகைக்கும் மாதப் பத்திரிகைக்கும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து அப் பத்திரிகைகளில் வரும் அரிய பெரிய கட்டுரைகளை வாசித்து வந்தனர். பத்திரிகைகளை விடாமல் வாசித்துவந்தமையால் அவ்வூரிலுள்ள கிணற்றுத் தவளைகளைப் போலில்லாமல் நாட்டின் நிலைமையை நன்கு உணர்ந்திருந்தனர். இவர்களுக்கும் தீண்டாமையை ஆழமான குழி தோண்டிப் புதைக்கவேண்டுமென்ற எண்ணமிருந்தது.

‘பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல’ இவர்களுக்கு இந்த எண்ணமிருந்தபோது தான் நமது ஜகதீசனும் அவ்வூருக்கு வந்து சீர்திருத்த வேலைகளைச் செய்ய ஆரம்பித்தது. ஜகதீசனுடைய அருந்தொண்டுகளைக் கண்ட கனகசுந்தர முதலியாரும், முத்தையா பிள்ளையும் அவனுடன் சேர்ந்து ஒடுக்கப்பட்ட சகோதரர்களுக்காக உழைக்க ஆரம்பித்தனர். முதலில் அவ்வூரிலுள்ள வயது சென்றவர்களுக்கு இவர்கள் செய்ய ஆரம்பித்தது பிடிக்கவில்லை. மதத்தின் பெயராலும் கடவுள் பெயராலும் முட்டுக்கட்டை போட்டனர். ஜகதீசனும் முத்தையா பிள்ளையும் கனகசுந்தர முதலியாரும் செய்த தீவிர முயற்சிகளின்பேரில் முட்டுக் கட்டைகளெல்லாம் எடுபட்டன. அவர்களும் இவர்களுடன் சேர்ந்து ஒடுக்கப்பட்ட சகோதரர்களை முன்னுக்குக் கொண்டு

வந்தனர். இவர்களுக்கெல்லாம் ஜகதீசன் தலைவனாக இருந்து சரிவர நடத்தினான். மதம் போச்சு என்ற கூக்குரல் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தீண்டாமைக்கு அவ்வூரினின்றும் பிரிவு உபசாரம் படித்துக் கொடுத்தனுப்பப்பட்டது.

கங்கை ஸ்நானம் செய்யச் சென்ற வைத்தீஸ்வர ஐயர் திரும்பிவர ஆறு மாதத்திற்கு மேலாகிவிட்டது. வட இந்தியாவில் அநேக முக்கிய ஸ்தலங்களைச் சுற்றிப்பார்த்துத் திரும்பினார். அங்குச் சென்று திரும்பிய வைத்தீஸ்வர ஐயர் இப்போது ஓர் புது மனிதராகக் காணப்பட்டார். அவரிடமிருந்த வைதீகமும் ஜாதி வித்தியாச உணர்ச்சியும் எங்கேயோ பறந்துபோய் விட்டது! மீனாட்சிபுரத்தில் ஒடுக்கப்பட்ட சகோதரர்களாய் இருந்தவர்கள் கள் குடிப்பது முதலிய கெட்ட பழக்கங்களை யெல்லாம் விடுத்துச் சீர்திருந்தி இருப்பதைக்காணக் குதூகலமடைந்தார். அவர்களைக்கோயிலுக்குள் அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைக்கப் பிரயத்தனப்படலானார்.



ஓர் நாள் சாயங்காலம் அவ்வூர் சிவாலயம் அதிக அழகாகச்சிங்காரித்திருந்தது. அதிக விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. என்றுமில்லாத அவ்வளவு அழகாக அக்கோயில் அன்று சோபித்தது. வைத்தீஸ்வர ஐயர் கோவில் வேலைகளை யெல்லாம் மேற்பார்த்துக்கொண்டு யார் வருகையையோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ஜகதீசனுடைய தலைமையின் கீழ் அவ்வூர்த் தாழ்த்தப்பட்ட சகோதரர்களெல்லாம் கோவிலுக்குள் சென்றார்கள். வைத்தீஸ்வர ஐயரும் மற்றுமுள்ள அவ்வூர்ப் பெரிய மனிதர்களும் அவர்களைச் சந்தோஷத்துடன் வரவேற்று சுவாமி தரிசனம் செய்து வைத்தனர். வைத்தீஸ்வர ஐயரால் அன்று தூபதீப ஆராதனைகளெல்லாம் நடத்தப்பட்டன. தாழ்த்தப்பட்ட சகோதரர்களெல்லாம் அக்காட்சியைக் கண்டு பேரானந்தத்தில் மூழ்கினர். தங்களுக்கு இக்காட்சியைக் காண உதவி செய்த ஜகதீசனைத் தங்கள் மனமார வாழ்த்தினார்கள்.

திருப்பத்தூர் தாலூக்கா

# ஆரம்ப ஆசிரியர் நிலை

தா. ஆ. அழுதன்.

இப்பவும் இத்தாலூக்காவில் 55-போர்டு பாடசாலைகளும் 95-பஞ்சாயத்து பாடசாலைகளு முளது. தற்போதுள்ள தாலூக்கா போர்டு ஏனைய ஆரம்ப ஆசிரியர்களின் பொறுப்பையும் சுதந்திரங்களையும் உரிமைகளையும் சொல்லொணாவழிகளில் சீர்குலையச் செய்துவிட்டனர். போர்டின் மதிப்பையே பல வழிகளில் குறைவாக்கி விட்டனர். அதிலும் உபாத்தியாயர்களை நீக்கச் சீட்டுக்குலுக்கி அவர்களின் ஊழியத்தையும் கவனியாது எடுத்தல் முக்யாம்சமாகும். நிற்க புதிது புதிதாக உத்திரவும் நிலைதெரியாது யாருமறியா மாறுதல்கள் இவைகளைக்காண விந்தையிலும் விந்தையே யாகும். சான்றாகப் போதனாமுறை யில்லாதவர் பள்ளியில் ஆசிரியர்களாக விருக்கக்கூடா தென்பதும் தாக்ஷிண்யத்திற்காகத் தங்களுக்குத் தேவையுள்ளவர்களை மட்டிலும் ஏற்படுத்துதலும் ஆச்சர்யமே பயக்கும்.

ஆரம்ப ஆசிரியர்கள் இந்தத் தாலூக்காவில் ஐந்துமாத காலமாகியும் சம்பளம் பெறாமல் நாளுக்கு $6\frac{1}{2}$-மணி வீதம் $5\frac{1}{2}$-அல்லது 6-நாள் வரை வாரத்தில் ஓடி உழைத்து ஆரம்பக்கல்வியை வளர்த்து வந்திட்டாலும் தற்போது அவர்களின் குறைகளை நீக்க அதிகாரிகளோ மற்றுமுள்ளவர்களோ சேர்ந்துழைப்பதில் முன் வருவோர் யாருமில்லை. எல்லாருடைய கட்சிகளையும் வலுப்படுத்தவோ நிலைநிறுத்தவோ அந்தந்தகட்சியின் தலைவர்களும் ஸ்தாபனங்களின் அதிகாரிகளுமிருக்க இவ்வேழை விடாமுயற்சியுடனுழைத்து அறிவையூட்டி வரும் ஆரம்ப ஆசிரியரின் ஸ்தாபனங்களும் முன் வருவதில்லை. இவர்களுக்குத் தங்கள் குறைகளை எடுத்துக்கூறி நிவர்த்திக்கத் தலைவர்களுமில்லை. இவர்கள் அநாதைகள். மிஸ்டர் ஆர்லம் ஸ்மித் டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் துரை அவர்கள் கூறியபடி ஆரம்ப ஆசிரியர்களே பாடுபட்டாலல்லது விமோசன மடைதலரிதாகும். இதற்கு இத்தாலூக்காவில் ஆரம்ப ஆசிரியர்களின் மதஸ்தாபனமொன்றமைத்து அதற்குத் தாலூக்காவிலுள்ள ஏனைய ஆரம்ப ஆசிரியர் கழகங்களும் தங்கள் பிரதிநிதி ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்தனுப்பி அவர்களுள் ஓர் தலைவரும் காரியதரிசியும் மற்றவர்களை விஷயாலோசனை அங்கத்தினர்களாகவு மமைத்து அவ்வப்போதுள்ள குறை

களைத் தகுந்த அதிகாரிகளுக் கெடுத்துரைத்துத் தகுந்த பரிகார மடையப் பாடு படுவதே மூற்கடமை யாகும்.

இம்மத்ய கமிட்டி எதற்கு? இப்போதுள்ள மாகாணக் கமிட்டிகள் என்ன சாதித்து விட்டதென்று அன்பர்கள் கேட்கலாம். அவைகளைப் போன்றே இதுவும் பேருக்காகப் பாடுபட்டு நின்று விடலாம் என்றுங் கூறலாகும். ஆனால் அவர்களுக்கு நான் ஒன்று மட்டுமே இங்கு கூறத் துணிகிறேன். "பேருக்கு கங்கை, பவானி குடிப்பதற்கு மட்டில்தான் ஜலங் கிடையாது" என்பதுபோல வானமளாவப் புகழ்ந்து பேச மாத்திரம் ஆரம்ப ஆசிரியர்களின் "அகில இந்தியா ஸ்தாபனம்" "மாகாண ஸ்தாபனம்" என மகுடமிட்டுக்கொண்டு தீர்மானங்களைக் காகிதத்தில் எழுதி அப்போதைக் கப்போ தனுப்பும் தபாலாபீசாக இருந்திடில் மட்டும் நன்மையடைய முடியாது. ஒவ்வொரு தாலூகாவிலும் பெயர்களின் ஸ்தாபன மேற்படுத்தி அவ்வப்போது அதன் மூலம் குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளாவிடில் இவ்வாசிரிய உலகத்துக்கே விமோசனங் கிடைத்த லரிதாகும். அற்பப்பிராணியாகிய எறும்பும் தன்புறுத்தப்படில் தன் பௌருஷத்தைக் காட்டி எதிர்த்துப் போராடுகிறது. இவ்வேழை ஆரம்ப ஆசிரியர்கள் தன் மதிப்பும் சுயநல மற்ற சேவையு மிதுவரை ஒருவாறாக நடந்தேறி வந்தது. இப்போது அதற்குப் பங்கம் கேரிட ஆரம்பித்துவிடவே இம்மாகாணம் முழுவதிலும் பலபாகங்களிலிருந்தும் பொதுஜன அபிப்பிராயத்தை ஒருங்கு திரட்டவே பலவித கூக்குறல்களிடப்படுகின்றன. தற்காலத்திலுள்ள டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் துறை அவர்கள் தாமொரு ஆசிரியர் புதல்வரென்றும் ஆசிரியர்களின் குறைகள் நன்கு தெரியுமென்றுங் கூறி போதனாமுறை பயிலுபவர் கிரேட்டுக்கு 10-ரூபாய் ஸ்டைபெண்டை 6-ரூபாயாகவும், லோயருக்கு 8-லிருந்து 5-ஆகவும் இவ்வருட முதல் கொடுப்பதாயும் சொல்லிக்கொள்வதாக வதந்தி உலாவுதலைக் கேட்க இன்னாரிட மிருந்தும் நன்மையை எதிர்பார்ப்ப தரிதென்பது விளங்குகிறதல்லவா? இத்தாலுக்காவில் நாட்டரம் பள்ளி கிராமப் பஞ்சாயத்தால் ஆரம்பக் கட்டாயக் கல்வித்திட்டம் நடைபெற்று வருவதில் கைத்தொழில் சாலையிலுள்பட 15-ஆரம்ப ஆசிரியர்கள் தொண்டாற்றி வருகின்றனர். தாலூகா போர்டார் இப்பள்ளிக்கு ரூ. 252-8-0 மாதா மாதம் கிராண்ட் கொடுத்து வந்ததை இப்போது ரூ. 192-8-0 ஆக்கியதுடன் ஷை போர்டின் சந்தையின் வருமானத்தில் ரூ. 225-0-0 பெற்று ஷை பஞ்சாயத்தின் மேல் பார்வையிலேயே யிருந்து வந்ததையும் பஞ்சாயத்தின் ஆதாவில் பெண்களுக்குக் கட்டாயக்கல்வி கொடுக்க ஓர் திட்டத்தை 1932வது அக்டோபர் மாதம் ஷை போர்டின் மூல மனுப்பியதை ஒப்புக்கொண்டிருந்தும் 3-4-33 முதல் 144 I. P. C. மூலம் திருப்பத்தூர் சப்கலக்டர் மூலம் நோடீசு பெற்றுப் பஞ்சாயத்தையும் அதன் வலதாரரையும் தடுத்துத் தாங்களே தங்களின் வலதாரால் வசூலிக்க முற்பட்டுளர். 1927-முதலிதுவரைகட்டாயக்கல்வி



அமுலிலிருந்தும் எஜுகேஷன் செஸ்ஸும் கொடுபட வில்லையாம். 1932-நவம்பர் முதல் 1933-மார்ச்சு வரை சம்பளமும் கொடுபட வில்லையாம். இவ்வளவும் ஆரம்ப ஆசிரியர்களின் வாழ்க்கையைத் தனிக்கவிட காரணமாயுளது.

தாலூக்கா போர்டாரிடம் பணநெருக்கடியால் கவர்ண்மெண்டிடமுள்ள இவ்வருட அதிக மிச்சப்பணத்தைக் கடன்கொடுக்கக் கேட்டதில் "இட்டாருக் கிட்ட பலன்," போன்று, திருப்பிக் கொடுக்க உங்களுக்கு யோக்யதை யில்லாததால் கொடுக்க முடியாதென்று காரியதரிசி பதிலளித்ததாக ஷை போர்டின் வைசு பிரசிடெண்டு கூறுகிறார்.

முன்காலத்தி லிவைகளை உத்தேசித்தே அரசர்களும் ராஜாங்கங்களும் ஆரம்பஆசிரியர் நிலைமை உலகப் பொருளாதாரத்தை எவ்விதத்திலும் சார்ந்திருத்தல் கூடாதென்றே ஷை ஆசிரியர்களைக் கவலையின்றி நடத்தி வந்தனர். அதனால்தான் நம்நாடு ஆன்மார்த்த கல்வியி லழியாப் புகழெய்தியது மாகும்.

இப்போதும் அந்நிலைபெற உழைக்க ஆரம்ப ஆசிரியர்களின் விடாமுயற்சியே வேண்டுமாகையால் எ ஆரம்ப ஆசிரியர்களே! விழித்து, எழுந்து, உழை மின், உழைத்த ஊதியம் பெறாமல் தவிக்க விடப்பட்டுள்ள ஆரம்ப ஆசிரிய அன்பர்களே ஒற்றுமையுற்று விமோசன மடையுங்கள் என்றும் அமுத மொழியால் வாழ்க்கையின்ப மடையுங்கள்.

## ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

# இசைப்புலவர் தான்சென்

வி. பசுபதி ஐயர்.

சங்கீதத்தில், தனக்குவமை யில்லாத இத் தான்சென் இற்றைக்குச்
சுமார் 350 ஆண்டுகள் முன்னர் வாழ்ந்திருந்தவர். இவரது
ஆதி சரித்திரம் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை யாயினும், இவர் அந்தணர்
குலத்தில் பிறந்து, "ரீவா" சமஸ்தானாதிபதியான ராஜா ராமச்சந்திரரிடத்தில்
ஆஸ்தான வித்வானாய் அமர்ந்து, பின்னர் "அக்பர்" சமஸ்தானத்துக்குக்
கொணரப்பெற்று அங்கு முகம்மதிய மதத்துக்கு மாற்றப்பட்டார் என்பது
மாத்திரம் சரித்திர வாயிலாய் அறியக்கிடக்கின்றன.

இப்புலவரின் திறமையைப் பற்றிப் பல கதைகள் கன்னபரம்பரையாக
வழங்குகின்றன. இப்புலவர் பெருமான் ஒருகால் அக்பரது அவையில் தம்
இசைக் கருவியில் பல அருமையான பாட்டுக்களை அமைத்துப் பாடலானார்.
அப்பாட்டுக்களைச் செவிமடுத்த அக்பர், தான் மெய்மறந்து, தாயைக் கண்ட
சேயைப்போல் தன் இருக்கைவிட்டு எழுந்து ஓடிவந்து, தான்சனைக் கட்டி
அணைத்து, "ஹே! சங்கீத சாகரமே! இக்கலையில் உன்னை ஒப்பாரும் மிக்கா
ரும் இவ்வுலகின்மிசை யுளரோ, உரைத்திடுக!" என உருகி உருகி உசாவி
னான். அதைக்கேட்ட தான்சன், "மன்னர் மன்னனே! என்னினும் மற்
றெவரினும் மிக்கார் ஒருவர் உளர். அவரே என் குருநாதர். "ஹரிதாஸ் ஸ்வாமி"
என்னும் பெயரினர்; யமுனை யாற்றங்கரையிலே பிருந்தாவனத்திலே வசிப்
பவர்; கிருஷ்ணனை பஜிப்பவர்." என விடையிறுத்தான். உடனே அக்பர்,
'அப்படியாயின் அப்பெரியாரை எனது அவைக்குக் கொணர்க' என உத்திர
விட்டான்.

"என் அண்ணலே! பற்றற்று விளங்கும் எனது பரம குரு இங்கு வர
மாட்டார். அரசனேயாயினும், அன்றி ஆண்டியேயாயினும், அவருக்கு இரு
வரும் சமமே. பொருளைப் பொருட்படுத்தாத பெருந்தகை; முக்குறும்
பெறிந்த மாமுனி; முற்றத் துறந்த முனிவர்; அடியேனை ஆட்கொண்ட அண்
ணல்; கண்ணன் கழலிணைகளையே கதியென நம்பிய என் நாதன்; இங்கு
வாரார், இங்கு வாரார்" எனத் தான்சென் கனிந்துரைத்தான். அதைக்
கேட்ட அக்பர் உள்ளம் உருகி, "அப்படியாயின் எப்படியாவது அக்குணக்
குன்றை நான் தரிசிக்கவேண்டும்" என ஆஞ்ஞாபித்தான்'

சின்னாள் சென்றபின் தான்சனும் மன்னவரும் பிருந்தாவனத்துக்குப்
பிரயாணமாயினர். அக்பர் மன்னன் தான்சனின் இசைக்கருவி சுமந்துசெல்
லும் ஊழியனாக வேடம் பூண்டான். இருவரும் பிருந்தாவனம் போந்தனர்;
ஹரிதாஸரை அண்மினர். தான்சன் தன் ஆசானின் அடிகளில் தன் முடிபட
விழுந்து வணங்கினான். பின்னர் எழுந்து, கைகட்டி வாய்புதைத்து, தன்
குருவின் திருமுன் நின்றான். உடனே சுவாமிகள் தான்சனை அமரும்படி
ஆஞ்ஞாபித்தார். தான்சன் அமர்ந்தான்; அவனுடன் வேடம்பூண்ட வேந்த
னும் அமர்ந்தான். அக்பரோ ஹரிதாசர் திருவாயிலிருந்து பாட்டுக் கேட்டே
தீரவேண்டும் என்னும் தீர்மானத்துடன் வந்திருக்கிறான். தான்சனோ தன்
குரு மூர்த்தியை "பாடுங்கள் என்று எவ்விதம் கேட்பது என ஆலோசிக்கி
றான். அக்பரும் பாட்டுக் கேளாமல் அவனை விட்டு அகலான்; ஹரிதாசரும்
பாடென்றால் பாடார். இந்த நிலையில் தான்சன் ஒரு தந்திரம் செய்தான்.
தன் இசைக் கருவியை எடுத்தான்; அதில் ஒரு இசையை அமைத்தான்; அதை
அருமையாய் இசைத்தான்; வேண்டுமென்றே இடையில் ஒரு பிழையைப்
புகுத்தினான். பிழையைத் திருத்தப் புகுந்த குருநாதர் பாடுவதற்கு ஆரம்
பித்துக் கல்லும் கரைந்து உருகுமாறு பாடினார். அப்பாட்டுக்களைக் கேட்ட
அக்பரின் ஆவி ஆனந்த வாரிதியில் திளைத்துவிட்டது. பார்த்திபன் தன்
பருவுடலை மறந்தான்.

பாடி முடிந்தது; உலகை மறந்து, உடலையும் மறந்து கானத்தில் லயித்த
காவலனைத் தான்சன் மெதுவாகத் தட்டி எழுப்பித் தன்னுடன் அழைத்தேகி
னான். போகும் வழியில் அரசன் தான்சனை அணுகி, "என் அன்பனே! நீ
அவ்விதம் ஏன் பாடக்கூடாது?" என வினவினான்.

அதற்குத் தான்சன், "என் காவல! யான் அவ்விதம் எவ்விதம் பாடவல்
லேன்? என் மன்னரை மகிழ்விக்க, அவர் "பாடு" என உத்தரவிட்டவுட
னல்லவோ யான் பாடுகின்றேன். ஆனால் இப் புண்ணிய புருஷரோ,—கண்ண
னின் கழல்களைக் கனவினும் நனவினும் கருத்திருத்தி வழுத்தும் கண்யரோ
அன்புப் பெருக்கால் உள்ளம் உருகியன்றோ பாடுபடுகின்றார்! எனவே அப்
பெருந்தகையைப் போல் நான் எவ்விதம் பாடமாட்டுவேன்?" எனப் பணிந்
துரைத்தான்.

நிற்க, அக்பர் ஒருகால் ஒரு குறிப்பிட்ட "ராகத்தைப்" பாடுமாறு புலவர்
பெருமானுக்குக் கட்டளை யிட்டார். அந்த "ராகம்" இரவில் இசைக்கவேண்
டிய ராகம். காவலன் கட்டளையிட்ட நேரமோ பகலில் உச்சி வேளை. புரவ
லன் கட்டளைக்கு இணங்கிப் புலவரும் பாடலானார். ஆஹா! என்னென்று
இயம்புவது! புலவரின் இசைத்வனி எவ்வளவு தூரம் சென்றதோ அவ்வ
ளவு தூரத்துக்கு இருள் சூழ்ந்துவிட்டது. பிறிதொரு சமயம் புலவர் பெரு
மான் யமுனை நதியின் நடுவில் நின்று பாடி, தன்னைச் சூழ்ந்துள்ள தண்ணீரை
கொதிக்கச் செய்தனராம்.

இப் புலவருடைய "ஸமாதி" குவாலியர் நகருக்கு அருகிலுள்ளது.
ஆண்டு தோறும், இங்கு, அவரது ஆப்திக தினம் கொண்டாடப்படுகிறது.
அதுகாலை வடநாட்டிலுள்ள பெயர்போன ஹிந்து முஸ்லீம் இசைப்புலவர்கள்
இங்கு வந்து கூடுகிறார்கள். நாட்டியத்தில் பெயர்போன கணிகை மாதர்
பலரும் இங்கு வந்து, சக்ரவர்த்திக்குச் சிற்றரசர் பாத காணிக்கை சமர்ப்பிப்
பதுபோல, இசையில் சக்ரவர்த்தியான இப்புலவர் பெருமான் ஸமாதிக்குத்
தங்கள் காணிக்கையைச் செலுத்துகின்றனர்.

1930ம் வருஷம் ஜனவரியில் நடந்த ஆண்டு விழாவிற்கு இசைப் பைத்
தியம் பிடித்த யாமும் இவண் சென்றோம். இவ்வைபவம் தொடர்ந்து
மூன்று நாட்கள் நிகழ்ந்தன. ஆரம்பத்தில் ஓர் அந்தணர் ஹரிகதா கால
க்ஷேபம் செய்கிறார். அது முற்றுப் பெற்றவுடன், முஸ்லீம்கள் தங்கள் பக்
திக் அறிகுறியாகப் புஷ்ப மாலைகளை ஸமாதிக்குச் சாத்துகின்றனர். இது

முடிந்தவுடன் முஸ்லிம்கள் தொழுகைக்குச் சென்றுவிடுகின்றனர். உடனே இசைக்கருவிகள் பல ஒருங்கே ஒலிக்க ஆரம்பிக்கின்றன. ஒவ்வொருவரும் தம் தம் திறமையைக் காட்டப் பெரிதும் முயல்கின்றனர். தொழுகை முடிந்தவுடன் முஸ்லீம்களும் கலந்துகொள்ளுகின்றனர். இக் கொண்டாட்டத்தைப் பார்த்த எமக்குத் தமிழ் நாட்டில் திருவையாற்றில் இசைப் புலவர்களால் கொண்டாடப்பெறும் தெய்வப் புலமை "தியாகையர்வாள்" திருநாளே இதற்கு நிகர் எனத் தோன்றிற்று. ஆனால் ஒரு வித்தியாசம். தியாகையர்வாள் திருநாளன்று ஒரு முஸ்லீமையும் யாம் அங்கு காணவியலாது. ஆனால் இங்கோ இந்து முஸ்லீம் இருவரும் கலந்து வேற்றுமையின்றி, இக் கலையில் அவரவருக்குள்ள திறமையைக் காட்ட முற்படுகின்றனர்.

## ஆதிசங்கரர் தீண்டாமை ஒழித்தது!

"சங்கரபாதர் தமது மாணாக்கரோடு சென்று கங்கைநீராடி நித்தகரும வினை முடித்துவரும் வழியில், மிகநீண்ட வடிவுடையதோர் சண்டாளன் தலைமேல் கட்குடந் தாங்கி, நான்கு நாய்களைத் தன் பின்னாக வரப்பற்றி இவர் அருகாக வருவானாயினன். அவனை இவர் கண்டு "செல்க செல்க" என்ற கருத்தினையுடைய கைசன்னை செய்தனர். அதுகண்ட அவன் அங்குதானே நின்று இவர்க்குச் செல்ல வழிவிடாது இவரை வினவத் தொடங்கினன்: "அந்தணர் தலைவ! எந்த ஏதுவினால், எதன்பொருட்டு, யாரை, எங்குபோகச் சொன்னை? அன்னமயமாகிய தேகத்தினின்றும் அன்னமயமாகிய தேகத்தினைத் தூரமாகச் செல்லக் கூறுகின்றனையோ? அல்லது அறிவினின்றும் மற்றோரறிவைச் செல்லக் கூறுகின்றனையோ? அலையடங்கிய பெருங் கடல்போலும், இயற்கை அறிவின்ப வுருவுடைய ஆன்மா எங்கும் நிறைந்திருக்க, அதனுள், இவன் அந்தணன், இவன் சண்டாளன் என்னும் வேறுபாடேன்? தேகத்தடையால் ஆன்மா வேறு என்பையேல், மட் குடத்தினும், பொற் குடத்தினும் ஆகாயம் வேறு வேறுள்ளதோ? கங்கை நீரிற் காணும் இரவிமண்டல விம்பத்திற்கும், புலைச்சேரி முற்றத்தி நீரிற் காணும் இரவிமண்டல விம்பத்திற்கும் வேறுபாடென்னை? நீ உண்மையான அத்துவிதக் கருத்தினை யுணர்ந்தவனேயாயின், இவ்வேற்றுமை மயக்க நின்னைவிடா தொழியுமோ? ஞானி என்று சந்நியாச வேடம் புனைந்து துவித வாசனையையே விருத்தி செய்து உலகத்தினை வஞ்சித்தலாகாது" என்றனர். அதுகேட்டு சங்கரர் உள்ளத்தின் கண்ணே யனுபவித்திருந்த அத்துவித ஆனந்தம் பொங்கக் கூறுவாராயினர். எறும்பு முதல் பிரமனீறாகவுள்ள எல்லா வுடம்பினிடத்தும், எல்லாப் பிரபஞ்சத்திடத்தும் ஓதப்ரோதம் குறுக்கிழை நெடுக்கிழைபோலும் நிரம்பிய அறிவாம் பொருளொன்றே உண்மையாயுள்ளது. அதுவே தன்வடிவம்; அறிவில்லாமையாற் றன்னிடத்துத் தோன்றும் வேற்றுமை மயக்கமெல்லாம் கனவே போலும் பொய்யாகவுள்ளது என்ற இரகசியம் தூவன் முன்னிலையில் யாருணர்ந்து அனுபவப்படுவானோ, அப்பெரியவன் சண்டாளனேயாயினும், வேதியனேயாயினும் எனக்குக் குருவென்பதே என் கருத்து" என்றது முதலிய பொருள்கோளுடைய மனீஷாபஞ்சகம் என்னும் செய்யுட்களைக் கூறினர்."..

சங்கரவிஜயம்.

## "ஆலய தத்வமும் ஆகமப் பித்தமும்"

(திருமலை ராமாநுஜன்.)

நாட்டிலே இப்பொழுதைக்குச் சில நாட்களுக்கு முன்னிருந்து நாட்டு மக்களை எல்லாம் ஒருமுகமாகத் தன்பாற் பணியச் செய்த ஒரு பெருங் கிளர்ச்சி 'ஆலயமும் அதன் பிரவேச சம்பந்தமானது மாகும். அறிவுடை மக்கள் நிரம்பியிருக்கும் மன்றங்கள் தொடங்கி, ஏனையர் இருக்கும் மூலை முடுக்குகள் எல்லாம் இதுபற்றியதே பேச்சு. இவ்வாறு நிற்கும் தனிப்பெருங் கொள்கையை ஆதரிக்கின்றார் பலர்; அநாதரிக்கின்றார் சிலர். இவ்வாலயப் பிரவேச விஷயம் சாஸ்திர சம்பந்தம் உடையதாகுமா? அன்றி ஆகாதா?' என்பது வாதிடுவார் நிகழ்த்துங் கூற்று. இருபெருங் கொள்கை யுடையாரும் மாறுபட்ட நோக்கம் மிகுதியும் உடையாராக இருக்கிறபடியால் நம்போல்வார்க்கு உண்மை இஃதெனக் கண்டறிவதற்கேற்ற சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை. ஆகையால் இது விஷயமாக நாம் அறிந்தவரையில் ஆராய்ந்து உண்மையறிய வேண்டுமென்பதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

கடவுளரையும் அவர்க் கியற்றும் வழிபாடுகளையும், மற்றும் ஆலயங்களைப் பற்றிய சகல விதி விலக்குகளையும், நமக்குப் பெரும்பாலாக அறிவிப்பது சாஸ்திரங்களே யாகும். ஆகையால் அதைமீறி வேறு யாதொரு வகையாலும் முற்கூறிய விஷயங்கள் சம்பந்தமாக அறியத் தொடங்குவதும், விதிவிலக்குகளைச் செய்யத்தொடங்குவதும் வேத வழக்கொடுபட்ட நெறியாகாது. சாஸ்திரங்களாவன மக்கட்கு உறுதி பயப்பனவாய விதிவிலக்குகளைத் தெரிவித்து நன்னெறிகட் செலுத்துவதற்குக் கருவியாக உள்ளனவாம்.

இத்தகைய சாஸ்திரங்கள் எல்லாம் உலகிலுள்ள மக்கட்கு நன்மை பயப்பனவாக நம் முன்னோர்கள் முதல் எல்லாராலும் கருதப்படுகிறபடியால் இவை உலகியலுக்கும் பிரத்யக்ஷத்திற்கும் நடைமுறைக்கும் மாறுபட்ட விஷயங்களைப் போதிக்கவோ அன்றி விதிக்கவோ செய்யா. 'ஆகாயத்தில் முளைக்கும் தாமரைப்பூ நல்ல வாசனை வீசிற்று'—என்று சாஸ்திரங் கூறுமானால், இதனைக் கேட்குமவர்க்கு, இது உலகினில் இல்லாப் பொருள் எனக் கருத்துண்டாகி அதைச் சூடக் கருதுவாரும் யாரும் இலராய் ஒழிவர், ஆகலின் அவ்வாறு பயனற்ற கூற்றுக்களைச் சாஸ்திரம் உலகியல் கடந்து கூறாதென்க. அன்றியும், தீச்சுடும் என்பதே யாவரும் கண்ட தொன்றாகலின், அக் காண்டற்கு விரோதமாகத் தீக்குளிரும் எனவும் சாஸ்திரம் போதிக்காது. "சாஸ்திரத்தின் இலக்கணம் உலகியலுக்கும் நடைமுறைக்கும் விரோதமாகப் போதிக்காது" என்பது பெற்றோமாகவே, 'உலகியலுக்கும் நடைமுறைக்கும் விரோதமுள்ளன காணநேரிடின் அவை சாஸ்திர சம்மதம் பெற்றன அல்ல

என்பதும் நன்கு தெளிதல் கூடும். ஆயின் ஒரு காலத்துலகியலே, கால மாறுபாட்டால் பின்வரும் ஒரு காலத்துலகியல் அன்றாய் ஒழிதலும் கூடுமாகலின், அவற்றை எல்லாம் கருதி அச்சாஸ்திரங்களே 'பழயன கழிதலும் புதியன புகுதலும் 'கால வகையால் வழுவல' என்பதை ஒப்புக்கொண்டு மாற்றிக் கொள்வதற் கிடந்தரும். இவ்வாறு இடம் தந்தே முற்காலத்து ஒழுக்கங்களிற் சில இக்காலத்து ஒழிந்ததுமன்றி அதுவே சாஸ்திரமாகவும் கொள்ளப் பட்டது.

ஆகையால், கடவுள் சம்பந்தமாயும் ஆலய சம்பந்தமாயும் சாஸ்திரம் விதிக்கும் செய்கைகள் எல்லாம் உலகியல் நடைமுறைக்கும் மனிதன் மனோ தர்மத்திற்கும் தகும் தகுதி யறிந்தே விதித்திருக்கப்பட வேண்டும். மனித சமூகமே யறியாததாகவும் அவர்களது மனோதர்மத்திற் கியையாததாயுமுள்ள ஒரு கடவுளையோ அன்றி வழிபாட்டையோ விதிக்குமேல் அது இலக்கணம் அன்மையால் சாஸ்திரமாக அறிவுடையோரால் கொள்ளப்படாததோடுங்கூட பெரும்பான்மையோரால் நம்பப்படவும் மாட்டாது. எனவே ஆதி மனித சமூகமானது தன் மனோதர்மத்திற்கியைய முதன் முதல் எவ்வாறு கடவுளையும் அவர்க் கியற்றும் வழிபாடுகளையும் சமைத்துக்கொண்டது என்பதுபற்றிச் சிறிது துருவி யாராய்வோம்.

உலகில் மனிதன் முதன் முதலாகத் தோன்றியவுடன் தனக்கேற்பட்ட ஐம்பொறிகள் வாயிலாகவும் உலகில் உள்ளனவற்றை அவ்வவற்றிற் கேற்ற முறையில் அறியத் தொடங்குகிறான். கண்ணாற் சிலவற்றைக் காண்கிறான்; காதாற் கேட்கிறான்; மெய்யாற் தொட்டறிகிறான்; மூக்கால் முகர்கின்றான்; வாயால் சுவைத்தறிகிறான். இவ்வளவிற்கும் அப்பால், 'இது வாயால் அறியத் தக்கது; இது கண்ணால் அறியத்தக்கது' என அறிவால் பகுத்தறிகிறான்.

இவ்வாறு ஒவ்வொன்றையும் கண்டறிந்த அவன் அவை எங்கிருந்து, எவ்வாறு, ஏன், உண்டாயின? யாரால் உண்டாக்கப்பட்டன? என்றாற் போன்று மேன்மேலும் தத்தம் அறிவின் வளர்ச்சிக் கேற்றவாறு வினவி ஆராயத் தொடங்குகிறான். தொடங்கிய அவன், அவ்வாறு ஆராய்ந்து அறிவுக்குள் அடங்கிய சிலவற்றை அறிந்து கொள்கிறான். ஆனால் சில இவனறிவுக் கெட்டாதனவாய் இவனை மயங்கச் செய்கின்றன.

நிற்க, இவ்வாறுள்ள இவ்வுலகினிடையே சில என்றும் இவனறிவுக் கெட்டாததாய்த் தென்படுகின்றன. சூரியனைப் பார்க்கிறான்; தினந்தோறும் காலையில் கிழக்கே யுதயமாகிறது: மாலையில் மறைகிறது; ஏன் இவ்வாறான நியதி யுடையதாய் இருக்கிறது? யாரால் இந்நியதி யுடையதாய் இருக்கிறது; எப்பொழுதேனும் இந்நியதியினின்று தவறு மாறுண்டா? இல்லையா?—என்றின்னோரன்ன ஆராய்ச்சி எழுந்து பயனற்றதாய் முடிகின்றது. மற்றும் இவ்வாறே நிலம், தீ, நீர், விண், பூதம் முதலியவற்றையும்பற்றி ஆராய நேரிட்ட அளவில் முன்போலவே, அவ்வாராய்ச்சி அறிவைக் கடந்து நின்று பயனற்றதாகிறது. இவ்விடங்களில் எல்லாம் இவனது வளரும் அறிவு சிறிது தளர்ச்சியடைய வாரம்பிக்கின்றது. முற்கூறியவாறு தன்னைச் சுற்றிய பொருள் பலவற்றிற்குக் காரணம் கண்டறிய மாட்டாது திகைத் தொழியும் அவன், பின்னர்த் தன்னையே யுற்று நோக்குகிறான். உற்று நோக்குகையில், தன்னுள்ளும் அறிவுக் கெட்டாத பல இருந்துகொண்டு கலவரப்படுத்துகின்



றன; தான் சிலகாலம் ஜீவித்துப் பின் இறக்கப் போவதையும் அதற்குள்ளாகத் தனக்குத் தன்னை யறியாது நேரிடும் பிணி, பசி, மூப்புத் துன்பம் முதலியவற்றையும் பொருட் படுத்தாமல் இருக்க முடியவில்லை. இம்மட்டோ, மற்றும் உலக நிகழ்ச்சியையும் காணுமற் போகக் கருத் தெழவில்லை. 'பிறந்தன இறக்கின்றன; இறந்தன பிறக்கின்றன; பகைத்தன சேர்கின்றன; சேர்ந்தன பகைக்கின்றன; தோன்றின மறைகின்றன; மறைந்தன தோன்றுகின்றன; ஆகிய இவைகளை எல்லாம் ஓர் கலவரம் என்றே யுணர்கின்றான். ஆனால், இத்தகைய ஒரு பெருங் கலவரத்தினிடையே உலக வளர்ச்சியாகிய சமாதானத்தையுங்கண்டு, 'உலகமே கலவரமும் சமாதானமும் உடையதெனத் தீர்மானிக்கத் தொடங்குகிறான். ஆக இவ்வாறான விசித்திரங்களை எல்லாம் இயற்றி நடத்துவிக்கும் இறைவன் ஒருவன் உளனாகல் வேண்டும் என்னும் கருத்து அடுத்து உண்டாகி, அதைப்பற்றிச் சிந்தித்த காலத்தில் அதுவும் இவன் அறிவைச் சலனமடையச் செய்ததே யொழியச் சிறிதேனும் அமைதி அளித்த பாடில்லை. இதுவரை நேர்ந்த ஆராய்ச்சியின் பயனாக ஏதோ இவைகளை எல்லாம் இயற்றுவித்த ஓர் சக்தியின் உண்மை யுணர்ந்த அவன், 'அது அறிவு முதலிய எல்லாம் கடந்து நின்ற காரணங்கொண்டே, அதைக் கடவுள் என்றும் பெயரிட்டழைக்க முற்பட்டான்.

இனிக் கடந்து நின்ற காரணங்கொண்டு 'கடவுள்' என்றழைக்கப்பட்ட அச்சக்தியினிடம், அன்புகொண்ட தன்மை இரண்டாவதாகச் சிறிது கூர்ந்து நோக்கத் தகுந்தது. தான் உலகிற் கண்ட தீ நீர் காற்று முதலாயின எல்லாம் தனக்கு வரும் பயன் தந்து தன் வாழ்விற்குக் காரணமாய் நிற்கின்ற தன்மையை யுணருகிறான்; உணர்ந்த காலையில், தான் யாதொரு பயனுங் கருதாது பிறர் நலத்தின் பொருட்டே படைக்கப்பட்டு அவ்வாறு உலகை யுய்வித்து வரும் அவ்வியற்கையின் மீது விருப்புண்டாதல் இயற்கை. அன்றியும் தன்னாலும் தன்னைக் காத்துக்கொள்ளுதல், இயலாததாக, காத்தல் வன்மை அவற்றினிடையுள்ளவாயதை நினைக்குங்கால், அவை மிக அவசியமுடையதெனவும், அவையின்றேல் மனித சமூகமே உயிர்வாழ்தல் ஏலாதெனவும், தான் மிகவும் பேணியாதரிக்க வேண்டும் எனவும், எப்பொழுதும் நிலைபெற்றிருக்க வேண்டும் எனவும், தோன்றும் நினைவுடுக்குகள் பல உண்டாகி அவற்றினிடைத் தன்னைக்காட்டிலும் மிக்கதோர் அன்பு செலுத்துகிறான். 'தன்னிடத்தி லுள்ளதைவிட விஞ்சியதொரு தன்மை யாண்டுக் காணநேரிடினும் ஆண்டு பயமும் அது காரணமாய பக்தியும் தலையெடுத்தல் கூடும்' என்பதாய, மனோதத்துவ சாத்திர விதிப்படி, தனக்கியலாத 'தற்காத்தல் முறையை புதுமையாகக்கண்ட அவைகளிடத்துப் பயமும் பக்தியும் தானே சிறிது நாளடைவில் உண்டாயிற்று. உண்டாயவுடன் வழிபாடியற்றத் தொடங்குகிறான். பண்டைக்கால மக்கள் எல்லாம் நிலம் தீ நீர் காற்று முதலியவற்றையே தெய்வமாக வணங்கி வந்தனர் என்பது சரித முறையால் அறியக் கூடியது. இன்னும், பார்சியர்கள் நெருப்பையே தங்கள் ஆலயங்களுள் இட்டுத் தெய்வமாக வழிபட்டு வருகிறமை, நாம் முற்கூறிய மனவெழுச்சியை வலுயுறுத்தல் நன்கு காணலாம்.

முற்கூறியபடி அன்பு பாராட்ட நேர்ந்த விடத்தே, அதனை யடுத்து போற்றி வழிபடத் தொடங்குவதும் மனித இயற்கையே யாம். ஒரு பொருளை தனக்குச் சமமாகப் பாவித்துச் சமவுரிமை கூடுமன [illegible] யும்

வழங்க முற்படுவதும், அதைவிட்டுப் பிரியாது எப்பொழுதுங்கூடி வாழ விரும்புவதும், அன்புள்ளத்தின் இயற்கையாகும். நாயிடத் தன்பு கொண்டார் பலர் தன்னொடு சமமான, உடை படுக்கை உணவு, இருக்கை முதலியன கொடுத்து அதைப் பேணி வருதல் யாம் மெய்யாகக் கண்டதொன்று. இஃது அன்புள்ளம் கொண்ட விளைவே யாகும். இறைவனிடத்துப் பேரன்பு பூண்ட ஆண்டாள் என்னும் பிராட்டி யாம் முற்கூறியவாறே அவனை நோக்கி, 'இம்மைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்று குறிப்பிட்டமை பாராட்டற் பாலது.

தான்கொண்ட அன்பால் தன்னிற் சமமாகப் பாவித்து அக்கடவுளுக்கு உருவம் சமைக்க நேரிட்ட காலத்திலேயே மனித சமூகம் தன்னுருவையே கொடுத்துச் சமைக்கத் தொடங்குகிறது. என்னை? 'தன்னிற் சிறந்த தொன்றுண்ட தெனக்கோஉல்' சாதாரண மனித இயற்கையன்றாகலான். உண்மையாக, நாய்கள் எல்லாம் பின்வரும் ஓர் காலத்தில் பகுத்தறிவு பெற்று ஓர் கடவுளுக்கு உருவம் சமைக்க வேண்டின் தன் உருவையே அக்கடவுளுருவாய் சமைத்தல் திண்ணம் என்க.

கடவுளுக்கு, மனித சமூகம் தன்னுருக் கொடுத்த இக்காலையிற்றான் கடவுளின் தன்மை மாறுகிறது. அறிவைக் கடந்து நின்று யாதொரு உருவிலும் சின்னத்திலும் இதுகாறும் அகப்படாது நின்ற தன்மை உருவிலும் சின்னத்திலும் அகப்பட்டு மாறி அன்புள்ளத்தினால் பிணைக்கப்பட்டு மனிதனைப்போலவே வீடு, வாசல், மனைவி, மக்கள், சொத்து, உரிமை, சுகம், துக்கம் முதலியன யாவும் பெற்று நிலவுகிறது.

கடவுளர்க்கும் அவ்வியப் போர் நிகழ்ந்ததாகப் புராணங்களின் மூலம் யாம் அறிகிறோம்; நம்மைப்போல் கடவுளுக்கும் வீடு. நம்மைப்போல் கடவுளுக்கும் மனைவி, கடவுளுக்கும் பிள்ளைகுட்டிகள்; அந்தோ! பிறப்பு, இறப்பு, பிணி மூப்பு எல்லாம் பெற்றுவிடுகிறார்.

இவ்வாறு மனித சமூகத்திலே நிலை மாறிய கடவுளின் நிலையை எல்லாம் நம் பண்டையோர் அறியாதொழிந்தார் இல்லை. பார்த்து மனித இயற்கை இதுவாகையால், அதை ஒழிக்க முற்படாது இவ்வாறு விக்ரக ரூபமாகவே வணங்குமாறு ஏற்பாடு செய்தார்கள். இன்னும், மனிதன் அறிவு என்றும் வளர்ச்சியடைந்தே செல்லும் இயற்கையுடையதாகையால், இவ்விக்ரக ரூபத்தையும் பலர் பலவாறுத் தமக்கு ஏற்ற முறையில் கையாண்டனர்.

ஒரு பகுதியார், நமக்குக் கண்கள் இரண்டு; ஆனால் நம்மைப் படைத்தியக்கும் கடவுளுக்கும் கண்ணிரண்டெனவே கோடல் ஏலாமை யறிந்து மூன்று கண்களை ஏற்படுத்தினர்; கையும் நமக் கிரண்டென்றால் அவர்க்கு நான்காக்கினர். இவ்வாறு அவரவர் தத்தம் மனோபாவத்திற் கியைந்தவாறே நாளடைவில் பலபடியாக உருவம் சமைத்துப் பெயர், முதலியனவும் கொண்டார்கள்.

மற்றும் தத்தம் குணங்குறி செய்கைகளையே தாம் தாம் வழிபடும் கடவுளுக்கும் ஏற்றினர். சத்துவ குணம் உள்ள ஒரு பகுதியார் கடவுளையும் சத்துவ குணம் உள்ளவராகவே கொண்டொழுகினர். சத்துவகுண உணவு



களையே படைத்தனர்; காத்தற்றொழிலையே தொழில் என ஏற்றினர்; பிறிதொரு சிலர், தம் குணத்திற்கேற்ப தமோ குணம் உள்ளவராகக் கடவுளைக் கொண்டனர்; தமோ குண உணவுகளாகிய மச்ச மாம்சாதிகளைப் பலியாகப் படைத்தனர்; கடவுளின் இருப்பிடம் இடுகாடாகக் கருதினர்; இவ்வாறு மனித மனோதர்மத்திற் கேற்றவாறே கடவுளும் வழிபாடும் பெருகிக்கொண்டு வந்தன. இதற்குத்தக ஆலயங்களையும் அதன் அமைதிக்குக் காரணமாக விதிவிலக்குகளைத் தெரிவிக்கும் ஆகமச் சட்டங்களையும்; அக்கடவுளின் பிரதாபம் முதலியவற்றைக் கூறும் புராணம் முதலானவற்றையும் நாளடைவில் படைத்துக்கொண்டனர். அக்காலத்தில் நாகரீகத்திற்கேற்ப, முற்கூறிய ஆலயங்களிலும் நாகரிகப் பழக்க வழக்கங்கள் புகுந்தன.

நாம் இவ்விடத்து மறவாது நினைக்கத் தக்கது யாதெனில், கடவுளின் தன்மையே, முதற்கண்ட காட்சிக்கு நேர்மாறாக ஆராய்ச்சியின் பயனாக மாறி வந்துவிட்டது என்பதேயாகும். இதனையறிந்த நம் பண்டையோர், இதை ஒழிக்கவும் இயலாமையால் முற்படாராகிச் சில இரகசியங்களை இட்டு இதையே வற்புறுத்திச் சென்றனர்.

உலகிலே சாதாரணமாயுள்ள மக்கட்கெல்லாம் அருவமாயுள்ள கடவுளை நினையுங்கள்! போற்றுங்கள்! வழிபடுங்கள்! என்றால் அதன்படி இயலாதென்பதை நம் முன்னோர் கண்டனர்! காரமே யறியான் ஒருவனுக்கு காரம் பற்றிய அறிவு கற்பிக்கவேண்டிய பிறிதொருவன் கடுகை யுண்பித்துக் காண்பிக்குமாறுபோல, அருவுருவாயுள்ள கடவுளை முதல் முதல் உருவாக்கி வழிபட்டால் சில நன்மை உண்டென் றுணர்ந்து உருவழிபாட்டை உறுதியாக்கினர். ஆனால் ஆலயங்களில் உள்ள தெய்வம் மட்டும் வழிபடும் ஒருவர்க்கு நற்கதி உண்டென்று எவ்வகைச் சாத்திரங்களும் கூறுமாறில்லை. ஆலய வழிபாட்டிலும் சில முக்கிய தத்துவங்கள் ஏற்படுத்தி யிருக்கின்றனர். ஆலயஞ் சென்று வணங்கி மேம்பட்ட ஒருவர் அதன் பின் கடவுளை மானசீகமாக வணங்க முற்படவேண்டும் என்பதும், அம் மானசீகக் கடவுளின் உரு எல்லாமும் ஆம் என்பதும்; இல்லாத இடம் இல்லை என்பதும், குணங்குறி ஒன்றும் கிடையாதென்பதும், விருப்பு வெறுப்பு யாதுமில்லாது எனவும், இவை போன்ற பிறவும் முக்கியமாய் அறியவேண்டிய பாடம். ஆலய வழிபாட்டினால் இத்தகைய தன்மையடையாதவர்க்கு அவ்வழிபாடு யாதொரு பலனையும் தரமாட்டாதது. அதனை யறிந்தே நம் முன்னோர் 'விக்ரகத்தில் கடவுள் இருக்கிறார் என உணரலாமே யன்றி கடவுளே விக்ரகம் என உணர்தல் கூடாதென விதித்துச் சென்றனர். ஆகையால் மாடியில் ஏறும் ஒருவனுக்குப் படி போல் உதவுவது ஆலயமேயன்றிப் பிறிதொன்றும் ஆகாது.

மற்றும் இவ் வாலயங்கள் எல்லாம் பொதுவிடமாக நம் முன்னோர்களால் கருதப்பட்டு வந்தது. ஒழுக்கம் அடைய வேண்டியவர்கள் பயிலும் பள்ளி

யாகக்கொண்டனர்; சகோதர பாவம், சத்சங்கம், முதலியன நிறைந்த இடங்களாகக் கொள்ளப்பட்டது. ஒற்றுமையை விளைப்பதற்கும் உற்ற விடமாகக் கருதப்பட்டது.

இவ்வாறுள்ள இவ்வாலயங்களின் தத்துவம் தற்காலம் ஆகமமாகவே மாறி நாட்டில் பெருந் தீங்கிழைத்து வருவது யாவரும் கண்டதொன்று. ஆகமமாவது ஆலயங்கள் சிறப்புற நடக்கவேண்டி இன்றியமையாத விதி யேற்பாட்டைக் குறிக்கும் பிரமாண நூலாகும். இதில் அவ்வக்கால தேசங்களிற் கேற்ற சட்டங்களே எழுதப்பட்டிருக்கும். இது முற்கூறியபடி நம்மால் படைத்துக் கொள்ளப் பட்ட தொன்று. நாம் எல்லோருமே மனமாற்றம் அடையும்பொழுது இச் சட்டங்கள் மாறினால் யாது கெடுதி. நாம் ஒரு வீடு கட்டினோம் என்றால் அவ்வீட்டில் நிகழும் நடவடிக்கைகள் ஒழுங்காக நடக்க வேண்டி இட்ட சட்ட திட்டங்களை யேற்படுத்தியவர்களும் நாமே யன்றோ! ஒருவேளை வீடுகட்டிய நம் முன்னோர்களால் ஏற்பட் டிருக்கலாம்! இதை விடுத்து தெய்வம் சட்டம் இட்டு சென்றது என்றல் அவ்வளவு பொருந்தாமை! வீடும் கட்டுங் காலத்து கணவன் மனைவி என இருவர் பொருட்டுக் கட்டிக் கொள்ளுகிறார்கள். ஆனால் பிற்பாடு ஒரு குழந்தை பிறந்ததென்றால் அதற்கு இடந்தரவில்லையா? இன்னும் அக்குழந்தையின் காரணமாக வந்த மனைவி, சம்பந்தி முதலாயினோரையும் வர விடுவதில்லையா? இதற்கெல்லாம் மனமாற்றந்தான் காரணமாகுமே யன்றி பழய வழக்கமும் அநுஷ்டானமும் காரண மாவதில்லை.

தற்காலத்திலோ ஆலயங்கள் இருக்கும் நிலையை யாவரும் நன்கறிவர். அது காரணமாக விளையும் சண்டைகள் மிகப் பல; மூடப் பழக்க வழக்கங்களைக் கையாளுவதில் விருப்புடையவராய், வைணவர்கள், முன்பின் ஆலய விஷயமே யறியாதாராய நீதிபதிகளிடம், வாதிட்டுச் சென்று லக்ஷக் கணக்காக வாரி யிறைக்கின்றனர். நிற்க,

இது காறுங் கூறியவற்றால் ஆலய தத்துவம் இன்னதென்பதும், ஆகமம் இன்னதென்பதும் பெற்றதன்றி, ஆலய சம்பந்தமான சீர் திருத்தம் காலத்திற்கேற்பச் செய்யவேண்டுமானால் மனதைத் தவிர அதற்கு, ஆகமச் சட்டம் யாதொருவகையிலும் இடையூறு புரியாதென்பதும் ஒருவாறு உணரலாகும்.

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

# காதல்!

(S. K. சாமி)

ஒத்த குணமுடைய ஆணும் பெண்ணும் உண்மையாய நேசிப்பதே காதலாகும். கருங்குழலும், மின்னொளி மேனியும், பருத்த கொங்கையும் பிறவும் படைத்த மடமங்கையை கண்ணுற எந்த ஆடவன்தான் மையல் கொள்ளான்? இதை காமமென அழைத்தல் பொருந்தும். தன்னை நேசியா நாரீமணியிடம், அன்பினால், அல்லது காம பெருக்கினால் தன்மீது ஆசைகொள்வதாக அபிநயித்தால் நேரும் இடையூறுகள் எண்ணில் கோடி. இவைக்குறித்து இப்பொழுது ஒன்றும் இயம்ப விரும்பவில்லை.

இருபாலரின் இதயத்திலும் எழும் நேச உணர்ச்சியே உண்மைக் காதலெனப்படும். காதல் நிகழ்ச்சிகளின் தன்மையையும், பெருமையையும் கூறும் நூல்கள் பலவுள. ஒத்த அன்பினராகிய தலைவனும், தலைவியும் தம்முட் கூடுகின்றகாலத்துப் பிறந்து அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவராலும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்பட்டதாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பம் என்பர். ஒரு மங்கைமீது காதலுற்ற ஒருவன் வேறு எம்மங்கையிடமும், எக்காரணம் பற்றியும் மையல் கொள்ளானென்பது உறுதி.' இது உண்மைக்காதலின் உயரிய லக்ஷணமாகும். இக்கருத்தை விளக்கியே மேனாட்டு பிரபல நாடகாசிரியான ஷேக்ஸபியர் Love is not love which alters when it finds alteration என அருளியிருக்கின்றார்.

உண்மைக்காதல் அதி அற்புதமானது. எவ்வித இன்னல்களையும் நீக்கும் திவ்விய ஔடதமுமாகும். காதலரிடம் கவலை யணுகாது. இக்கருத்தை தமிழுக்கு புத்துயிரும், தமிழகத்திற்கு புதுவாழ்வும் அருளிய புலவர் பாரதியார் விளக்கியுளார்,

"காதலிங்கே யுண்டாயின் கவலையில்லை"

பின்னும் உறுதிகூறி மக்களை காதல் நெறியில் உய்க்குவான்,

"ஆதலினால் காதல் செய்வீர் உலகத்திரே;
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்;
காதலினால் சாகாம லிருத்தல் கூடும்;
கவலைபோம்; அதனாலே மரணம் பொய்யாம்."

எனப் பாடி யிருக்கின்றார். காதல் மக்கள் தலையாய்ப் போற்றவேண்டியதோர் உணர்ச்சியாகும். உலகயின்பமனைத்தையும் ஒருங்கே கண்டு களிக்க காரணமாயிருப்பதும் உண்மைக் காதலே யாகும்.

நெஞ்சமென்னும் பாறையில் அன்பென்னும்தேன் ஊறித்ததும்புவதற்கு அடிப்படையாக வேண்டுவது காதலேயாகுமென்பதில் அணுவளவேனும் ஐயமில்லை. ஆனால் உண்மைக் காதல் காடு முரடானதே. இதை ஆங்கிலத்தில் கவினர் ஷேக்ஸ்பியர் True love never did run smooth என அருளி யுளார். பனியன் என்ற ஆங்கிலேய மேதாவியும் 'யாத்ரீகர் பிரயாணம், (Bunyon's Pilgrims Progress) என்னும் நூலில் விரித்து, கூறி யிருக் கின்றார். இத்துணைதூரம் இன்பம் பயக்கும் காதல் பயிரை கண்ணும் கருத் துமாய்க் காக்கவேண்டுவது வாலிபரின் கடமையாகும் என்பதை இளைஞர்உல கம் மறுக்க முடியாதன்றோ. காளைகள் நெஞ்சில் காதல் அப்படியே அடங்கி யிருக்கும். காதலிலா காளைப்பருவமுடையோனை காண்பதரிது. "Love is a thorn that belongs to the rose of the youth" என்று ஷேக்ஸ்பியர் கூறுவதின் கருத்தைக் காண்க.

காதலரின் கடைக்கண் நோக்கே அவரின் உள்ளக்கிளர்ச்சியை உரைத்து விடும். இக்கற்பனை திருவள்ளுவர் கூறிய "கண்ணொடு கண்ணிணை நோக் கொக்கின் வாய்ச் சொற்க ளென்ன பயனுமில" என்னும் இயற்கைப் புணர்ச்சி யின் திறனை யுணர்த்தும் பொருள் நுணுக்கம் வாய்ந்ததாகும். சர்வ வல்லமை படைத்த காதலை தடைசெய்ய எவராலும் இயலாது. காதல், கடலைக் கடந்து விடும், மண்ணை மயக்கிவிடும். காதல் கதைகளை படிப்பதே நவீன இன்பம் பயப்பதாகும். காதலென்பது இயல்பாயுண்டாவதென்பது அறிஞர் பலர் அபிப்பிராயமாகும். ஆசிரியர் சுந்தரம்பிள்ளை இதையறிந்தே "இரும்பும் காந் தமும் பொருந்தும் தன்மைபோல் இருவர் சிந்தையும் இயல்பாயுருகி ஒன்றும் தன்மையேயன்றி ஒருவரால் ஆக்கப்படும் பொருளாமோ, காதல் அல்லது அழிக்கப்படும் பொருளாமோ?" என வினவுகின்றார். "மரணப்படுக்கையி லிருப் பவனுக்கு உயிரளிப்பதும் உண்மைக் காதலேயாம்.

காதலிலே கடவுளைக் கண்டவர்தான் அன்பிலே சிவனை கண்டவராவர். ஆதியிற் கிளர்ந்தது காதலுணர்ச்சி. பின்னை யதின் விகாரமே கடவு ளுணர்ச்சி. அன்பினாலேயே காதலை அடைய முடியும். புலவர் எல்லிஸ் (Ellis) Anteroticism in religion அருளியிருப்பதை கவனிக்க. காதலின் பத்திற்கு ஒப்பாகக்கூற உலகத்தின்கண் வேறு இன்பமுளதோ! "தாம் வீழ்வர் மென்றோட் டுயிலினுங் கொல்—தாமரைக் கண்ணானுலகு" என்பது இக் கருத்தையே உணர்த்துகின்றது. ஆகவே காதலின்றேல் இன்பமில்லை, இசை யில்லை, பொருளில்லை, சுருங்கக் கூறின் ஒன்றுமேயில்லை. பாடிய வாய் தேனூறும் பாரதியார் இக்கருத்தைக்கொண்டே,

"காதல், காதல், காதல்—இன்றேல்
சாதல், சாதல், சாதல்"—என்றியம்பினார் போலும்.




## நூறாண்டுப் போர்—பிரான்சில் ஆங்கிலேயர் செய்த கொடுமைகள்.

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

முதலாவது வேல்ஸ் இளவரசராக இருந்த எட்வர்டு II அரசர் இயற்கையாகவே சோம்பேறி. ஊக்கமற்றவர். தன் நிர் வாகம் முழுவதையும் தன் மந்திரியான மார்ட்டிமர் பிரபு (Mortimer) ஆட்டி வைத்தபடி இருந்து, பிரபுக்களையும், சேனைகளையும் அடக்கியாளும் திறமை யற்றிருந்தார். இந்த அழகில் இவர் மனைவி இஸபெல்லா என்பவளும் மார்ட் மர் வலையில் சிக்கி, இருவருமாக அரசனைச் சிறையிலிட்டனர். இந்த நிலைதான் ஸகாட் மக்களுக்கு வெற்றிகிடைக்க உதவியது. அவர்களும் முன் கதையில் சொல்லிய பிரகாரம் பானக்பர்ண் சண்டையில் வெற்றி பெற்றனர். பிறகு எட்வர்டின் மூத்த குமாரர் எட்வர்டு III ஆக முடி சூட்டப்பெற்று, அவருக்கு யுக்த வயதின்மையால் மார்ட்டிமரும் இஸபெல்லாவும் ரீஜண்டுகளாக ஆட்சி நடத்தினர். ஆயினும் பால்யரான எட்வர்டு IIIக்குத் தன் தாயின் கொடுமை தெரிந்தே தன் காலம் வரும் வரையில் காத்திருந்தார்!

வயதுவந்து, நிர்வாகத்தை வகித்ததுதான் தாமதம். மார்ட்டிமர் என்ற பாவியைக் கொன்றார்! தாயான இஸபெல்லா என்ற பேயைச் சிறையிலிட் டார்! ஏனெனில் "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" என்பது ஆன்றோர் வாக்கு. இதனால் அரசனிடம் அனுதாபங் கொண்ட பலருக்குச் சந்தோஷம் ஏற்பட்டது. இப்படியாக ஆட்சியில் நுழைந்த எட்வர்டு III காலத்தில் பல சம்பவங்களுள் ஸ்காட் மக்களுடன் யுத்தம்செய்து பிறகு தான் விரும்பி அவர்க ளுடன் சமாதானம்செய்துகொண்டு அவர்கள் சுவதந்திரத்தை ஆமோதித்ததும், பார்லிமெண்டுசபை தற்கால ரீதிப்படி பிரபுக்கள் சபை, (House of Lords) பொதுஜன சபை (House of Commons) என்று இரண்டாகப் பிரிந்ததும், தன் நாட்டின் செல்வப் பெருக்கத்திற்காக, அயல் நாட்டு, உள்நாட்டு வியா பாரிகளுக்கு வேண்டிய சாதனங்களை ஏற்படுத்தியும், விவசாய அபிவிருத் தியை நாடியும் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், பிரான்ஸுடன் யுத்தம் துவக்கியதும் நிரம்ப முக்கியமானவைகளாகும். அவற்றுள் அதி விசேஷமான நூறாண்டுப் போரைப் பற்றி எழுதுவது இக்கதையின் நோக்கமாகும்.

இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் தொடர்ந்து நூறு வருடங்களுக்கு யுத்தம் நடந்ததென்பது பொருளல்ல என்பதை முதலில் தெரிவிக்கவேண்டி யிருக்கிறது. சுமார் நூறு வருஷங்களுக்கு விரோதம் அதிகமாக இருந்து

இடை யிடையில் மும்முரமாய் சண்டைகள் நடைபெறுவதும், அயர்ந்து சமாதானம் செய்து கொள்ளுவதுமாக இருந்தது. ஆயினும் நூறு வருஷ விரோதத்தில் இங்கிலீஷ்காரர்களும், பிரஞ்சுக்காரர்களும் இருந்தனர் என்பதால் அந்தக் காலத்திற்கு நூறாண்டுப்போர் காலம் என சரித்திரத்தில் பெயர் வந்தது. இதற்குக் காரணங்கள் பல சொல்லப்படும். அவைகளில் முதலாவதாக, தன் முன்னோர்களில் பலருக்குப் பிரான்ஸின் பாதி ராஜ்யங்களுக்கு மேல் சொந்தமாக இருந்தன. தன்காலத்தில் மிகக் குறைவாக இருந்ததால் தன் முன்னோருடைய கௌரவ நிலைக்கு மீளவேண்டும் என்ற எட்வர்டு IIIன் ஆசையாகும். அதற்குச் சாதகமாக,

இரண்டாவது காரணமும் வந்தது. அச்சமயம் பிரான்ஸ் அரசன் புத்திர சந்தானம் இல்லாமல் இறந்ததால், அந்த அரசன் மகளான தன் தாய் இஸபெல்லா மூலம் தனக்கு பிரான்ஸ் பூராவும் சொந்தம் என்றார். தன் தாயிடம் வைத்த அன்பு எத்தன்மைத்து என்பது மேலே சொல்லப்பட்டது. "மூத்தாளும் முட்டுக்குதவுவாள்" என்பது பழமொழி யல்லவா? தனக்கு வேண்டிய போது தாயின் பேரைச் சொல்லிக் கொண்டார். ஆனாலும் பிரான்ஸில் சாலிக் சட்டம் (Salic Law) என்ற சட்ட அமுல்படி பெண்ணுக்கோ பெண் வார்சுக்கோ பிரான்ஸ் ராஜ்யம் கிடைக்க ஹேதுவில்லாமல் இருந்தது. ஆயினுமென்ன? "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு".

மூன்றாவதாக எட்வர்ட்டு III ஆரம்பத்தில் ஸ்காட்லாந்துடன் சண்டை செய்து சீக்கிரத்தில் சமாதானம் செய்துகொள்ள நேரிட்டதன் காரணம் ஸ்காட் மக்களுக்கு பிரஞ்சுக்காரர் செய்த உதவியாகும்! அதனால் அந்த பிரஞ்சுக்காரரைத் தண்டிக்கவேண்டும் என்றது ஒரு காரணமாகும். இதற்கேற்றவாறே பிரான்ஸில் கக்ஷி இரண்டாக இருந்ததால் ஒரு கக்ஷியினருடன் எட்வர்டு சேர்ந்து கொண்டார்.

நான்காவதாக கடலில் கப்பல் விடும்பொழுது சில பிரஞ்சு கப்பல்களுக்கும் இங்கிலாந்து கப்பல்களுக்கும் சச்சரவுகள் நேர்ந்தது. அப்படிச் சச்சரவு செய்த அவர்களைத் தண்டிக்கவேண்டியும் யுத்தம் ஆரம்பித்தாராம்.

ஐந்தாவதாக, தன் நாட்டின் முக்கிய கைத்தொழில் ஆட்டு பண்ணை வைத்து கம்பளம் சேர்த்து பிரான்ஸுக்கு வடக்கேயுள்ள ப்ளாண்டர்ஸுக்கு நெசவுக்காக அனுப்புவது என்பது பிரஞ்சும்ஜனங்களின் ஆதிக்கத்தில் பிளாண்டர்ஸ் ஜனங்களை பிரஞ்சுக்காரர் இம்சித்தனர். அதனால் இங்கிலாந்து வியாபாரத்திற்குத் தடை ஏற்பட்டது. அதற்காகவும் சண்டை ஏற்பட்டதாம்.

கடைசியாக எல்லாவற்றிற்கும் மிக அந்தரங்கமான முக்கிய காரணம் இங்லந்து சரித்திரத்தில் எக்காலத்திலும் உண்டு. "சிறங்கு பிடித்தவன் கையும், இரும்பு பிடித்தவன் கையும் சும்மாயிராதல்லவா?" என்ற பழமொழிப்படி இங்கிலாந்திலுள்ள பலசாலிகளான பிரபுக்களுக்கு வேலையில்லாம லிருந்தால் ஒருசமயம் தன்னை எதிர்ப்பார்களோ என்ற சந்தேகம் இருந்தது. காரணம், மெடில்டா, ஜான், ஹென்ரி III, தன் தகப்பனார் காலத்திய நிகழ்ச்சிகள் அவருக்கு நன்றாய் ஞாபகமிருந்தன. (தவிரவும் "வேதாளத்திற்கு வேலை கொடுப்பது" போல, உள் நாட்டில் கஷ்டத்தை விளைவிக்கின்றவர்களின் எண்ணங்களை வெளி நாட்டுக்குத் திருப்புவது ராஜ தந்திரமு மாகும் என்று



சில ராஜீய நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டு எழுதுவதுண்டு.) ஆகவே அந்தரங்கம் என்பது, எப்போதும் கையாளப்படும் பகிரங்க விஷயமாகும்.

(இந்தக் காரணங்களினால் ஏற்பட்ட நூறாண்டுப்போரின் சண்டை சமாதானங்களை விவரித்து எழுதிக்கொண்டே போவது இக் கட்டுரைத் தொகுதிகளின் நோக்கம் அல்ல ஆனதால் அவசியமாக இன்றியமையாத சில பொது விஷயங்களை மட்டும் குறிப்பிடுவோம்.)

எட்வர்டு III வது காலத்தில் சண்டை ஆரம்பித்து அவரது ஆயுட்காலத்திலேயே யிருந்த உன்னதமான நிலைமையும், சற்றுத் தாழ்ந்துபோன நிலைமையும் ஏற்பட்டு கடைசியில் வருத்தத்துடன் உயிர் துறந்தார். ஏனெனில் 1340—ல் Sliys (ஸ்லேஸ்) என்ற இடத்துக் கடற்சண்டையிலிருந்து ஆரம்பித்து க்ரெஸ்ஸி (Crecy) யில் 1346லும் நடந்த நிலச்சண்டை, பிறகு கலே (Calais) முற்றுகை. பிறகு பாய்ட்டியர்ஸ் சண்டை (1356)-ல் கடைசியாக ப்ரிடிக்னி (1360)-ல் சமாதானம் அக்காலத்திய முக்கிய சம்பவங்களாகும். மேற்சொன்ன சமாதானத்தின்போது ஆங்கிலேயர் பிரான்சின் அலங்கோல நிலையினால் பாதிக்கு மேற்பட்ட பாகத்திற்கு சொந்தக்காரர்களென ஒப்புக்கொள்ளப்பட்டனர். சிறை பிடிக்கப்பட்ட பிரான்ஸ் அரசர் John என்பவர் விடுதலை செய்யப்பட்டு ஆங்கிலேயருக்கு அடங்கி யிருப்பதாகப் பிரமாணம் செய்தார். இந்த நிலைமைக்குக் காரணம் எட்வர்டு IIIன் மூத்த குமாரன் எட்வர்டின் தைரியமும், ஊக்கமும் ஆகும். சதா கவசம் பூண்ட நிலையிலேயேயிருந்து எல்லாருடைய தோற்றத்திலும் கருப்பாக இருந்ததால் அவருக்கு சரித்திரத்தில் "கருப்பு இளவரசர்" "The Black Prince" என்ற புகழ்ப் பெயரும் உண்டு. அவர்தான் தனிமையிலிருந்து க்ரெஸி, பாய்ட்டியர்ஸ் சண்டைகளில் எதிர்பாராத வெற்றிகளைப் பெற்றார்! ஆயினும் தான் ஜெயித்துக் கொண்ட ராஜ்யங்களில் அவரும் அவருடைய கவசமணிந்த வீரப் பிரபுக்களும் செய்த கொடுமைகள் தனிச் சரித்திரமாகும். ஆயினும் அப்படிச் செய் துபாழ்ப்படுத்திய பிரதேசங்களில் உண்டான வறுமையாலும், பஞ்சத்தாலும், கருப்புச் சாவு (Black death) என்ற ஒரு கொள்ளை நோய் பிறந்து, எளிய மக்களில் பலர் காலன் வாய்ப்பட்டுப் பல குடும்பங்கள் பரதவித்தன! ஆனால் அதே கருப்புச் சாவிலேயே அந்தக் கருப்பு இளவரசனும் மாண்டான். அந்நோய் வீரர்களின் மூலம் இங்கிலந்திலும் புகுந்த விபரம் அடுத்த கதையில் தெரியவரும்.

மகனைப் பறிகொடுத்த எட்வர்டு III-க்கும் பிறகு அவர் பேரன் (கருப்பு இளவரசன் மகன்) ரிச்சர்டு II ஆண்டு அவனை சில பிரபுக்கள் எதிர்த்து சிம்மாசனத்தினின்றும் நீக்கி, தாயாதிகளான லங்காஸ்டர் வம்ச பிரபுக்கள் ராஜ்யம் பெற்றார்கள். அவர்களில் முதல் அரசன் ஹென்ரி 1V ஆவார். அவருக்கு தன் ஸ்தானததைப் பலப்படுத்திக்கொள்ளும் சரியாக வேலை இருந்ததால் பிரான்ஸை விட்டு வைத்தார்.

ஆனால் அவருடைய மகன் ஹென்ரி V என்பவர் பழைய காரணங்களையே சொல்லிக்கொண்டு பிரான்ஸின்மேல் படையெடுத்து நடத்திய பல சண்டைகளில் 1414—ல் அஜின்கோர்ட் சண்டை மிகப் பிரபலமானது. அதன் பிறகு 1420 நடந்த ட்ராய்ஸ் (Troys) சமாதானத்தின்படி அரசன் குமாரன் குழந்தையாயிருந்த ஹென்ரி VI பிரான்ஸ் அரசனாக ஒப்புக்கொள்ள[illegible]

முடியும் சூட்டப்பட்டது. ஆனால் 1422-ல் ஹென்ரி V இறக்க, அரசனுக்கு வயது போதாத காரணத்தினால் ரீஜண்டுகளின் ஆட்சி ஏற்பட்டு, அவர்கள் ஈவிரக்கமின்றி செய்த அக்கிரமங்களின் பலனாக பிரஞ்சுக் கட்சிகள் ஒன்றுபட்டு அவர்களின் வீரமும் ஒரு இடைப் பெண் Joan of Arc என்பவளால் தூண்டப்பட்டு, இங்கிலந்தின் உள்நாட்டிலேயே அதிகார வேட்டையினால் குழப்பமும் சண்டைகளும் ஏற்பட்டு பிரான்ஸை கவனிக்காததால், பிரஞ்சுக்காரர்கள் பூரண வெற்றிபெற்று ஆங்கிலேயருக்கு பூரா பிரான்ஸிலும் கலே என்ற பட்டணமே மிஞ்சியது. ஆயினும் நூறாண்டுப் போரின் பலன்களில் அவஸ்தைப்பட்ட பிரான்ஸ் நிலைமை சரிப்பட நூற்றைம்பது வருஷங்களாயினவாம்! ஓ போரே! உன் சக்திதான் என்ன?

## பக்தி இலக்கணம்.

:o:

ஒருவன் ஒரு கிணறு வெட்ட ஆரம்பித்தான்; இருபதடி ஆழம் வரையில் வெட்டிப் பார்த்தும் தண்ணீர் வராமையினாலே, அவன் அந்த இடத்தை விட்டு விட்டு இன்னொரு இடத்தில் இன்னும் சிறிது ஆழமாக வெட்டிப் பார்த்தான்; அங்கும் தண்ணீர் தென்படவில்லை. வேறொரு இடத்திலே இன்னும் அதிக ஆழமாக வெட்டினான். அங்கும் தண்ணீர் கிடைக்காததினாலே, கிணறு வெட்டவேண்டுமென்ற எண்ணத்தையே விட்டுவிட்டான். இம்மூன்று இடங்களிலும் இவன் வெட்டிய ஆழத்தை ஒன்று சேர்த்துப் பார்த்தால் அவன் ஏறக்குறைய நூறு அடி வெட்டி யிருப்பான். வெவ்வேறு இடமாக மாற்றாமல் முதல் இடத்திலேயே அவன் எடுத்துள்ள மொத்த சிரமத்திலே பாதி சிரமத்தையாவது எடுத்திருப்பானானால், கட்டாயமாகத் தண்ணீரைக் கண்டிருப்பான். அப்படியேதான் பக்தி விஷயத்திலுள்ள முயற்சியும். நாம் ஜயமடைய வேண்டுமானால் ஒரே வஸ்துவினிடத்திலே ஏகாக்கிரமனத்துடனே பக்தி செலுத்தவேண்டும். அது பயன்படுமா? பயன்படாதா? என்று சிறிதும் சந்தேகிக்கலாகாது.

ராமகிருஷ்ண பரமஹம்சர்.

## புத்தரும் அவரது தத்துவங்களும்

(வே. கோவிந்தசாமி.)

ஏறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன்னர் வட இந்தியாவில், இமயமலைச் சாரலில், கபிலவாஸ்து என்ற நாட்டில் சுத்தோதனர் என்ற அரசர் சாக்கிய வகுப்பிற்குத் தலைவராயிருந்தார். அவர் மனைவியின் பெயர் மாயாதேவி. அவருக்குச் சித்தார்த்தன் என்னும் அருமைப் புதல்வன் பிறந்தான். சித்தார்த்தர் இளமையிலேயே ஜீவகாருண்யமுடையவரா யிருந்தார். சித்தார்த்தருக்குத் தக்க வயது வந்த பின்னர் யசோதை என்னும் மங்கையை மணந்தார்.

சித்தார்த்தர் சிறிது காலமே இல்லற வாழ்க்கையிலிருந்தார். அவருக்கு ஒரு புதல்வனும் பிறந்தான். பின்னர் அவர் துறவு பூண்டார். ஏழு வருடங்கள் சென்றபின் அவர் போதி என்னும் மரத்தின் கீழ் ஞானத்தை யடைந்தார். தமக்கு புத்தி வந்ததாக எண்ணி "புத்தர்" என்னும் பெயர் புனைந்தார். தாம் அறிந்ததைப் பிறருக்கு அறிவிக்கும் பொருட்டு, வெளிப் போந்தார். அவர் ஒரு பிக்ஷுவின் கோலங்கொண்டு தமது நாட்டை யடைந்து தம் தகப்பனார், மனைவி, புதல்வர் முதலானவர்க்கு தமது கொள்கையை உபதேசித்தார். அவரது கொள்கைக்கு வியந்து அவரது சிஷ்யர்களாயினர்.

பிறகு புத்தர் நாடு முழுமையுஞ் சுற்றித் தமது புதிய மதத்தைப் பரவச்செய்தார். புத்தரால் ஏற்படுத்தப்பட்டமையின் அச்சமயம் "பௌத்த சமயம்" எனப்படும். அவர் ஜீவகாலத்தில் அநேகர் அவர் மதத்தைத் தழுவினார்கள். அநேக அரசர்கள் பௌத்த சமயத்தைக் கைக்கொண்டு ஆதரித்தனர்.

புத்தரது தத்துவங்கள் நான்கு. அவை (1) துக்கம், (2) துக்கோற்பத்தி, (3) துக்க நிவாரணம், (4) துக்க நிவாரண மார்க்கம்.

முதல் தத்துவம். துக்கம்:—கிடைத்தற்கரிய செல்வக்களஞ்சியம் என யாவரும் எண்ணும் இவ்வுலக வாழ்வு, தீராத் துன்பங்களும், சஞ்சலங்களும், நிறைந்துள்ள ஓர் துக்கசாகரமேயாகும். இத்தகைய சீர்க்கேரல வாழ்வில் வருத்தமும், உபாதிகளுமே தங்குகின்றன. இன்பமாக மதிக்கப்படும் பாகங்கள் யாவும் பறவைகள் சிறிது நேரம் தங்கிப் பறப்பதைப் போன்றன. அன்னையின் கருப்பத்தினின்றுந் தலைகீழாய்ப் பிறத்தலுந் துன்பமே, ஒன்று மறியாத குழந்தைப் பருவமும் வாலிபப் பருவமும் துன்பமே. முதிர்ந்த பருவத்தில் தமது சொல்லை எவரும் மதியாராகி, கைக்கோலையே கண்ணாகக்கொண்டு இரு

தியில் கோய்க்காளாகி யிறந்தாலும் துன்பமேயாம். இவைகளே நமது வாணுட்களை நிரப்புகின்றன.

மனைவியிடத்து வைக்கும் அற்புதஜையானது, இனியதே. ஆனால் நாம் அணைத்து முத்தந்தந்த விதழ்கள் எரிதழலை அணைக்க வேண்டிவரும்.

போரில் ஆண்மையுடன் போர் புரிதல் வீரத்தனமே. ஆயினும், முடிமன்னர்களது சதையும் எலும்புகளும், கழுகுகள் கொத்தித்தின்பதற் குரியனவே.

இவ்வுலகம் இன்பகரமானது. கானகங்களில் வசிக்கும் மிருகங்கள் ஒன்றையொன்று கொன்றுதின்று ஜீவிக்கின்றன. ஆகாயம் முழுவதும் நீலக்கல்லினால் நிறப்பப்பட்டுள்ளது. ஆனால் மனிதர்கள் பசியால் நைந்து வருந்துங் காலத்தில், ஒரு துளி ஜலமேனும் தருவதில்லை.

நோயாளிகளையும், புலம்புவோர்களையும், தளர்ச்சியுற்றுத் தனிமையாய்க் கைக்கோலையே கண்ணுகக் கொண்டுள்ளோர் தம்மையும் "நீங்கள் அவ்வாழ்க்கையை விரும்புகிறீரா" என்று கேட்பின், "இப் புவியில் பிறந்தவுடன் அழுந்தன்மை வாய்ந்த சிசு மிகவும் புத்தி கூர்மையுள்ளது என்று பதிலளிப்பர்.

**இரண்டாவது தத்துவம். துக்கோற்பத்தி:**—இந்திரியங்களுக்கு அபிமானத்தோடு கூடிய சம்பந்தமானது சீதோஷ்ண சுகதுக்காதிகளை உண்டுபண்ணுகிறது. ஆகையால் அப்பேர்ப்பட்ட அபிமானத்தோடுகூடிய விஷயேந்திரிய சம்பந்தங்களை அறவே யொழித்தலவசியம். இந்திரியங்களும் விஷயங்களும் அபிமானத்துடன் சம்பந்தப்படுவதால் ஆசை அல்லது காமம் உண்டாகிறது. நிலையற்ற வஸ்துக்களின் மீது நமக்கிருக்கும் பற்றினால் நாம் மதிதளர்கிறோம். மாயையின் வசமாகிறோம். இவ்வண்ணம் மயங்குவதால் சண்டை, சச்சரவுகளும்; காமம், பொய், களவு, அச்சம், அகங்காரம் முதலிய துர்க்குணங்கள் உண்டாகின்றன. துவரை விதைத்த விடத்தில் புல் பூண்டுகள் செழிப்பாக முளைகிறது. துவரை செவ்வையாக விளையாமலழிகிறது. புண்ணியத்தைப்புரிந்து ஈடேறுவதற்கு மாறாகப் பாவச்செய்கையே மேவிட்டு நரகமடைகிறான். கர்மம் மேவிட்டிருப்பதால், அதை யொழிப்பதற்கு மறு பிறவி எடுக்கிறான் பிறவி எடுக்குந்தோறும் பாவ மூட்டையைச் சேகரிக்கிறான், துன்பப் படுகுழியில் விழுந்து வருந்துகிறான்.

**மூன்றவது தத்துவம், துக்க நிவாரணம்:**—உயிரின்மீதும், மனைவி, மக்கள், தனதானியம், பொன், நிலம், மாதர் முதலியவைகளின் மீதுள்ள ஆசையை விட்டொழித்தல் வேண்டும். அறநெறியைக் கைப்பற்றி யொழுகல் வேண்டும். சத்யமும் சீலமும் உடைய வாழ்க்கையை யடையவேண்டும். தூய சிந்தை இருத்தல் வேண்டும். மிருதுவான வசனங்களைப் புகலவேண்டும். தனது உயிர் தனக்கு எப்படி எல்லாவற்றைக் காட்டிலும் இனிமையாகக் கருதப்படுகிறதோ, அம்மாதிரியே ஒவ்வொரு ஜீவனுக்கும், தனது பிராணன் இனிமையாயிருக்குமென்றெண்ணி யாதொரு பிராணிக்கும் எவ்விதத் தீங்கும் புரியாதிருக்க வேண்டும். மேற்கூறிய நெறிகளை நாம் நமது வாழ் நாட்களில் கடைப்பிடித் தொழுக வேண்டும். இவைகளே, இம்மையில், இவ்வுலகில் பெறுதற்கரிய நீடித்த புகழையும், மறுமையில் மோட்சத்தையும் அளிக்க வல்லதாகும். எனவே நன்னெறியைக் கைப்பற்ற நமக்குள்ள துக்கமொழியும். எவ்வண்ணம் எண்ணெ யின்றி விளக்கெரியாதோ, அது போல் துக்க மொழிந்தால் பிறத்தலும், இறத்தலும் ஒழியும்.



**நான்காவது தத்துவம், துக்க நிவாரண மார்க்கம்:**— நன்னெறியைக் கைப்பிடித்தொழுகலே துக்க நிவாரண மார்க்கமாகும். அதுவே நமக்குத் துக்கத்தை யொழித்து என்றுமழியாப் பேரின்பத்தைத் தரவல்லது. கீழ்க்கண்ட நற்குணங்களை ஒவ்வொருவரும் கைக்கொள்ளல் வேண்டும்.

(1) **ஜீவகாருண்ணியம்:**—யானை முதல் எறும்பீறாகவுள்ள பிராணிகளிடத்தும் கொடுமையை யொழித்துப் பிரியத்துடனிருத்தல் வேண்டும்.

(2) **தூயசிந்தை:**—நாம் எண்ணும் எண்ணங்கள் யாவும், பிறருக்கு எவ்விதத்திலும் தீமைபுரிவதாயிருக்கக்கூடாது. பிறருக்கு நன்மையையும், இதத்தையும் தரத் தக்கதா யிருத்தல் வேண்டும்.

(3) **நல்லுரை:**—நமது உதடுகளை அரண்மனை வாயிற் கதவுகளைப்போல் பாதுகாக்க வேண்டும். நமது வாயினின்று வெளிப்படும், ஒவ்வொருசொல்லும், சாந்தமானதாயும், இதத்தைத் தருவதாயு மிருக்கவேண்டும்.

(4) **நன்னடக்கை:**— நாம் செய்யும் ஒவ்வோர் செய்கையும், தீமையை யொழித்து மனச்சாட்சியை வகித்து, நன்மையைத் தரத்தக்கதாயிருக்க வேண்டும். வெள்ளிக்கம்பியில் கோர்க்கப்பட்ட பளிங்கு மணிகளையுடைய மாலையில், எவ்வண்ணம், வெள்ளிக்கம்பி நன்கு புலப்படுமோ, அதுபோல, கருணை அன்பு முதலிய நற்குணங்கள் நமது நற்செய்கைளால் தோற்றவேண்டும்.

(5) வாய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(6) மனச்சமாதானமுடையவராயிருக்க வேண்டும்.

(7) சித்தசுத்தி இருத்தல் வேண்டும்.

(8) மனோ வைராக்கியம். தன் பொறிகளையும் புலன்களையும் எவன் அடக்குவானோ அவனே வெற்றியடைவான்.

## புத்தர் ஏற்படுத்திய சிறு விதிகள்

(1) ஜீவஹிம்சை புரியாதே.

(2) கைம்மாறு கருதாது பிறருக்கு உன்னாலியன்றமட்டில் கொடு. பிறர் கொடுக்க நீயும் பெற்றுக்கொள். ஆனால் பிறர் பொருளை பேராசையாலும், துராகிருதத்தாலும், வஞ்சனையாலும் அபகரிக்க எண்ணாதே.

(3) பொய் பேசுவதொழி; பொய்க்கரி புகலாதே. கோள் சொல்லாதே.

(4) மதுபானத்தை விலக்கு. அது தீங்கையே விளைவிக்கும்.

(5) பிறர் மனைவியை விழையாதே.

(6) உலக வாழ்க்கையின் நோக்கம் பிறருக்கு உதவி புரிதலேயாம்.

புத்தர் தத்துவங்களைக் கடைப் பிடித்தொழுகும் ஒவ்வொருவரும், ஞானாகவும், அருளிற்கும், அன்பிற்கும் இருப்பிடமாகவு மிருப்பர்.

ஓம்தத் ஸத்.

# வணிக தர்மம்.

("கலாவதி")

[ஆங்கிலப் பேரறிஞராகிய Ruskin ஆசிரியர் எழுதிய "Unto This Last" என்னும் நூலின் மொழி பெயர்ப்பு.]

## 4. வியாபார நீதி.

*"கூலி கொடாமையும், அதனை உரியகாலத்தே கொடாது தாழ்த்தலும் செய்தலாகாது."*

—சுக்கிர நீதி.

செல்வத்தின் நன்மை மட்டுமன்றி அளவும் நீதியைப் பொறுத்தே என்பது முன் காட்டப்பட்டது. இவ்வத்தியாயத்தில் பொருளாதார சம்பந்தமான நியாயங்களில் முக்கியமானதாக, உழைப்புக்கு நியாயமான கூலி எது என்பதை ஆராய்வாம்.

பணம் உழைப்புக்கு உரிமையையே குறிப்பது என்பது முன்னர் விளக்கப்பட்டது. ஒருவனுக்கு நாம் பணத்தைக் கூலியாகக் கொடுப்பது, உண்மையில், அவன் நமக்குச் செய்த அளவு வேலை அவனுக்கு நாம் செய்தோ அல்லது செய்வித்தோ தருவோம் என வாக்குறுதி செய்வதேயாம். அவன் எமக்குச் செய்த வேலையினுங் குறைந்த அளவே செய்ய ஒப்புக்கொண்டோமாயின் கூலியைக் குறைத்தவர்களாவோம். அவன் எமக்குச் செய்த வேலையினுங் கூடவே செய்து தர ஒப்புக்கொண்டால் கூலிக்கு அதிகமாகவே கொடுத்ததாகும். வழக்கத்தில், கூலிவேலை செய்வோர் இருவரும் செய்விப்போர் ஒருவரும் ஆயின் கூலியாளர் ஒருவரின் ஒருவர் குறைந்த கூலிக்கு வேலைசெய்ய வருவதாக முந்துவர். இருவருள்ளும் குறைந்த கூலி கேட்பவரே குறித்த வேலையைச் செய்து குறைக் கூலி பெறுவர். வேலை செயவோர் ஒருவரும் செய்விப்போர் இருவருமாயின் செய்விப்போர் ஒருவரின் ஒருவர் அதிக கூலி தருவதாக முந்துவர். இருவரிலும் அதிககூலி தருபவரே வேலை செய்வித்துக்கொண்டு அதிக கூலி அளிப்பர்.

இந்த அநீதி இரண்டையும் ஒன்றன் பின் ஒன்றாக ஆராய்வாம். ஆனால் இவை இரண்டிற்கும் இடையில் நியாயமான கூலியின் தன்மையை முதலில் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். நாம் ஒருவனை எமக்காக ஒரு வேலையைச் செய்து தரும்படி கேட்டால் அவன் அதை இலவசமாகச் செய்து தாலாம்; அல்லது கூலி கேட்கலாம். கைம்மாறு கருதாது செய்யப்படும் சேவை அன்பைப் பற்றியதாய், கொடுக்கல் வாங்கலிற் சேராமையால் அதைக் குறித்து ஈண்டு ஆராய்ச்சி இல்லை.

**வேலைக்குக் கூலி கொடுக்குமிடத்து, நேரத்துக்கு நேரம், பலத்துக்குப் பலம், திறமைக்குத் திறமை திரும்பக் கொடுக்கக் கடமைப்பட்டவராகிறோம். ஒருமணி நேர வேலைக்குப் பதில் அரைமணி நேர வேலையே அளித்தால் நாம்**



நியாயமற்ற நயம் அடைகிறோம். இதற்கு மாறாக ஒருமணி நேர வேலைக்குப் பிரதியாக ஒன்றரைமணி நேரம் வேலைசெய்ய ஒப்புக்கொண்டால் மற்றவர் நியாயமற்ற நயம் அடைகிறார். பிரதிபலன் முதல் வேலைக்குச் சரி யொத்திருப்பதே நியாயம் ஆகும். இரு தரப்பினரின் தராதரங்களையும் கவனிக்க வேண்டுமாயின் நயம் கூலிக்காரன் பக்கமே சிறிது சாரலாம். என்னிலும் வறியவன் ஒருவன் இன்று எனக்கு ஒருநாழி நெல் தந்தால் நாளை நான் அவனுக்கு ஒரு நாழியிற் குறையக் கொடுப்பதற்கு அவன் வறுமை நியாயமாவது எப்படி? ஒருவன் எனக்கு உழைப்பதில் ஓரளவு திறமையையும் அறிவையும் உபயோகித்தால், நான் அவனிலும் கல்வி யறிவில் மேம்பட்டவன் என்பதற்காக, நான் பதில் வேலை செய்வதில் அவன் எனக்காகப் பிரயோகித்ததினும் குறைந்த அளவு திறமையையும் அறிவையும் பிரயோகிக்க வேண்டுமா? அவன் ஏழை என்பதற்காக நான் பிரதிபலன் அளிக்குமிடத்துச் சற்றுக்கூடவே அளிப்பது பெருந்தன்மை ஆகும். ஆனால் ஈண்டு நாம் ஆராய்வது பெருந்தன்மையின் இயல்பை அல்ல; நீதியின் தன்மையே. சரியொத்த பிரதிபலன் அளிப்பதே நீதி.

சரியொத்த பிரதிபலன் கொடுக்க வேண்டியதைக் கணக்கிடுவதில் ஒரு விஷயமே சிக்கல் ஏற்படுத்துகின்றது. விதை முதல் போலவே சரியான வழியில் செய்யப்பட்ட வேலையும் பன்மடங்கு பலன் தருவதாதலின் இந்த லாபத்தையும் சேர்த்துக் கணக்கிட்டு இதற்கும் உழைப்புக்கூட்டி அளிப்பது நியாயமே. ஒரு வருடத்துக்கோ அல்லது வேறு குறித்த காலத்துக்கோ இந்த வாசியை (சற்று ஏறக்குறையக்) கணித்துக் கொள்ளலாம். ஆனால், பிரதிபலன் பணமாகக் கொடுக்கப்படுமிடத்து காலத்தைப்பற்றிக் கணக்கிட வேண்டாம். பணம் கூலியாகப் பெறுபவன் விரும்பினால் உடனே அப்பணத்தைச் செலவிட்டுப் பிரதிபலனை உடனே பெற்றுக்கொள்ளலாம்; அல்லது எவ்வளவு காலத்துக்காயினும் வைத்திருந்து பிறகு செலவிடலாம். இதில் காலம் கணக்கிற் சேர்வதில்லை. ஆயினும், பொதுவாக, வேலை முதல் தருபவர் சிறிது இலாபம் பெறுவதே முறை. ஆகவே, இன்று நீ எனக்காக ஒரு நாழிகை வேலை செய்தால் நீ கேட்டநேரம் நான் உனக்காக ஒரு நாழிகை 5-விநாடி வேலை செய்வது; இன்று நீ எனக்கு ஒரு நாழி நெல் அளித்தால் நீ கேட்ட நேரம் நான் உனக்கு ஒரு நாழியே அரை ஆழாக்குக் கொடுத்துத் தீர்ப்பது; இன்னும் இப்படியே. ஆனால், குறைந்த பட்சம் பிரதிபலன் செய்யப்பட்ட உதவிக்குக் குறைவில்லாததாக இருக்க வேண்டும் என்பதே நீதி.

ஆகவே, நியாயமான கூலியாவது, கூலியாளன் செய்த வேலைக்குக் குறைவில்லாத அளவு வேலை (அல்லது இன்னும் சிறிது அதிகமாகவே) அவன் செய்வித்துக் கொள்வதற்குப் போதிய அளவு பணமே. இந்த நியாயமான கூலி ஒரு வேலையைச் செய்யப் பலர் சித்தமாயிருக்கு மதனாற் பாதிக்கப்படாது. என் கலப்பைக்கு ஒரு கொழு வேண்டும். இருபது கொல்லர் அல்லது இருபதினாயிரர் அதைச் செய்யச் சித்தமாக இருக்கலாம். ஆனால் அவர் தொகை அதைச் செய்யும் ஒருவனது கூலியை இம்மியளவும் பாதிக்காது. அவன் அதைச் செய்வதில் தன் வாழ்க்கையில் கால்மணி நேரத்தையும் ஓரளவு தேக பலத்தையும் திறமையையும் செலவிட்டிருக்கிறான். ஆகவே நான் எப்பொழுதாவது அவனுடைய தேவையைப் பூர்த்தி செய்ய அவ்வளவு நேர

மும்—இன்னும் சில நிமிஷங்கள் அதிகமாகவும், அவ்வளவு பலமும் திறமையும்—இன்னும் சிறிது அதிகமாகவும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவே நியாயமான கூலி கொடுத்தலின் தத்துவம். ஆனால், அனுபவ வழக்கில், செய்யப்பட்ட வேலை குறிப்பிட்ட ஒன்றேயாக, கூலி பொதுவாக எந்த வேலை வேண்டுமாயினும் செய்வித்துக் கொள்ளும் உரிமையாக இருப்பதனால் இவ்வேற்றுமை கூலியின் அளவை மட்டுப்படுத்தும். கூலியாக அளிக்கப்படும் பணம் தேசத்தில் எவரைக் கொண்டும் எந்த வேலையாவது செய்விக்கும் உரிமையைத் தருகிறது. இது ஒரு குறித்த தேவையை மட்டுமன்றி எந்தத் தேவையையாவது பூர்த்தி செய்ய உபயோகப்படுதலின் இவ்வுரிமை ஒரு குறித்த வேலையை மட்டும் செய்விக்கும் உரிமையினும் பெரிதும் விரும்பி ஏற்கப்படுவதாம். ஆதலின் இப்போது வேலையில் குறைந்த அளவும் ஒரு குறித்த வேலையின் கூடின அளவுக்குச் சரியாகக் கருதி ஏற்கப்படும். வினைவலாளன் எவனும் தேசத்து வேலையில் ½-மணி உழைப்புக்கு அல்லது அதிலும் குறைந்த நேர உழைப்புக்கு உரிமை பெறத் தன் நேரத்தில் ஒருமணி நேரங் கொடுக்க எப்பொழுதும் சித்தமாயிருப்பன். இதுவும், திறமைக்கு அளிக்க வேண்டிய பிரதிபலன் இவ்வளவென மதிப்பிடுவது கஷ்டசாத்தியமாயிருப்பதும் ஒரு குறித்த வேலைக்குக் கூலியாகும் பணம் இவ்வளவு என நிச்சயிக்கும் வேலையைச் சிக்கலாக்குகின்றன. ஆனால் இவை வேலை மாற்றுத் தத்துவத்தைத் பாதிப்பதில்லை. ஒரு குறித்த வேலையின் பெறுமதியை நிச்சயிப்பது கஷ்டமாகலாம். ஆனால் அதற்கு நிதானமான உண்மையான மதிப்பு ஒன்று உண்டு. இதனை அணுவளவும் பிசகாது அளவிட்டு அறிதல் முடியாதாயினும் நமது தினசரி வாழ்க்கையில் அனுசரிப்பதற்குப் போதியவளவு நுட்பமாகக் கணித்துக்கொள்ள முடியும்.

ஒரு குறித்த அளவு வேலையின் கூலி இன்னதென்று நிச்சயமாய் விட்டதாகக் கொள்வோம். இனி, இந்த நியாயமான கூலியைக் கொடுப்பதனாலும் அதைக் குறைப்பதனாலும் ஏற்படும் பலாபலன்களை ஆராய்வோம்.

ஒரு வேலையைச் செய்ய இருவர் (அல்லது பலர்) முன் வந்த இடத்திலே தான் குறைக்கூலி அளிக்கச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. வேலை செய்விப்பவன் கூலியாளரில் குறைந்த கூலிக்கு ஒருப்படுபவனையே வேலைக்கு ஏற்பதாகக் கூறி இருவரும் போட்டியிட்டுக் கூலியைக் குறைக்கும்படி செய்கிறான். இருவருள்ளும் குறைந்த கூலி கேட்பவன் அரைக்கூலி பெற ஒருப்படுவதாகக்கொள்வோம். வேலை செய்விப்பவன் இவனை வேலைக்கு அமர்த்திக்கொண்டு மற்றவனை அனுப்பி விடுகிறான். நீதி தவறாமல் இருவருள்ளும் திறமை மிக்கவனுக்கு நியாயமான கூலி கொடுத்து வேலை செய்வித்தாலும் ஒருவன் கூலி பெற மற்றவன் கூலி பெறாமையால் பட்டினி கிடப்பதுபோலவே, நீதிதவறிக் குறைந்த கூலி கேட்பவனை வேலைக்கு அமர்த்துமிடத்தும் ஒருவன் கூலி பெறாமையால் பட்டினி கிடப்பது தப்பாது.

குறைக்கூலி கொடுத்தவன் கையில் அரைக்கூலி எஞ்சியிருக்கும். இது கொண்டு இன்னொருவனை இன்னொரு வேலைக்கு அரைக் கூலிக்கு அமர்த்துவான். இருவர் ஒருவனுக்கு வேலை செய்ய இருவர் வேலை இல்லாமல் இருப்பர்.



நியாயமான முறையில் முதல் வேலைக்கு உரிய கூலி முழுவதும் அது செய்தவன் கையில் சேரும். செய்வித்தவன் கையில் குறைப்பணம் எஞ்சி நில்லாமையால் அவன் இன்னொருவனை வேலைக்கு அமர்த்த முடியாது. அவனது அதிகாரம் எவ்வளவுக்குக் குறைவு வருகின்றதோ அவ்வளவுக்குக் கூலியாளனது செல்வாக்கு அதிகரிக்கின்றது. இவன் தான்பெற்ற கூலியைக்கொண்டு இன்னொருவனை வேலைக்கு அமர்த்தக்கூடியவனாகின்றான். இவன் நீதியாக நடத்தப்பட்டாலும் தான் நீதியாக நடந்து கொள்ளாமல் தனக்கு வேலை செய்பவனுக்கு அரைக்கூலியே கொடுப்பான் என்று கொண்டாலும் இதன் பெறுபேறு பின் வருமாறாம்: ஒருவன் முதலாளிக்கு முழுக் கூலிக்கு வேலை செய்கிறான்; இன்னொருவன் தொழிலாளிக்கு அரைக்கூலிக்கு வேலை செய்கிறான்; இருவர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இவ்விருவரும் நியாயமான முறையிலும் சரி அநீதியான முறையிலும் சரி வேலை இல்லாமல் இருப்பர் என்பது முன் காட்டப்பட்டது. நீதியான முறைக்கும் அநீதியான முறைக்கும் உள்ள வித்தியாசம் எத்தனை பேர் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்பதில் அல்ல; கொடுக்கப்படும் கூலியின் அளவிலும் வேலை செய்பவர் யார் என்பதிலுமே யாம். அநியாய முறையில் இருவர் ஒருவனுக்கு வேலை செய்கின்றனர் நியாயமான முறையில ஒருவன் முதலாளிக்கு வேலை செய்ய இவ்வேலை செய்தவனுக்கு இன்னொருவன் வேலை செய்கிறான். இன்னும் இவ்வாறே. இதில் பணத்தின் செல்வாக்கு நீதியால் முன்னேறியும் அநீதியால் தடையுற்றும் செல்வதாகும்.


இவ்விஷயத்தில் நீதி பணத்தின் செல்வாகதை ஒரு மனிதன் கையில் விட்டு வைக்காமல் முறைமுறையே பலர் கையில் கொடுத்துப் பரப்புகிறது. பணத்தின் செல்வாக்கு இருமுறைகளிலும் ஒரு அளவே. ஆனால் அநீதியால் அது முழுவதும் ஒருவன் கையிலேயே கிடக்கிறது. அவன் தன்னைச் சூழ்ந்தவர்களது உழைப்பை யெல்லாம் தன் விருப்பப்படி செலுத்துகிறான். நீதியான முறையில் ஒவ்வொருவனும் வேறு ஒருவனது உழைப்பை மட்டுமே பாதிக்க முடிகிறது. பணம் பலர் கைப்புகுந்து தன் சக்தி தேய்ந்து அழியும் வரை அவர்க்கெல்லாம் பயன் அளித்துச் செல்கின்றது.

நீதி இருவிதங்களில் பணத்தின் செல்வாக்கைக் குறைக்கிறது. முதலாவது அதிபோக போக்கியப் பொருட்களைச் சேர்ப்பதிலும், செல்விக்கையிலும், தனிகன், தன்னயத்துக்குப் பெருந்தொகையினரான மனிதரை உழைக்கச் செய்யவும் அநேக ஜனங்களின் விருப்பத்தைத் தன் விருப்பத்திற்கு அமையச் செய்யவும் முடியாதபடி செய்கிறது. இரண்டாவது, இன்னும் முக்கியமாக, குறைக்கூலி முறை, ஒருவனுக்கு வேலை செய்பவர் கூட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் தன் தன் நிலையை உயர்த்துவதை எவ்வளவு கஷ்டசாத்தியமாக்க முடியுமோ அவ்வளவு கஷ்டசாத்தியமாக்குகின்றது; இம்முறை முன்னேற்றத்தைத் தடுக்கும் பாங்குள்ளது; நீதியான கூலி முறையோ, முறைமுறையே பலதரப் படிகளில், பல வேலைகளுக்குக் கூலியாகப் பகுத்தளிக்கப்படும் பணத்தின் செல்வாக்கைக்கொண்டு உயர்நிலை எய்த விரும்பும் தன் நிலைமையை உயர்த்திக்கொள்ளப் போதிய சாதனம் அளிக்கின்றது.

இதனால், நியாயமான கூலிமுறை செல்வத்தின் அதீத பலத்தைக் குறைப்பது மட்டுமல்ல; வறுமையின் பலஹீனத்தையும் போக்குகின்றது.




## “எப்போதுமில்லை”



இரண்டாம் விலைக்கு மோட்டாரை வாங்குமாறு அதைப் பரிசோதிக்க—வாங்குபவரும் மோட்டார் சொந்தக்காரரும் கொஞ்சத் தூரம் போய்த் திரும்பி வந்தார்கள்.

வாங்குபவர் :—“என்ன உங்கள் வண்டி லொட லொடவென்று சத்தமிடுகிறது. எப்போதும் இப்படித்தான் சத்தமிடுமா?”

மோட்டார் சொந்தக்காரர்:—“அப்படி யில்லை அது ஓடும்போது தான் இப்படிச் சத்தமிடும்.”

***

## “காதலா பணமா”



காதலி:—“உங்களுக்கு ஒரு லக்ஷ ரூபாய் வாங்கிக்கொள்ள இஷ்டமா அல்லது என்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ள இஷ்டமா என்று ஒருவர் உங்களைக் கேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்கள்”

காதலன்:—“ஒரு லக்ஷ ரூபாய்தான் இஷ்டமென்று சொல்வேன்!”

காதலி:—“பார்த்தீர்களா! ஆண்களுடைய சிநேகத்தை”

காதலன்:—“ஒரு லக்ஷ ரூபாய் எனக்குக் கிடைத்துவிட்டால் நீ என்னைக் கலியாணம் செய்து கொள்வதற்குத் தன்னாலே ஓடி வருவாயே”

***

**கே:—நரிக் கரையில் ஒரு அரசன் உலவி வருவது எப்படி யிருக்கும்?**

**ப:—செம்படவ ராஜனைப் போலிருக்கும்.**

## “பஞ்சத்தின் காரணம்”



தடித்தவர் :—“என்னையா! உங்கள் நாட்டில் கடும் பஞ்சமாமே!”

மெலிந்தவர்:—“ஆம் ஆனால் பஞ்சத்திற்குக் காரணம் என்னவென்று எங்களுக்குத் தெரியாதிருந்தது. இப்போது உங்களைப் பார்த்தபின் தான் பஞ்சத்திற்குக் காரணம் நீங்களென்பது நன்றாய்த் தெரிகிறது.”

***

## “செய்தி சொல்லல்”



முதலாளி:—“சுவர் இடிந்து விழுந்ததைக் கண்டிராக்டரிடம் சொன்னீர்களா?”

கூலியாட்கள்:—“அவரிடம் சொல்லவேண்டுமென்றே அவசர அவசரமாய் வேலை செய்கிறோம். அவர் இதற்கடியிலேதான் கிடக்கிறார்.”

***

## “பசி மருந்து”




மனைவி:—“பேப்பரில் என்னதானிருக்கிறதோ தெரியவில்லை. சாதம் போட்டு அரைமணி நேரமாகிச் சாதமும் குளிர்ந்துபோய் விட்டது. நீங்கள் சாப்பிட வருகிறீர்களா இல்லையா?”

கணவன்:—“பசி யுண்டாக்கும் லேகிய விளம்பரத்தைப் படித்துக்கொண்டிருக்கிறேன். பசியுண்டானவுடன் வந்து விடுகிறேன்.”

***

கமலா:—இந்த அட்டிகை மிகவும் துரதிர்ஷ்டமுள்ளதென சந்தேகிக்கிறேன். இதை இதற்கு முன் அணிந்திருந்த மூன்று பெண்களும் தற்கொலை செய்து கொண்டார்கள்.

விமலா:—அப்படியானால் இது விஷயம் உன் புருஷன் தெரிந்தும் வேண்டுமென்றே வாங்கி யிருப்பார்.



"கோர்ட்டு விவகாரம்"

சிநேகிதர்:—"மூன்று வருஷம் அதிகப் பணம் செலவு செய்து இந்த வீட்டிற்காக வியாச்சியம் நடத்தினீர்களே—இப்போது இந்த வீடு உங்களுக்குச் சொந்தமாகி விட்டதா?"

மற்றவர்:—"எனக்குச் சொந்தமாகவில்லை. எனக்காக வழக்கு நடத்திய வக்கீலுக்குச் சொந்தமாகி விட்டது."

* * *

"உத்தரவாதம்"



பெண்:—"சரிதான். ஆனால் இந்தக் கூந்தல் வளரும் தைலத்தைத் தேய்ப்பதனால் கூந்தல் வளரும் என்பதற்கு என்ன அத்தாக்ஷி?"

கடைக்காரன்:—என்ன அம்மணீ! கூந்தல் வளரும் என்பதற்கு உத்திரவாதமாக ஒவ்வொரு புட்டியுடனும் ஒரு சீப்பு ஒன்று கொடுக்கிறோமே அது போதாதா?"

* * *

காதலி:—நான் உன்னை ஒருக்காலும் கலியாணம் செய்துகொள்ள முடியாது. ஆகையால் என்னை மறந்து விடு.

காதலன்:—ஓ! முடியாது நான் ஞாபகசக்திக்காகப் பரிசு வாங்கினவன். ஆகவே உன்னை மறக்க முடியாது.

காதலி:—அது முடியாவிட்டால் நான் இப்பொது சொன்னதையும் மறக்காதே.

* * *


கே:—குட்டிச் சுவரில் முட்டினும் பலன் அடைபவர் யார்?

ப:—சுவரொட்டி விளம்பரக்காரர்.

* * *

தந்தை:—குழந்தாய் இன்று புதிதாகப் பள்ளிக்கூடம் சென்றாயே எப்படி யிருக்கிறது.

குழந்தை:—பொதுவாக எல்லாம் தமாஷாக இருக்கிறது. பையன்கள் எல்லாம் விளையாடுகிறார்கள். ஆனால் ஒரு பெரிய பையன் தனியாக நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு தூங்குகிறான். என்னை அந்தப் பெரிய பையன் "தற்காலீகமாக அங்கு உட்கார்!' என்றான். நானும் உட்கார்ந்தேன். இதுவரையும் அந்தத் தற்காலீகம் தீராததால் வந்து விட்டேன்.




கிரேட் பிரிட்டன் தங்க அளவை கைவிட்டதிலிருந்து இதுவரையில் 119,18,19,777 ரூபாய் பெருமான தங்கம் பம்பாயிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாயிருக்கிறது.

* * *

கும்பகோணம் வெற்றிலைக்குக் கல்கத்தா மார்க்கட்டில் நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கிறதாம்.

* * *

ஜலந்தரைச் சேர்ந்த ஒரு ஜமீன்தார் 6 வயதுள்ள தமது மகளை 40 வயதுள்ள ஒரு ஜமீன்தாருக்குக் கலியாணம் செய்து கொடுத்தாராம்.

* * *

இங்கிலாந்தில் பழவர்க்கங்கள் உற்பத்தி செய்வதற்கெனச் சுமார் 30 லக்ஷம் பொன் மூலதனத்துடன் ஒரு கம்பெனியை ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

* * *

லிண்டா, மரியா என்ற இரண்டு அரபிப் பெண்கள் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தார்கள். இவர்களில் ஒருபெண் மனத்தில் நிகழும் எண்ணங்களை மற்றப்பெண் அறிந்து விடுகிறாள்.

* * *

உலகத்திலுள்ள மிகப் பெரிய ரயில்வேப்பாலம் கானடாவிலுள்ள கியூபெக் ரயில் பாலமாம். இதற்கு 35 பேர்கள் சேர்ந்து 7500 பவுன் மதிப்புள்ள 7800 காலன் வர்ணம் பூசி யிருக்கிறார்களாம்.

* * *

ஒரு இந்தியர்—தமிழர் ஒரு அரிசியில் முப்பது எழுத்துக்கள் எழுதி யிருக்கிறாராம்.

* * *

அமெரிக்காவிலுள்ள விக்டோரியா அருவி நீர் வீழ்ச்சியின் சப்தம் 17 மைல் தூரம்வரை கேட்கிறதாம்.

* * *

ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் வண்டி இடைவிடாமல் பிரயாணம் செய்தால் 6 மாத காலத்தில் சந்திரலோகம் போய்ச் சேரலாமாம்.

* * *

உத்தர துருவப் பகுதியில் மனிதர்கள் இரண்டு மைல் தூரத்திலிருந்தும் சம்பாஷணை செய்யலாமாம்.

* * *

தங்களுடைய குறைகளை அரசாங்கத்தார் கவனித்துத் தீர்க்காவிட்டால் அல்பெர்டிவிலிருந்து வின்னிபெக் வரை (1000 மைல்) நிர்வாணமாகவே ஊர்வலம் செய்யப்போவதாக நிர்வாண சங்கத் தலைவர் சர்க்காரைப் பயமுறுத்தி யிருக்கின்றாராம்.




**உலகிலேயே பெரிய மரம்:—**

ஐரோப்பாவில் போஸ்னியா மலைப் பகுதியில் ரான்கோவிச் என்ற கிராமத்தில் உலகிலேயே மிகப் பெரிய ஓக் மரம் ஒன்று இருக்கிறதாம். அதன் சுற்றளவு 11 கஜத்திற்கு அதிகம். அது உள்ளே துவாரமா யிருக்கிறது. அதன் அடியில் மழைக்காலங்களில் ஒரு சேனை அல்லது ஆட்டு மந்தை தாராளமாகத் தங்கலாமாம்.

***

**கலியுக பகாசுரன்:—**

சட்சாக் என்னும் ஊரில் ஒரு ரொட்டிக்காரன் இருக்கிறான். இவனுடைய ஒருவேளை உணவு 7 ராத்தல் இறைச்சி, 5 ராத்தல் கூழ், ஒரு காலன் குழம்பு, ½ காலன் பிராந்தி. இந்தக் கலியுக பகாசுரன் யாராவது பந்தயம் கட்டுகிறவர்கள் இருந்தால், ஒரு முழு ஆட்டையும், ஒரு பீப்பாய் பீர் சாராயத்தையும் ஒரே தடவையில் சாப்பிட்டு விடுகிறேன் என்று சொல்லுகிறானாம்.

***

**க்ஷவரப் போட்டி:—**

க்ஷவரம் செய்வதில் நடந்த உலகப் போட்டியில் இதுவரையில் முதன்மை பெற்றவன் நியூயார்க் (புருக்லின்) நகரிலுள்ள ஒரு மயிர் வினைஞனே. அவன் 26½ விநாடிகளில் க்ஷவரம் செய்தானாம். இப்பொழுது பெல்கிரேடு மயிர் வினைஞன் 24 விநாடிகளுக்குள் அழகாக முக க்ஷவரம் செய்துவிட்டானாம். இப்போட்டி பெல்கிரேடு மயிர் வினைஞர் சங்கத்தாரால் நடத்தப்பட்டது.

***

**எரிமலையில் ஒட்டல்:—**

ஹவாயி தீவில் கிலாவுவா என்று ஒரு எரிமலை இருக்கிறது. இதன் உச்சியில் "வால்கானோ ஹவுஸ்" (Valcano House) என்ற பெயருடன் ஒரு ஓட்டல் இருக்கிறது. உலகத்திலுள்ள சாதாரண ஓட்டல்களைவிட இது விநோதமாயிருக்கிறதாம். இந்த ஓட்டல் இப்பொழுது புதுப்பிக்கப்பட்டு வேறு மாதிரியாக அமைக்கப்படுகிறது. இந்த எரி மலையைப் பார்ப்பதற்காக அடிக்கடி யாத்திரிகர்கள் உலகத்தின் பல பாகங்களி லிருந்தும் வருகிறார்கள். அவர்களுக்கு இது மிகவும் சௌகரியமாயிருக்கிறதாம்.

***

**நான்கு கஜம் தலைமயிர்:—**

பின்லந்து நாட்டில் ஒரு மனிதனுக்கு நான்கு கஜம் அதாவது எட்டு முழ நீளம் தலைமயிர் வளர்ந்திருக்கிறதாம். அவன் தனது கழுத்தில் ஒரு பையை மாட்டி அதில் சுற்றி வைத்திருக்கிறானாம். அவனுக்கு வயது 108. ஆனால் நாற்பது வயதுள்ளவன்போல் நல்ல பலசாலியாக இருக்கிறானாம். அவன் உத்தர சமுத்திரப் பகுதியில் வேட்டையாடுவதில் பெயர்பெற்றவனாம்.

# ஆசிரியர் குறிப்புக்கள்.

## ஞானியாரின் கதர்ப்பற்று

சென்ற மாதம் நிகழ்ந்த தேசிய வாரத்தை யொட்டித் திருப்பாதிருப்புலியூர் ஞானியார் ஸ்வாமிகள் தமது மடாலயத்தில் கதரின் மகிமை என்பதுபற்றி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்திய செய்தியை நேயர்கள் உணர்ந்திருக்கலாம். ஞானியார் ஸ்வாமிகள் கல்விக் கடல். தத்துவக் களஞ்சியம். பிரசங்க கேசரி. இத்தகைய பெரியார் கதர் விஷயத்தில் கருத்தைச் செலுத்தியது தமிழகம் செய்த தவப்பயனே யாகும். ஒரு சில மடாதிபதிகள் தாங்கள் துறவிகள் என்பதை அறவே மறந்து அந்நியநாட்டுப் பட்டு—பீதாம்பரங்களிலும், ஆடம்பரங்களிலும் அதி மோகங்கொண்டு அலைகின்றனர், கதர் அணிவது ராஜத் துரோகம் என்றும் கருதுகின்றனர். இத்தகைய விபரீத மனப்பான்மைகொண்ட மடாதிபதிகட்கு நமது ஞானியார் ஸ்வாமிகள் வழிகாட்டிகளாக விளங்குவது கண்டு அவர்களைப் பெரிதும் போற்றுகின்றோம். மற்றவர்களும் ஸ்வாமிகளைப் பின்பற்றித் தேசிய தர்மத்தைக் காப்பாற்றுவார்களாக.

***

## பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டி

எதிர்பார்க்கப்பட்ட பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டி நியமனம் ஆகிவிட்டது. "பிரதிநிதிகள்" எல்லாரும் சீமைக்குப் போயிருக்கிறார்கள். இக்கமிட்டியார் "வெள்ளைக் காகித" அறிக்கையையும் ஆராய்கிறார்களாம். எதைப் பற்றி ஆராய்ந்தாலும் ஆராயா விட்டாலும் நாம் கவலைப்படப்போவதில்லை. இதில் கலந்துகொண்டிருக்கும் இந்த இந்தியப் பிரதிநிதிகளின் நிலை என்ன என்பதே நமது கேள்வி. இவர்கட்கு இக்கமிட்டியில் ஓட்டுக் கொடுக்கும் உரிமை இல்லை என்பது தெளிவாகி விட்டது. கோர்ட்டுச் சாக்ஷிகளைப் போல் கூப்பிடும்பொழுது ஆஜராகி ஏதாவது சொல்லிவிட்டு வரவேண்டியது தான் இவர்களுக்கு வேலை. இதற்கும் வரிந்து கட்டிக்கொண்டு கப்பலேறிப் புறப்பட்டார்களே!—நாம் யாரைக் குற்றம் சொல்லுவது?

***

## மிதவாதிகள் மகாநாடு

சென்ற மாதம் கல்கத்தாவில் திவான்பகதூர் எம். ராமச்சந்திர ராவ் அவர்கள் தலைமையின் கீழ் அகில இந்திய மிதவாதிகள் மகாநாடு நடைபெற்றது. தலைவரின் முன்னுரைச் சொற்பொழிவு வெள்ளைக் காகித அறிக்கையை விசாலமாக ஆராய்ந்து கண்டித்திருக்கிறது என்பதொன்றே அதில் குறிப்பிடத்தக்க விசேஷம். பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் வாக்குறுதிகளில் அபார நம்பிக்கை வைத்து ஏமாந்துவரும் மிதவாதிகள் இனிமேல் என்ன செய்யவேண்டும் என்பதற்குத் தலைவரின் பிரசங்கம் வழி காட்டவில்லை. அ[illegible] ...னம் வழிகாட்டக் கூடும் என்று நாமும் எதிர்பார்க்கவில்லை.

## மேயருக்கு ராஜபூஷணம்

சென்னை நகரின் மேயராக விளங்கும் செட்டி நாட்டுக் குமாரராஜாவுக்கு இப்பொழுது ஒரு புதிய யோகம் பிறந்திருக்கிறது. அவர் ராஜாவாக பட்டம் பெற்றிருப்பதற்கேற்பச் சென்னை நகர சபையார் அவரை ஆடையாபரணங்களால் அலங்கரிக்க முற்பட்டிருக்கின்றனர். ஒரு நகரின் மேயர் என்பவர் உயர்ந்த அந்தஸ்து வாய்ந்தவர் என்ற முறையில் இரண்டு சரிகை கவுன்கள், சரிகைத் தலைப்பாகை, தங்கச் சங்கிலிகளை அவர் அணியவேண்டும் என்று கருதி ரூ. 300 அநுமதித்திருக்கின்றனர். இத்துடன் ஒரு தடியும், அதைத் தாங்க ஒரு ஆள் வைத்துக்கொள்ளும் உரிமையும் அநுமதித்திருக்கின்றனர். இந்த ஆளுக்கு ரூ. 25-30 சம்பளம். செட்டி நாட்டுக் குமாரராஜாவுக்கு இந்த யோகம் வந்ததைப் பற்றி நாம் பொறாமை கொள்ளவில்லை. அவர் ராஜாவானபடியால் சொந்த ஹோதாவில் எத்தகைய ராஜபூஷணம் வேண்டுமானாலும் செய்து போட்டுக்கொள்ளலாம். ஆனால் ஒரு நகரின் ஊழியருக்கு—இந்தப் பஞ்ச காலத்தில்—வரி செலுத்துவோர் செலவில் இவ்வளவு ஆடம்பரம் வேண்டுமா என்பதே நமது கேள்வி.

***

## நம்பூதிரிப் பெண்கள் விடுதிப்பு

கேரளம் வைதிகத்தின் உறைவிடம். இதற்குத் தலைவர்கள் அவ்விடத்திய நம்பூதிரிப் பிராமணர்கள். அந்த நம்பூதிரி பிராமண வகுப்பைச் சேர்ந்த பெண்கள் கோஷா முறை விதிக்கப்பட்டவர்கள். பகற் காலத்தில் வெளியில் தலைகாட்ட முடியாது. ஒருகால் வெளியே போக நேர்ந்தால் முகத்தைக் குடையால் மூடிக்கொண்டுதான் போவார்கள். புதிய ஆதர்சத்தின் பயனாக இவ்விஷயத்தில் சிறிது காலமாய்க் கிளர்ச்சி இருந்துவருகிறது. ஒரு சிலா இக்காலத்தில் தைரியத்துடன் வெளியிலும் வருகின்றனர். இப்பொழுது இந்தக் கட்டுப்பாட்டை உடைத்தெறியப் பல நம்பூதிரிப் பெண்கள் ஒரு கோஷ்டியாகத் திரண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றோம். இவர்கள் ஊர் ஊராகச் சுற்றுப் பிரயாணம் செய்து பிரசாரம் பண்ண முனைந்து நிற்கின்றனர். இவர்கள் திருவாங்கூர் ராஜ்ய முழுதும் செல்வார்களாம். இவர்களின் உயரிய நன்னோக்கம் வெற்றி பெறுக என்று வாழ்த்துகின்றோம்.

***

## சுயமரியாதை மகாநாடுகள்

தஞ்சை ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடு சென்றமாதம் 8, 9 தேதிகளில் நாகபட்டினத்தில் புதுக்கோட்டை ஸ்ரீமான் கே. முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. இம் மகாநாட்டின் திறப்புவிழா நடத்தியவர் ஸ்ரீமதி நீலாவதியார். வரவேற்புக் கழகத் தலைவர் ஸ்ரீமான் சிவராமசாமி அவர்கள். இம்மகாநாட்டில் காபிகிளப்புகளில் சாதி வேற்றுமை பாராட்டக்கூடாது என்றும், அரசாங்கத்தாரின் மத நடுநிலைமைக் கொள்கையைக் கண்டிப்பதாகவும், கலப்பு மணங்களையும், விதவை மணங்களையும் இன்னும் பிரபலமாய் நடத்த ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும் என்றும், பஸ்களில் சாதிவேற்றுமை பாராட்டி ஆதித்திராவிடர்களை ஏற்றிச்



செல்ல மறுப்பதைக் கண்டிப்பதாகவும், சுயமரியாதை இயக்கச்சார்பில் சமூக சீர்திருத்த வேலை—அரசியல் வேலை ஆகிய இரண்டுக்கும் தனித் தனி ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும் என்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முக்கியமானவை. இம்மகாநாட்டில் நிறைவேறிய குறிப்பிடத்தக்க ஒரு தீர்மானம் தஞ்சை ஜில்லாவை மாடல் ஏரியாவாக (பகுதி) எடுத்துக்கொண்டு சுயமரியாதை இயக்க ஜில்லா, தாலுகா, கிராமங்களை ஏற்படுத்திச் சமதர்ம வேலைத்திட்டத்தை நடத்திக்காட்ட ஒரு கமிட்டி நியமித் திருப்பதேயாகும். இதுகாறும் பேச்சளவிலும் எழுத்தளவிலும் இருந்த சுயமரியாதைக்காரர்கள் இப்பொழுது காரியத்தில் கருத்தைச் செலுத்தி யிருப்பது பெரிய விசேஷமே. திருச், மதுரை ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாடு 16-4-31-ம் தேதியில் நடைபெற்றது. அம்மகாநாட்டின் தலைவர் சென்னை பி. லக்ஷ்மி நரசு பி.ஏ., பி.எல்., அவர்கள், உபசரணைத் தலைவர் எஸ். தியாகராஜன் அவர்களாவர். இம்மகாநாட்டில் சுயமரியாதை இயக்க வேலைத் திட்டத்தைப்பற்றிக் கருத்து வேற்றுமையும் அச்சமும் தோன்றியதாகத் தெரிகிறது. எனினும் எல்லாம் அமைதியாகவே முடிந்தது குறிப்பிடத் தக்கதென்றே கூற வேண்டும். ஆனால் நாட்டு நிலைமையையும் காலப் போக்கையும் ஒட்டிப் போகாத இவர்களுடைய சமதர்ம வேலைத்திட்டம் நடைமுறையில் எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது இனிமேல்தான் தெரிய வேண்டும்.

***

## மகாத்மாவின் உண்ணாவிரதம்

காந்தியடிகள் சென்ற எட்டாந்தேதியிலிருந்து மீண்டும் உண்ணாவிரதம் மேற்கொண்ட செய்தி உலகத்தையே துன்பக்கடலுள் ஆழ்த்தி விட்டது. உலகம் போற்றும் உத்தமர் எதற்காக எரவாடாவில் பட்டினி கிடக்கிறார்? சநாதன தருமிகளின் கடின சித்தமும், ஒரு சில சகா ஊழியர்களின் ஊழல் மனப்பான்மையுமே அடிகள் தள்ளாத வயதில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும்படியான துக்க நிலையை ஏற்படுத்தி யிருக்கின்றன காந்தியடிகள் உண்மையில் உயிர்விட விரும்பவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கட்குத் தொண்டாற்ற உயிர் வாழவே விரும்புகின்றார். மகாத்மாஜி தீண்டாமை விலக்குக் கிளர்ச்சி செய்வது அரசியல் சூழ்ச்சி என்று சநாதனிகள் கருதுகின்றனர். இவர்களெல்லாருக்கும் அவர் கொடுத்துள்ள விடை குறிப்பிடத் தக்கதாகும்.

"எனக்கும் என் சகாக்களுக்கும் அதிகச் சுத்தமும், உறுதியும், தியாக புத்தியும் அவசியம் வேண்டி யிருக்கிறது. திடுக்கிடச் செய்யும்படியான ஆபாசங்களும், அசுத்தங்களும் சில ஊழியர்களிடையே இருப்பது என் கவனத்திற்கு வந்திருக்கிறது. அத்தகைய பேர்வழிகள் இவ்வியக்கத்திலிருந்து விலகிவிட எனது பட்டினி விரதம் ஓர் அவசர வேண்டுகோளாக இருக்கவேண்டியது எனது விருப்பம்" என்றும், "இந்தத் தீண்டாமை விலக்கு இயக்கம் ஆழ்ந்த அரசியல் சூழ்ச்சி இல்லை. சுத்தமத சம்பந்தமானது என்று என் பட்டினி விரதம் சநாதனிகளுக்கு அறிவுறுத்துமென விரும்பி யிருக்கிறேன்" என்றும் காந்தியடிகள் கூறி யிருக்கிறார். இம்மொழிகளைச் சநாதனிகளும், சகா ஊழியர்களும் கூர்ந்து கவனிக்க வேண்டும். இவர்கள் தங்கள் பால் அமைந்துள்ள களங்கங்களை நீக்கிக் காந்தியடிகளின் ஆருயிரைக் காப்பார்களாக. காந்தியடிகள் வாழ்க! காந்தீயம் வாழ்க!




# நீல அறையின் மர்மம்.

(எஸ். எஸ். வாஸன்.)

(799-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவன்:—இவ்விஷயங்களில் நீயும் சம்பந்தப்பட்டிருக்கிறாய். ஆனபடியால் நீ உதவி செய்தே ஆகவேண்டியதா யிருக்கிறது. இன்றேல் உனக்கும் கெடுதி ஏற்படு மென்பதை மறந்தனையோ ?

அவள்:—நான் எவ்விதத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறே னென்றெனக்கே தெரியவில்லை. திருடர்கள் கூடுவதுபோல் இப்பொழுது நான் இந்த ஆபத்தான சமயத்தில் உன்னுடன் பேசவேண்டுமென்று நீ நிர்ப்பந்தப்படுத்துவதில் எனக்கு என்ன நலம் ஏற்படப் போகிறது ? முன்போலவே நாம் சென்னையிலேயே சந்தித்துப் பேசுவது நலமென்று தோன்றுகிறது.

அவன்:—தடுக்க முடியாமற் போனதால் நானிங்கு வந்து உன்னைப் பார்க்கும்படியாயிற்று. உனக்குக் கடிதம் எழுதுவதோ மிக்க ஆபத்தான காரியம். நீ பத்திரமா யிருந்துகொள்ள வேண்டுமென்று உனக்கு ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகவே சிநேக அன்பினால் தூண்டப்பட்டு இங்கோடிவந்தேன்.

அவள்:—எதற்காக நான் பத்திரமாய் இருந்துகொள்ள வேண்டும்?—என்று கேட்டாள். இதற்கு சபாபதி முதலியார் சற்று தாழ்வான குரலில் "சாரதா இங்கிருக்கிறள்" என்றான்.

இதைக் கேட்டவுடனே அவ்வடிவழகி, என்மனையாள் "சாரதாவா ! இங்கேயா யிருக்கிறாள் !" என்று ஒருவித நடுக்கத்துடன் கேட்டாள்.

சாரதா ! என் மனைவின் படுக்கையிலகப்பட்ட கடிதத்தில் இஃதே யெழுதப்பட்டிருந்தது !

என் மனைவி பயந்து கேட்டதற்கு சபாபதி முதலியார் "உண்மையில் அவள் இங்குதானிருக்கிறாள். நீ வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டியதா யிருக்கிறது" என்றான்.

அவள்:— ஆம்; இதெல்லாம் உன்னுடைய வேலையேதான். உன்னால் தான் நான் சாரதாவுக்குப் பயப்படவேண்டியதா யிருக்கிறது. எனக்கு நேரிடும் ஆபத்துக்களுக்கெல்லாம் காரணம் நீதான். கொஞ்சங்கூட சந்தேகமில்லை.



அவன்:—சரி, அநாவசியமான பேச்சு வேண்டாம். நடக்க வேண்டியதைக் கவனிப்போம். இனி நீ எப்படி நடந்து கொள்ளப்போகிறாய்?

அவள்:—எப்படி நடந்துகொள்வது என்று எனக்கே தெரியவில்லை. இவ்விஷயத்தில் என் மனம் நொந்துபோய்விட்டது. கடவுளே கதியென்று இருந்துவிடுவதே மேன்மை—இந்த கொடிய சூழ்ச்சிகளைச் செய்வதும், உண்மை வெளியே போகா வண்ணம் எந்த நிமிஷமும் பயந்து கொண்டிருப்பதும், எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இந்த ஒரு வருடமாக நான் படும்பாடு கடவுளுக்குத்தான் தெரியும். இன்னொரு பெண்பால் என்னுடைய நிலைமையில் இருப்பாளாகில் அவள் உயிர்துறத்தல் ஒருதலையான காரியம். அப்பப்பா ! இனி என்னால் இந்தக் கஷ்டங்களைச் சகிக்க முடியாது.

சபாபதி முதலியார்:—பேஷ் ! பேஷ் !! நீ ஏன் இவ்வாறு அதைரியமடைகிறா யென்று எனக்குத் தெரியவில்லை. புத்திசாலியாகிய ஒரு ஸ்திரீயினாலாகாத காரியமும் இவ்வுலகிலுண்டோ என்று நகைத்தவண்ணம் பகர்ந்தான்.

அவள்:—நான்தான் சொல்லுகிறேனே. எனக்கு இந்த ஜீவனமே பிடிக்கவில்லை. உண்மையில் உன்னைக் கண்டாலும் பிடிக்கவில்லை. இவ்வுலகத்தில் எதன்பேரிலும் பிரியமில்லை என்று ஈனமான குரலில் சொன்னாள்.

அவளுடைய தொனியானது, ஒரு ஸ்திரீ தன்னுடைய ரகசியம் வெளியாகும் சமயத்தில் என்ன மனோவேதனைப்படுவாளோ அதைப்போலிருந்தது.

சபாபதி முதலியார்:—நீ உயிருடனிருக்க பிரியப்படாதது போகட்டும். என்பேரில் அடையவேண்டிய வெறுப்பின் காரணமென்னவோ? நானென்ன தீங்கிழைத்தேன்?

அவள்:—நீ செய்தவை ஒன்று, அல்லது இரண்டாக விருந்தாலல்லவோ சொல்ல முடியும். இந்த ஒரு வருடமாக நான் படும் கஷ்டத்திற்கெல்லாம் காரணபூதம் நீதான்.

சபாபதி முதலியார்:—பெண்ணே ! பழங்கதைகளை ஏன் நினைக்கிறாய். நடந்தவை போகட்டும். இனி நடக்க வேண்டியவைகளையே கவனிக்க வேண்டும். சாரதாவோ இங்கிருக்கிறாள் !

அவள்:—ஆம் ! அவள் இங்கிருக்கிறாளென்று நீதான் சொல்லுகிறாய். நீ சொல்வது உண்மையாகவே இருக்கட்டும். இதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்?

சபாபதி முதலியார்:—நான் சமயோசிதம்போல் நடந்து கொள்வேன். நீ........என்றான்.

அவள்:—நான்........ஆ ! தெய்வமே—நான் பிராணத்யாகம் செய்து கொண்டால் எல்லாம் முடிந்துபோய்விடும்......என்று அடைக்கும் தொண்டையில் வெறுப்புடனியம்பினாள். சற்றுநேரம் இருவரும் மௌனமாயிருந்தனர். ஒரு ஆர்தையின் குரலும் காதில் விழுந்தது. பிறகு சிறிது கோபத்துடன்,

சபாபதி முதலியார்:—இனி இம்மாதிரியான பேச்சுக்களை பேசாதே. பார்ப்போர் நகைப்பார்களே. உன்னுடைய இளம்பிராயமும், மடமையும், நாணமும், அழகும் நடையுடை பாவனைகளும் இச்சென்னையில் யாருக்குத் தான் இருக்கிறது. அப்படி யிருக்கையில் நீ சாவதாவது ! இவை யெல்லாம் வீண் பேச்சு என்றான்.

அவள்:—ஆமாம்! ஒருவருக்கு உயிரின் பேரில் ஆசை இருக்குமெனின், உலகத்தின் கண் எந்த வஸ்துவின் பேரிலேயாவது இஷ்டமிருக்கும். எனக்கு என்ன? நானிருந்தாலும் அல்லது இறந்தாலும் இவையிரண்டு மொன்றுதான் என்றாள்.

சபாபதி முதலியார்:—நீ கோவிந்தராஜனை மணக்க விரும்புகிறதோ வாஸ்தவம். இன்னும் அவனை நீ மணம் புரியலாம் என்றான்.

அவள்:—இல்லவே இல்லை. அது இனி முடியாத காரியம்......கிடையாது—இலவுகாத்த கிள்ளையின் கதிதான் அது. நான் இனி துக்க சாகரத்தினின்றும் நீந்திக் கரையேறி ஆனந்தசாகரத்தில் இறங்குவது கூடாத காரியம் என்று பெருமூச்செறிந்தாள்.

சபாபதி முதலியார்:—அவனின்னும் உன்னை நேசிக்கிறானா?—என்று வினவினான்.

அவள்:—என்னை நேசிக்கிறானா? என்று கேட்கிறாய். ஏன் ஆட்சேபனையின்றி என்னைத்தான் நேசிக்கிறார் என்று வருத்தத்துடன் விடை சொன்னாள்.

சாபாபதி முதலியார்:—அவன் பேரிலுனக்குச் சந்தேகமேயில்லையா? என்றான்.

அவள்:—ஒருகாலும் இல்லை—என்றாள்.

சபாபதி முதலியார்:—அவன் உன்னை மணம் புரிவதாகச் சொல்லியிருக்கிறானா?—என்று கேட்டார்.

அவள்:—ஒரு முறையா! இரு முறையா!! பன்முறை சொல்லியிருக்கிறார்—என்றாள்.

சபாபதி முதலியார்:—கடைசி முறை எப்பொழுது சொன்னதுண்டு?—என்றான்.

அவள்:—கடைசி முறையா! இன்றிரவே சொன்னதுண்டு. ஒரு மணிக்கு முன்பே சொன்னார்—என்றாள்.

சபாபதி முதலியார்:—நீ மறுத்துதானே விட்டாய்? என்று கேட்டார்.

அவள் அதற்கென்ன சந்தேகம்!—என்றாள்.

சபாபதி முதலியார்:—'காரணம்?' என்று கேட்டார்.

அவள்:—ஏனென்றால் எங்களிருவருக்குமிடையே யுள்ள ஆபத்தினால்தான் அது முடியாத காரியம்—என்றாள்.

சபாபதி முதலியார்:—எனினும் இன்னும் நீ அவ்வாபத்தினின்றும் தப்பித்துக்கொள்ளாமல் ஏன் சும்மா இருக்கிறாய். நடுவிலிருக்கும் இருளைப் போக்கப் பிரயத்தனப்படாமலிருக்க வேண்டிய காரணம் என்ன?—என்று கேட்டார்.

அவள்:—எங்களிருவருக்கு மிடையே யுள்ள இருளா? என்ன இருள்? எனக்கு அர்த்தமாகவில்லையே—என்று சற்றுக் குழப்பத்துடன் கேட்டாள்.

சபாபதி முதலியார்:—அர்த்தமாகவில்லையா. ஏன். நீ உடனே கோவிந்தராஜனைக் கலியாணம் செய்துகொண்டால் சாரதாவின் பலம் குறைந்துவிடும் என்று விளங்கவில்லையா?—என்று சொன்னார்.



அவள்:—ஆ! சாரதாவின் பலமா குறைந்துவிடும்! எனக்கு இந்த யோசனை தோன்றவேயில்லை—என்று பரபரப்புடன் சொன்னாள்.

சபாபதி முதலியார்:—நல்லது! நான் சொல்லுவதை கேட்பாயாகில் சுகம் அடைவாய். நீ உடனே கோவிந்தராஜனைக் கலியாணம் செய்துகொள். அப்படிச் செய்தால் உன் விரோதிகளும் உன்னை யண்ட மாட்டார்கள். மேலும் சாரதாவின் சூழ்ச்சிகளுக்கு ஆளாகமாட்டாய். புரிந்ததா?—என்றான்.

அவள்:—நீ சொல்வதைப் பார்த்தால் எனக்குப் புரியவில்லை. ஏனெனின் நான் நீ சொல்லும் விதம் மணம் புரிவேனாகில் என் விரோதிகளெல்லோரையும் வரவொட்டாமல் தடுக்க முடியாதே. இது தெரிந்த விஷயந்தானே. எல்லோரையும் எப்படித் தடுப்பது?—என்று சற்று யோசனை செய்த பிறகு சொன்னாள்.

சபாபதி முதலியார்:—ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? யாருக்குப் பயப்படவேண்டும்? யாருமில்லை எனத்தான் நானெண்ணுகிறேன்—என்றான்.

அவள்:—யாருமா இல்லை! அயலார் ஒருவருமில்லை தான். நீ ஒருவன்தான்! உனக்குத் தான் பிறகு பயப்பட வேண்டும்—என்று சட்டெனச் சொன்னாள்.

சபாபதி முதலியார்:— என் பேரில் கூடவா நம்பிக்கை இல்லை—என்று சற்றுக் கோபத்துடன் கேட்டான்.

அவள்:—உன்னைப் போலிருக்கிறவர்கள் பேரில் சந்தேகமேன் ஏற்படக் கூடாது! இந்தமாதிரி உன்னை ஒரு கைதிக்கும் இழிவாக என்னை நீ நடத்துவதை மறந்தனையோ? நீ மறந்தபோதிலும் நானினி ஒரு பொழுதும் மறக்கமாட்டேனென்றாள்.

சபாபதி முதலியார்:—அப்படிப்பட்ட துரோகியான நான் தான் தற்சமயம் எவ்வளவோ உயிர்ச் சேதங்களுக்கும், ஆபத்துக்களுக்கும் லட்சியம் செய்யாமல் என்னுடைய சௌகரியங்களை மறந்து அசௌகரியங்களுக்கு உட்பட்டு ரகசியமாய் உன்னைக் கண்டு முன்னெச்சரிக்கைக் கொடுக்கிறேனல்லவா? என்று கேட்டான்.

அவள்:—ஏன்? முன்னெச்சரிக்கை செய்பவா? சுயநலத்தை யுத்தேசித்தே செய்கிறாயே யொழிய எனக்காக ஒன்றுமில்லை. நீ எச்சரிக்கை கொடுக்காவிடில், நீ அகப்பட்டுக்கொள்ளாமலிருக்கும் பொருட்டுத் தானே. உன் விஷயம் வெளிவாரவண்ணம் காப்பாற்றிக்கொள்ளுகிறாயே ஒழிய எனக்காகப் பாடுபடவில்லை—என்றாள்.

சபாபதி முதலியார்:—பயித்தியமாக உளறாதே. எனக்கென்ன பயம்? கிடையவே கிடையாது. நான் முன் ஜாக்கிரதையாகத்தானிருக்கிறேன். எனக்கொரு தீங்கும் வராது. நான் உன்னைக் கண்டு இரண்டு சமாசாரங்கள் சொல்லவே இவ்விடம் வந்தேனே யன்றி வேறு ஒன்றுமில்லை. முதலாவது உன்னை கோவிந்தராஜனை உடனே ஆட்சேபனை செய்யாமல் மணம் புரியும்படி சொல்லவும், இரண்டாவது..........என்று தனக்கு அவள் அடங்கி நடத்தல் கடமை என்ற சக்தியை இவ்வளவு தூரம் தானிருக்கிறது என்பதை நன்காராய்ந்து பார்த்து அவளிடம் தெளிவாய்ப் பேசவேண்டியிருத்தலவசியமாதலால், சற்று தனக்குள்ளே யோசிக்கலானான்.

## " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

ஸ்ரீமுக௵ வைகாசி௴—கலியுகாதி 5035, சாலிவாகனம் 1856,
பசலி 1342, கொல்லமாண்டு 1108, ஹிஜரி 1352,
இங்கிலீஷ் 1933௵ மே௴—ஜூன்௴

| வைகாசி | மே௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | [முகூர்த்தம் செய்ய |
| 1 | 14 | ஞா | பஞ்11-33 | உத்53-10 | அமி60 | ரிஷபரவி நா2-23-வி, சுப |
| 2 | 15 | திங் | சஷ்6-10 | திரு51-8 | அ51-8சி | விவாகம், சுப முகூர்த்தம் |
| 3 | 16 | செவ் | சப்2-33 | அவி50-48 | சி50-48ம | வியாதியஸ்தர் குளிக்க |
| 4 | 17 | புதன் | அஷ்0-40 | சத52-13 | சி52-13அ | வியாதியஸ்தர் மருந்துண் |
| 5 | 18 | வியா | நவ0-40 | பூர55-10 | சித்60 | ஏற்றம் ஸ்தாபிக்க |
| 6 | 19 | வெள் | தச2-13 | உத்59-25 | சி59-25அ | சீமந்தம், சுப முகூர்த்தம் |
| 7 | 20 | சனி | ஏகா5-8 | ரே60 | மர60 | சர்வ, மத்வ ஏகாதசி |
| 8 | 21 | ஞா | து8-55 | ரே4-48 | அ4-48சி | மிதுனாயனம் நா-31-50 |
| 9 | 22 | திங் | திர13-38 | அஸ்10-53 | சித்60 | மாச சிவராத்திரி [டானம்) |
| 10 | 23 | செவ் | சது18-58 | ப❋17-38 | சித்60 | கிருத்திகை (ஆலய அனுஷ் |
| 11 | 24 | புத | ●அ24-40 | கிரு24-48 | அ24-48சி | சர்வத்திர அமாவாசை |
| 12 | 25 | வியா | பிர30-35 | ரோ32-13 | மர60 | ஜேஷ்ட சுத்தம் |
| 13 | 26 | வெள் | துதி36-43 | மிரு39-38 | சித்60 | சந்திர தெரிசனம் [ந்தி |
| 14 | 27 | சனி | திரி42-38 | திரு47-0 | சித்60 | சத்தரி முடிவு, பலராம ஜய |
| 15 | 28 | ஞா | சது48-10 | புன53-53 | சித்60 | |
| 16 | 29 | திங் | பஞ்53-0 | பூச60 | சித்60 | |
| 17 | 30 | செவ் | சஷ்56-38 | பூச0-3 | சித்60 | |
| 18 | 31 | புதன் | சப்58-45 | ஆயி5-3 | சித்60 | |
| 19 | 1 | வியா | அஷ்58-53 | மகம்8-25 | அ8-25சி | |
| 20 | 2 | வெ | நவ57-8 | பூர10-0 | சித்60 | |
| 21 | 3 | சனி | தச53-13 | உத்9-40 | மர60 | |
| 22 | 4 | ஞா | ஏகா47-28 | அஸ்7-15 | அ7-15சி | |
| 23 | 5 | திங் | து39-58 | சித்3-8 சுவா57-20 | பிர3-8அ | |
| 24 | 6 | செவ் | திர31-20 | விசா50-23 | ம50-23சி | |
| 25 | 7 | புத | ச○21-58 | அனு42-48 | சித்60 | பௌர்ணமி, வடசாவித்திரி |
| 26 | 8 | வியா | பௌ12-5 | கேட்35-0 | பி35-0சி | 9-க்குள் மழை [விரதம் |
| 27 | 9 | வெள் | பிர2-15 துதி53-0 | மூல27-30 | அ27-30பி | ஜேஷ்ட பகுளம், அவமா கம், பிரயாணம் செய்ய |
| 28 | 10 | சனி | திரி44-48 | பூரா20-50 | சித்60 | கடன் தீர்க்க, மாடு வாங்க |
| 29 | 11 | ஞாய | சது38-0 | உத்15-18 | அமி60 | சுப முகூர்த்தம் செய்ய |
| 30 | 12 | திங் | பஞ்32-40 | திரு11-15 | அ11-15சி | சர்வ முகூர்த்தம் செய்ய |
| 31 | 13 | செவ் | சஷ்29-23 | அவி9-10 | சி9-10மர | வியாதியஸ்தர் குளிக்க, மருந்துண்ண |

1933௵ ஜூன்௴

| | புத | சுக் குரி | |
|---|---|---|---|
| ராகு சனி | 9-ரிஷ-புத 20-மிது-சுக் 23-மிது-புத | | செவ் குரு கே |

Printed & Published by N. Munisawmi Mudaliar,
at the "Ananda Bodhini" Press,
No. 6, Lawyer Chinnathambi Mudali Street, Madras.

# துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்ற எமது சொந்தப் பிரசுரப் பாடசாலை புத்தகங்கள்.

### பாட புத்தகங்களின் விவரம்.

| | | ரு. | பை. |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு மாணவர் தமிழ் பாலபாடம் | (1-ம் புத்தகம்) | 2 | 0 |
| 2-ம் வகுப்பு மாணவர் தமிழ் வாசகம் | (2-ம் புத்தகம்) | 3 | 0 |
| 3-ம் வகுப்பு ௸ | (3-ம் புத்தகம்) | 4 | 0 |
| 4-ம் வகுப்பு ௸ | (4-ம் புத்தகம்) | 5 | 0 |
| 5-ம் வகுப்பு இளைஞர் இந்திய சரித்திரக் கதைகள் | | 4 | 0 |
| சிறுவர் துரைத்தன முறைகள் | (1-ம் பாகம்) | 5 | 0 |
| ௸ | (2-ம் பாகம்) | 6 | 0 |

---

| | | |
|---|---|---|
| செய்யுட்பாடத்திரட்டு | 4 | 0 |

### உப பாடமாக வைப்பதற்குரிய புத்தகங்கள்.

| | ரு. | அ. | | ரு. | அ. |
|---|---|---|---|---|---|
| சதானந்தர் | 1 | 4 | ஸ்ரீபாலன் | 0 | 8 |
| ஜீவகன் | 1 | 0 | தசக்கிரீவன் | 0 | 14 |
| கர்ணன் சரிதை | 0 | 12 | போஜ சரித்திரம் | 0 | 5 |
| ஸ்ரீ பீஷ்ம விஜயம் | 0 | 10 | லார்ட் கிளைவ் | 0 | 12 |
| வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் | 0 | 10 | மூப்பெருந்தாசர் | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் | 0 | 7 | சீமந்தனி | 0 | 8 |
| அரிச்சந்திரன் சரிதை | 0 | 8 | தக்கன் | 0 | 6 |
| சகோதரவாஞ்சை | 0 | 7 | ரிப்பன் பிரபு | 0 | 10 |
| நீலக்கொடி | 0 | 5 | மாதர் நீதிமஞ்சரி | 0 | 6 |
| மணவாளன் | 0 | 3 | பாரத வீரர்கள் | 0 | 8 |
| பரசுராமன் | 0 | 3 | நான்கு கோடி அல்லது நான்கு கடமைகள் | 0 | 4 |
| ஸ்ரீ கிருஷ்ணன் தூது | 0 | 8 | நரிவிருத்தம் மூலமும் உரையும் | 0 | 4 |
| தசாவதார மகிமை | 0 | 6 | ஸ்ரீ கம்பராமாயண வசன சங்கிரகம் | 2 | 0 |
| சிசுபாலன் | 0 | 8 | கண்ணகி | 0 | 10 |
| சண்டோபாக்கியானம் | 0 | 6 | விஜயதிவிட்டர் | 0 | 12 |
| அங்கதன் | 0 | 4 | சங்ககாலத்துப் புலவர்கள் அல்லது பண்டைத் தமிழ்ப் புலவர் மாண்பு | 0 | 10 |
| மங்களேசுவரன் | 0 | 8 | குசேலோபாக்யான வசனம் | 1 | 0 |
| சத்திய வசனி | 0 | 4 | கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| ராஜ மந்திரி கதை | 0 | 4 | | | |
| விமலன் or விதியின் வெற்றி | 0 | 4 | | | |
| கண்ணபிரான் | 0 | 4 | | | |
| உதயணன் | 0 | 6 | | | |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓர் சிறந்த தமிழ்நூல் வெளியீடு

# நாலடியார் மூலமும்

## விரிவான உரையும்.

**செம்பூர் வித்வான்-வி. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல், மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.**

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப் பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகப் பற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன் தரத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந் நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரை யொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந் நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற்கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோதமாகவும், முன் னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக்கொண் டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்கப்பட் டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்கள், இந் நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன. இதுவரை இந் நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந் நூல் மூதற் செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் நாளடைவில் சில பாடல்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில் காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.



இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டபுள்கிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 800 பக்கமுள்ளதாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத் தக்கது.

### இதன் விலை ரூபா 2—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை ரூ. 1—12—0

# நாகரீகம்?

## இரண்டாம் பதிப்பு.

சே. இராஜா செட்டியார், எம்.ஏ. பி.ஜி., அவர்கள் இயற்றியவை

'நாகரீகம்' என்ற உயர்ந்த பெயரை வைத்துக்கொண்டு இக்காலத்து நடைபெறும் பல போலி வழக்க ஒழுக்கங்களின் சீர்கேடுகளை ஒழிக்கவும், நீதியும், உண்மையும், அன்பும் நிலைகுலைந்து, மூலை முடுக்குகளில் தேங்கிக் கிடக்க, அநீதியும், பொய்யும் கொடுமையும் ஒருங்கு திரண்டு கரைகடந்து பெருகி வரும் பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணைக்கட்டாக இக்காவல் வரையப்பட்டது. இதில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டி இந்தியா எல்லோரும் ஒன்று சேர்ந்து அன்புடன் வாழவேண்டுமென்று அரும் பெரும் நீதிகளடங்க பலதிறத்து மனிதர்களின் சுபாவத்தையும் போக்கையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது; இதில் ஜாதி சமூக கட்டுப்பாடுகளின் ஊழல்களும், ஆப்தமித்ரனின் அருங்குணங்களும், கருத்தொருமித்த காதலர்களின் அந்தரங்கப் பிணைப்பும், மோசக்காரர்கள் இறுதியில் நாசமுறுவதும், பல அத்தாட்சிகளோடு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாரும் வாசித்து நற்பயனடைந்து இன்புறுவார்களாக. இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை ரூ. 1—8—0

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# டர்பி ஸ்வீப்கள்.

(மியூச்சுவல் கிளப் லிமிட்டெடால் நடத்தப்படுவது.)

## கேபிள் மூலம் 22-5-1933 வரை

**டிக்கட் ஒன்றுக்கு ரூ. 5-0-0 வீதம் கட்டணம் பெற்றுக்கொள்ளப்படும்.**

---

மேற்படி கிளப்பு டிக்கெட்டு, ரொக்கத்திற்கு கீழ்க்கண்டவரிடமிருந்து கிடைக்கும்:—

**T. V. ரெட்டி,**
ஆதரைஸ்ட் ஏஜெண்ட்,
ராஜமகேந்திரபுரம், கீழ்க்கோதாவரி ஜில்லா.

மதராஸ் ஏஜெண்ட்:—

C. பட்டாபிராம் அண்ட் கோ., பாங்கர்ஸ்,
12, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. மதராஸ்.

---

# சந்திராபாய் அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.
ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக் கப்பல், வெடிகுண்டு, டார்படோப் படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீன நாகரீகப் போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடை மலைபோல் நன்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2.
ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை ரூ. 1—4—0

## கனகபூஷணம் 2-பாகம்

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரஸ மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக் கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகீகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டு மாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.
ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை ரூ. 2—0—0

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.**

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல்.



இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப் பிறந்த தாம் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட் குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப் பற்றிப் பேசுவது.

ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூல்களைப் படித்த பயனை ஒருங்கே யடையக் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களைவிட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்குமென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

**இதன் விலை ரூபா 4.**

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றும் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது.
மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.


☞ சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணம் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

# புல்—புல்—தாரா.



இது ஹார்மோனியத்தைப் போன்ற சிறந்த மனோகர சங்கீத வாத்தியம். சங்கீதப் பயிற்சியை எளிதில் அளிக்கக்கூடியது. இதனுடைய நாதமோ செவிக்கின்பத்தைத் தருவது. ஒவ்வொரு வீட்டிலும் சிறுவர்களுக்கு சங்கீத ஞானத்தை புகட்டச் செய்யும் கருவி இதுவேயாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 கம்பிகள் | உள்ளது | விலை ரூபா | 5 | 8 | 0 |
| 6 | ,, | ,, | 5 | 0 | 0 |
| 5 | ,, | ,, | 4 | 8 | 0 |
| 4 | ,, | ,, | 4 | 0 | 0 |
| 3 | ,, | ,, | 3 | 8 | 0 |

வாசிக்கும் தந்தம் 1, சாவி 1, கம்பி 2, உபயோகிக்கும் விதம் புத்தகம் 1, இவையாவும் சேர்ந்து மேற்படி பெட்டியுடன் அனுப்பப்படும். பெட்டி வேண்டியவர்கள் இத்தனை கம்பிகள் என்று தெரிவிப்பதுடன் முன்பணம் ரூ. 2. அனுப்பவேண்டும்.

## மயிர் போக்கும் சோப்.



இது ஒவ்வொருவருக்கும் மிகவும் அத்தியாவசியமானது. சரீரத்தின் எந்தப்பாகத்திலுமுள்ள மயிரை இந்த சோப்பின் உதவியால் பிரயாசையின்றி அதிக சுலபமாய்ப் போக்கிவிடலாம். மயிரைப் போக்கவேண்டிய இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப் பூசி, அதன்மேல் இந்த சோப்பைத் தேய்த்து ஐந்து நிமிஷம் கழித்து காகித கார்டிலாவது ஓலைத் துண்டிலாவது வழித்தால் அவ்விடத்திலுள்ள மயிர் யாவும் உதிர்ந்து போகும். அந்த இடம் பிறகு மழமழப்பாக விருக்கும். இந்த சோப்பில் துர்நாற்றம் முதலியவை இரா. சோப் 1-க்கு விலை அணா 0 6 0
3-சோப் கொண்ட பாக்ஸ் 1-க்கு ரூ. 1 0 0

## மயிர்போக்கும் சூரணம்.

இதில் கொஞ்சம் எடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில் பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசிகார்டிலாவது, ஓலைத்துண்டிலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகி விடும். வேக்காடு எரிச்சல் முதலிய உபத்திரவங்கள் உண்டாகா. புட்டி 1-க்கு அணா 8.

---

**[illegible] டிபோ, நெ. 1/6. வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.**

# பகவத்கீதை வசனம்

ஸ்ரீ மகாத்மாவினால் சிறப்பித்துக் கூறப்படுவதும், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மாத்வர், ஸ்ரீ நீலகண்டர் முதலிய சமயாச்சாரியர்களின் வியாக்கியானங்கட்குப் பாத்திரமாக விளங்கியதும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினால் அருளிச் செய்யப்பட்டதுமாகிய பகவத்கீதையைச் சிறிது கல்வியறிவுள்ள ஆண்களும் பெண்களுங்கூடப் படித்துப் பயன் பெறவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அது பிரபல நாவலாசிரியரும், கைவல்ய நவநீத வசன நூலாசிரியருமாகிய ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எளிய இனிய வசன நடையில் எழுதப்பட்டது.

அழகிய காலிகோ கட்டடம். இதன் விலை ரூ. 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33-வரை விலை ரூபா 1.

சாதி சமயச் சண்டைகளை யொழித்து சமரசபாவத்தைப் பரப்புவது எது?
இந்து மதத்தின் உண்மையான தத்துவத்தை அறிவிப்பது எது?

வேதாந்த மொன்றே.

உபநிடதங்களின் பரம தாத்பரியமாக விளங்கும் வேதாந்தத்தின் இரகசியார்த்தங்களை யெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறியவேண்டுமானால்

# ஞானசூரியோதயம் என்னும்
# வேதாந்த இரகசியார்த்த வினாவிடை

என்னும் அரிய நூலைப் பாருங்கள். ஒவ்வொருவரிடத்திலும் அத்தியாவசியமாக இருக்கவேண்டிய ஞான பொக்கிஷம். பிறருதவியின்றிப் பாலருமறியுமாறு எளிய நடையில் சம்பாஷணை வடிவமாக எழுதப்பட்டிருக்கிறது. முமுக்ஷுக்களுக்குண்டாகும் முக்கியமான சந்தேகங்களை யெல்லாம் போக்கி சீவன் முக்திப் பரமானந்தத்தைத் தருவது. வேதாந்த தர்க்க ஆசிரியர் திரு. கோ. வடிவேல் செட்டியார் அவர்களின் சிறந்த முகவுரை யுடையது. நாவல் வாசிப்பது போலவேயிருக்கும். நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. சுமார் 200 பக்கம் கொண்டது.

இதன் விலை ரூபா 1—0—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-33 வரை விலை அணா 12.

## நிமித்தியகுறி சாஸ்திரம்


மனதில் நினைத்துக்கொள்ளுங் காரியங்களையும், அவற்றின் பலாபலன்களையும் அறிந்து சொல்லும் மார்க்கங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இது ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 2.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# நாகரீக நங்கையர் கழுத்துச் சங்கிலி

இது சுத்தமான 18 காரட் கோண்ட
ரோல்ட் கோல்ட் பிளேட் நெக்லேஸ் என்னும்




## கழுத்துச் சங்கிலி

3 வருஷம் உத்திரவாதமுள்ளது. இது சுத்தமான ரோல்ட் கோல்டால் செய்யப்பட்டு இமிடேஷன் வைரம், சிவப்பு, ரத்தினங்கள் முதலியவை பதிக்கப் பெற்றது. படத்திற் கண்டபடி மிகவும் வேலைப்பாடுடையது. பதக்கம் அமைக்கப்பெற்றது. கண்ணைக் கவரக்கூடியது. அசல் தங்கத்தால் செய்ததுபோலவேயிருக்கும். யாவரும் எத்தேயத்தினரும் உபயோகிக்கலாம். இதன் விலை ரூபா 1—8—0

ஒரே சமயத்தில் இரண்டு சங்கிலிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் தபால் செலவு இல்லை.

## ரோல்டு கோல்டு
## "பிடோ" லீவர் கைகெடியாரம்.



எங்கள் ரிஜிஸ்டர் ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கெடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான டைம் காட்டும். சிலிண்டர் கெடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கெடியார கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷ காரண்டியுடன் அனுப்புவோம். இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ 5-12-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

சுபீரியர் வாட்சு கம்பெனி, கெடியார வியாபாரிகள், மதராஸ்.

---

## ஆக்ட் புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| இந்தியன் பினல் கோட் சட்டம் | 3 | 0 | பஞ்சாயத்துச் சட்டம் | 1 | 4 |
| கிரிமினல் லா | 3 | 0 | இந்துதேச சாட்சி ஆக்ட் | 1 | 0 |
| சிவில் லா | 3 | 0 | தேவஸ்தான சட்டம் | 1 | 0 |
| புது விவகார சிந்தாமணி | 2 | 8 | எஸ்டேட் லாண்டு ஆக்ட் | 1 | 4 |
| புது பெரிய ஹிந்து லா | 2 | 0 | ஸ்டாம்பு ஆக்ட் | 0 | 12 |
| முகம்மதியன் லா | 2 | 0 | ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் | 0 | 10 |
| கிராம முன்சீப் சட்டம் | 1 | 8 | டிரஸ்டிகள் சட்டம் | 0 | 18 |
| பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் சட்டம் | 1 | 0 | கால நிர்ணயச் சட்டம் | 0 | 2 |
| இன்கம் டாக்ஸ் சட்டம் | 1 | 0 | நில ஆக்கிரமிப்பு என்குரோச்மென்ட் சட்டம் | 0 | 4 |
| லோகல்போர்ட் ஆக்ட் | 2 | 0 | கிராமச் சுகாதாரம் | 0 | 2 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும்,



முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

**விளம்பரம்.**

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேஷ குணம் நன்கு விளங்கும்.

# இந்த லேகிய செந்தூரங்களால் நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம். பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல் நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவையென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபாரகுணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரே தாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன்மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதாபத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிகமனக் கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக்காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப்பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதி-

யாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, சுறி மார்க்கண்ட குப்பு, இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிடல் வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊறஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்சாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால், அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அநாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 8. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0. தபாற்கூலி ரூபா 1-4-0.

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**

44, நம்புலையர் தெரு, மதராஸ்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர் டிரேட் மார்க்)

**பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!**

**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.**




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், கட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும். விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு விலை ரூபா 5.

ஏககாலத்தில் 8-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம்.

வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

**தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

# நாராயண சஞ்சீவித் தைலம்

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைபாரம், அதிக வெய்யிலினால் உண்



டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த் தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இதுநிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து ஞாபக சக்தியையும், முகவசீகரத்தையும் உண்டாக்கும். கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



# கூந்தல் வளரும் துளி

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுது போல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு விலை அணா 12. தபாற்கூலி வேறு.

# கண்நோய் மருந்து

இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.



---

கனலட்சுமி கம்பெனி, நெ.6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# மேஹ ராஜ சஞ்சீவி எண்ணெய்.



இந்த எண்ணெயை ஒருமுறை மூன்று நாள் சாப்பிட்ட மாத்திரத்திலேயே, கிரந்தி, மேக தாமரை, மேக நமைச்சல்கள், மேக இரணம், மேகப் புண், கால் கைகளிலே சேரும் மேக நீர், மேக வெடிப்பு எல்லாவகைகளான வெள்ளை, மூத்திர கருவியிலே தோன்றும் பலவித வியாதிகள் தீரும். அநேக காலமாக இருக்கும் வியாதிகளுக்கு ஒருமுறை சாப்பிட்டு, 15-நாள் பொறுத்து, மற்றொரு முறை சாப்பிடவேண்டும். 3-நாள் எண்ணெய், புட்டி 1-க்கு ரூபா 1—8—0; மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது வியாதியின் பூரண நிலவரத்தை தெரியப்படுத்தவும்.

# கஸ்தூரி மாத்திரை

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் ஈளை, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகள் தீரும். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.



# காப்கியூர் என்னும் க்ஷய அரி.

கபஇருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலுதினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச் செய்யும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

# சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத்




தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேக வாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல் போகும். இது அனேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக் கூடியதுமாகிய உண்மையான மருந்து.

இதன்விலை ரூபா 1—8—0. தபாற்கூலி வேறு.

---

கனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.

## சுகபேதி மாத்திரை.

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை நிரேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்து கொள்ளலாம். 25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு அணா 6.




## யூகலிப்டவ்ஸ் ஆயில்.

### (சுத்தமான நீலகிரித் தைலம்)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அனுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையரா, வெட்டுக் காயங்கள், நரம்புச்சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி, முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 ,, 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0.

## நரைமயிர் கருக்குந் தைலம்.



தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டு பண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா, இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூ. 1.

## கள்ள நோய் நிவாரணி.

### இது 3-தினத்தில் குணப்படுத்தும்.

மேக உஷ்ணம் என்பது வரம்பற்ற ஸ்திரீ போகத்தினால் தாது கெட மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபாற்கூலி வேறு.

---

**தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**



## கர்ணபிந்து

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.
வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4. தபாற்கூலி வேறு.

**தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

---

## பூவேலை தைக்கும் கைமெஷீன்

இவ்வாச்சரியமான மெஷீன் பலவித பூச்சித்திர வேலைகளோடு நேர்த்தியாகத் தைப்பதற்கு மிகவும் அவசியமானது. கொஞ்சநாள் அனுபவத்திலேயே ஸ்திரீ புருஷர்கள் யாவரும் இதை எளிதில் அறிந்து கொள்ள



இவற்றின் உதவியால், மெத்தை படுக்கை, படுக்கை உறைகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், ஜன்னலின் திரைச்சீலைகள், குழந்தைகளின் சொக்காய்கள், ஸ்திரீகளின் கவுன்கள், குல்லாய்கள், இவைகளில் பலவித பூச்சித்திர வேலைகளமைத்து கண்ணைக் கவரும்படி செய்யலாம்; சுவற்றில் களி மண்ணால் பலவிதப் பூச்சித்திர வேலைகள் அமைப்பதற்கும் இது மிகவும் சாதனமானது.

ஒவ்வொரு ஸ்திரீக்கும் தங்கள் ஓய்வு நேரங்களில் இது மிகவும் உற்சாகத்தைத் தந்து தங்கள் மனத்திற்கினிய யுக்தியுடன் புதுபுது வேலைப்பாடான பலரக பூவேலை சித்திர வேலைகள் செய்வதற்கு இது மிகவும் அவசியமானது.

வாங்கிப்பார்த்தாலே இதன் அருமை பெருமை விளங்கும். பத்தே நிமிஷத்தில் இதை அறிந்து கொள்ளும்படியான முறையையும் இதனுடன் அனுப்புவோம். பல ஆச்சரியமான வேலைகளைப் பகட்டாகவும் நேர்த்தியாகவும் இதன் உதவியால் செய்து முடிக்கலாம்.

அநேக பள்ளிக்கூடங்களில், மாணவர்களுக்கு இவ்வேலைப்பாடுகளைக் கற்பிக்கும் பொருட்டுத் தருவித்து நல்ல பலனை அடைந்திருக்கிறார்கள்.

இதை உபயோகிக்கும் முறை அடங்கிய புஸ்தகம், இம் [illegible] பெட்டியில் அடக்கம் செய்து அனுப்பப்படும். விலை ரூ. 2-8-0 [illegible]

# சிவப்பிரகாச பல் பொடி




இந்தச் சிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல்பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும், பல்வலி, பல்லில் சொத்தை, சதை வளர்ந்திருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கம கம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 6-டப்பிகள் அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

## அயத்தங்கத் திராவகம்

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக் கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போ யிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்தமங்களா லுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40-நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூபா 1. 40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# புத்திர சந்தான எண்ணெ



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
ஏன்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதனாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சொறி பற்றி இரத்தங்கட்டி யிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கருதரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருதரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து இடையென்று உடைந்து போவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

## மதன கோலாகல

# தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தாலும், வரம்பற்ற போக நுகர்ச்சியாலும் இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப் படத்தக்க விதமாய் உண்டாக்கி ஒரு விதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும்.



இதுவன்றி வேறு எந்த நோயினா லுண்டான பலவீனமும் இம்மருந்தினால் நீங்கும். இரத்த விர்த்தியை யுண்டாக்கி நரம்புக்கு உறுதியைக்கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டுச் சிறந்த கைபாக செய்பாகங்களால் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.


# சூதக நிவாரணி மாத்திரை.



ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) கிரமமாக வெளிப்படாமல் காலந்தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலே யிருத்தல், வயிற்றுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்சட் காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல் மூச்சு வாங்குதல், மர்மஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும்.

ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1.

# (காட்லீவர் ஆயில்) மீன் எண்ணெய்.




இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இரும்பலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும், ரத்தத்தைச் சுத்தி செய்யும், சுவாசகோசங்களின் ரோகத்தைக் குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூ. 1-8-0.

# கருவைத் தடுக்கும் ஔஷதம்

இந்த இரகசிய கருவைத்தடுக்கும் ஔஷதம் ஜர்மன் தேசத்தில் செய்யப்பட்டு அநேக பண்டித மேதாவிகளால் பரிசோதிக்கப்பட்டு நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றிருக்கிற படியாலும் நமது தேசத்தில் வரவுக்குமிஞ்சிய குழந்தைகளைப் பெற்று குடும்பங்கள் கஷ்டப்படுவதை யோசித்தும், சில பலஹீனப்பட்ட தாய்மார்கள் அடிக்கடி கர்ப்பம் தரித்து தனது சரீரம் நொந்து ஹீனதிசை யடைவதைக் கண்ணுற்றும் தற்சமயம் எம்மால் ஷை ஔஷதம் தருவிக்கப்பட்டு விற்பனை செய்து வருகிறோம். உபயோகிக்கும் முறை ஔஷதத்துடன் அனுப்பி வைக்கப்படும். விலை ரூபா 2—0—0.

# டேபில் டைம்பீஸ் இனாம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம் பீஸ் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முந்துங்கள். விலை ரூ. 6-4-0. தபால் கூலி பிரத்தியேகம்.



**கருணைநிதி டிபோ, கெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

# புதிய கொக்கோக வசனம்
## (உண்மையான இன்பநூல் இதுவே)

இதைப்போன்ற பலவித புஸ்தகங்கள் வெளிவந்திருப்பினும், அவைகளில் விஷயங்கள் மனதிற் பதியுமாறு எழுதப்படவில்லை. ஆனால் இச்சிறு நூலில் ஆண் பெண் இருபாலரும் சிற்றின்ப சம்பந்தமாகவும், இல்வாழ்க்கை சம்பந்தமாகவும் அறியவேண்டிய பல விஷயங்களும், மர்மங்களும் தெளிவான நடையில், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆறும்பதிப்பு வெளியானதாலேயே இதை மக்கள் எவ்வாறு விரும்புகிறார்களென்பது தெரிகிறது. சட்டைப் பையில் அடங்கும்படியான அளவு புஸ்தகம் விலை ரூபா 1—0—0. வி. பி. வேறு.

### காதலர் கண்டு களிப்புறும் நூல்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இன்பவாழ்க்கையின் இரகசியம் | 2 | 0 | ரதி சாஸ்திரம் ... | 1 | 4 | 0 |
| இல்வாழ்க்கையின் இரகசியம் | 2 | 0 | சரீர மர்ம சாஸ்திரம் ... | 1 | 0 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | 2 | 4 | மதனாதி ரஹஸ்யம் ... | 2 | 0 | 0 |
| மாதர் நீதி ... | 1 | 0 | ரதிமதனசிருங்கார ரகஸ்யம் | 1 | 0 | 0 |
| இல்லற இன்பரகசியம் ... | 0 | 8 | மாயாஜால விநோதம் ... | 1 | 0 | 0 |
| ஸ்திரீ புருஷ தத்துவம் ... | 3 | 0 | மனோவசிய சாஸ்திரம் ... | 1 | 8 | 0 |
| முத்தத்தின் மர்மம் ... | 1 | 8 | ஸ்திரீ புருஷ ரகசியம் ... | 1 | 8 | 0 |

விலாசம்:— ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

# அயக்காந்த சத்தின் திராவகம்.



இந்தத் திவ்ய ஔஷதம், விஷசுரம் முதலிய எத்தகைய ஜுரத்தினாலும் தேகம் மெலிந்து வெளுத்துப் போனவர்களுக்கும், வேறு பல வியாதிகளால் தாக்கப்பட்டுப் பலமற்றுப் போனவர்களுக்கும், தாது விருத்தி நாட்டங்கொண்டு பல மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாதவர்களுக்கு இது ஒரு அமிர்தமாகும் என்றே நிச்சயமாகக் கூறுவோம். இம்மருந்தை உட்கொள்வதால் மல ஜலம் தாராளமாய்க் கழிந்து பசியின்மையைப் போக்கி ஜீர்ண சக்தியைக் கொடுத்துப் பரிசுத்த இரத்தத்தைப் பெருக்கும். தாதுவிருத்தி உண்டாகும். தேகம் சிவப்படைந்து முகம் வசீகரமாகும்.

இம் மருந்தைச் சாப்பிடுகிறவர்கள் தேக திடத்தைப் பெற்று, வலிவுள்ள மக்களைப் பெறுவார்கள். சகல இன்பங்களையும் அனுபவிக்கலாம். ஆண்பெண் இருபாலரும் எப்பொழுதும் உபயோகிக்கலாம்.

பெரியவர்கள் ஒரு அவுன்சு தண்ணீர் அல்லது பசும்பாலில் 10, 12-துளி வரையிலும், சிறியவர்கள் 2-முதல் 6,7—துளிகள் வரையிலும் காலைமாலை இரு வேளையும் சாப்பிடவேண்டும். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. எல்லா ஏழைகளும் வாங்கி உபயோகிக்கும்பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒருமாதம் சாப்பிடக்கூடிய மருந்து 0-12-0 தபாற் செலவு வேறு.

**கருணைநிதி டிபோ. கெ. 1/6 வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

முதல்தரமான—V. H. R. A Quality

# பெருங்காயம்.

அநேகர் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதா யிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததைத் தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சரசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும். வேண்டுவோர் வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுண்ட் ரூ. 2.<br>½-இராத்தல் ரூபா 1—1—0. } தபாற்கூலி வேறு.



## யோகினி பரிமள கூந்தல் தைலம்

**5** வித இனாம் சாமான்கள் சேர்த்தனுப்பப்படும்.

இந்தத் தைலத்தை கூந்தலில் தடவிக்கொண்டால் இன்றுமலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். கூந்தலுக்கு வளர்ச்சியைத் தருவதுடன் தலைக்கொதிப்பையும் அடக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரவல்லது. விலை அணா 13.

இனாம் சாமான்:-1 செண்டுபுட்டி, 1 பெட்ரூம் படம், 1 ஜவ்வாது பில்லை, 1 கலர் சாந்து, 1 சிறிய கண்ணாடி.

## 130 சாமான்கள் அடங்கிய பெட்டி

**இதன் விலை ரூபா 2-12-0 தான்.**



**இதன் விலை ரூபா 2-12-0 தான்.**

சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்விழைத்த புரூச்; 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணி பர்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு ரூ. 2—12—0.

**கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

# G. W. M. REYNOLDS.

BOLD TYPE EDITIONS.

| | | Rs. | As. | | | Rs. | As. |
|---|---|---|---|---|---|---|---|
| Mysteries of the court of London | 17 vols. | 17 | 0 | Pope Joan ... | 3 vols. | 1 | 12 |
| Joseph Wilmot | 8 ,, | 5 | 0 | Necromancer | 3 ,, | 2 | 4 |
| Ellen Percy | 8 ,, | 5 | 0 | Wagner, the Wehr Welf | 3 | 1 | 12 |
| Mary Price | 8 ,, | 5 | 0 | Soldier's Wife | 2 ,, | 1 | 8 |
| Rye House Plot | 4 ,, | 3 | 0 | May Middleton | 2 ,, | 1 | 8 |
| Young Duchess | 4 ,, | 3 | 0 | Faust ... | 2 ,, | 1 | 8 |
| Omar | 4 ,, | 3 | 0 | Leila ... | 2 ,, | 1 | 8 |
| Rosa Lambert | 4 ,, | 3 | 0 | Robert Macaire | 2 ,, | 1 | 4 |
| Margaret ... | 4 ,, | 3 | 0 | Mary Stuart | 2 ,, | 1 | 4 |
| Loves of the Harem | 4 ,, | 3 | 0 | Seamstress | | 1 | 0 |
| Massacre of Glencoe | 4 ,, | 3 | 0 | Alfred ... | | 1 | 0 |
| Virgin's Kiss | 4 ,, | 3 | 0 | Grace Darling | | 0 | 12 |
| Cannonbury House | 3 ,, | 2 | 4 | Young Fisherman | | 0 | 10 |
| Mysteries of Old London | 3 ,, | 2 | 4 | Stories Told by a Gendarme | | 0 | 12 |
| | | | | Mysteries of Paris by Eugene Sue | | 1 | 0 |

SUPERIOR WATCH CO., P. B. NO. 167, MADRAS.

## 1 கல் போட்டோகிராப் மோதிரம்.



இந்த மோதிரத்தின் பக்கத்தில் கடுகளவு பிரமாணம் வைத்து பூதக்கண்ணாடி அமைத்திருக்கும் அதைப்பார்த்தால் பெரிய உருவங்களாய் லேடிகள், சவாடிகள், கட்டடங்கள் முதலானதும் வெகு வேடிக்கையாய்த் தெரியும்.

இதன் விலை 1-கல் மோதிரம் 1-க்கு அணா 8. 7-கல் மோதிரம் அணா 10.

## அற்புத எலக்டிரிக் மோதிரம்.

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டது! இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர் வரை ஆண் பெண் இருதிறத்தார்களும் உபயோகப் படுத்தலாம் இம் மோதிரத்திற் குள்ளிருக்கும் எலெக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள்



நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும்நோயைகுணப்படுத்திக்கொள்வதற்கும் இம் மோதிரத்தை உபயோகியுங்கள்! இம்மோதிரமானது 8-வித லோகங்களைக்கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பட்டிருக்கின்றது. இதை விரலில் அணிந்தவுடன் அதிலிருந்து மின்சாரசக்தி தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளுயன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம், சூலை முதலிய கொடூரமான வியாதிகள் அணுகாது. நற்சாக்ஷிப் பத்திரங்கள் பிரதி தினம் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0<br>மோதிரம் 3-க்கு ரூ. 3—12—0

**கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

## மானிடர்க்கு மகிழ்ச்சியைத்தரும்

# மகா சந்தனாதித் தைலம்.

அன்பர்களே! வெயிற்காலத்திற்கு இன்பந்தரும் இந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக் கட்டைச் சத்தினாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான சற்க வஸ்துகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி பெரும் பிரயாசையின் மேல் செய்யப்பட்டு இப்போது வெளி வந்திருக்கிறது.



ஆயிரக்கணக்கான பணச் செலவின் மேல் தீர்க்கவேண்டிய வியாதிகளையெல்லாம், இந்த சந்தனாதித் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி யிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ்செய்து வருவதால் கண்எரிச்சல், கண்களில் நீர் வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, சாலேஸ்வரம், பித்தபாண்டு, காமாலை, அஸ்தி சுரம், நாவறட்சி, கைகால் எரிவு, தேகவெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி. சிரங்குகள், நமைச்சல், பீனிசம், கபால சூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாகும்; ஞாபக சக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

இதைத் தேய்த்து நீடித்து ஸ்நானஞ் செய்துவருவதால் மூளையில் கொதிப்பு நீங்கிக் குளிர்ச்சி யுண்டாகும்; மூளை அதிர்ச்சி, துடிதுடிப்பு, தலை மயக்கம் முதலியவைகளும் நீங்கும்; மறதி ரோகம் அறவே ஒழிந்துவிடும்; பித்தத்தினால் நரைத்த ரோமங்கள் கருமை யடையும்.

இத்தைலம் தேய்த்து ஸ்நானஞ்செய்த தினத்தன்று சீதள பதார்த்தங்களையும், தயிர் மோர் முதலியவற்றையும், பகல் நித்திரை, ஸ்திரீ சம்போகம் முதலியவைகளையும் நீக்கவேண்டும்.

இதன் விலை 1 சேர் தைலம் அடங்கிய டின் ரூபா 1-12—0

இதன் விலை ½ சேர் தைலம் அடங்கிய டின் ,, 1—0—0

## வாத ஜீர்ணபி லேகியம்.

இந்த லேகியத்தை கெச்சைக்காய் பிரமாணம் காலை, மாலை சாப்பிட்டால் அக்னி மந்தம், வயிற்றுவலி, குன்மம், வாதம் முதலிய அநேக ரோகங்கள் தீரும். பத்திய விவரம் மருந்துடன் சேர்த்து அனுப்பப்படும்.

டப்பி 1-க்கு விலை ரூபா 1. தபால் செலவு வேறு.

---

விலாசம்:—தனலட்சுமி கம்பெனி,

நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, சௌகார்பேட்டை, மதராஸ்.

# ப்ரெஞ்சு லெட்டர்ஸ் என்னும்

## ரப்பர் பெஸ்லாரிகள்.



கருத்தரித்தலைத் தடுக்கும் பொருட்டுப் புருஷர்கள் உபயோகப்படுவதற்கான ரப்பர் கருவிகள். யாவரும் உபயோகிக்கலாம்.

ஸ்தி ஷீத் 1-க்கு ரூ. 1-12-0. நெ. 1. ரூபா 1. நெ. 2. விலை அணா 12. நெ. 3. விலை அணா 10.

## ரப்பர் பெஸ்லாரி.

சாஸ்திர ஆராய்ச்சி செய்து கர்ப்பத் தடைக்கு தீங்கியமையாததென்று கருதப்படுவதும் டாக்டர் மேரிஸ்டோப்ஸ் முதலானவர்களால் சிபார்சு செய்யப்படுவதுமான இந்த மெல்லிய பெஸாரி எந்த ஸ்திரீயும் கருத்தடைக்காக உபயோகப்படுத்திக்கொள்ளலாம், உபயோகிக்கும் விதம் எழுதி வைத்து அனுப்பப்படும். விலை ரூ. 2 8 0

## போட்டோ ஆல்பம்



பிரான்சு தேசத்தில் உள்ள அழகிய பெண்களை போடோ எடுத்து தயாரிக்கப்பட்டது. பங்களாக்களிலும், படுக்கை அறையிலும் சிங்காரிக்கவேண்டிய படங்கள். விதவிதமான காதல் ஊட்டும் படங்கள் பற்பல மாதிரியாக நடக்கும் காதல் வேடிக்கைகளையும் போடோ முகத்திற் காணலாம். 12-கொண்ட 1-ஆல்பம் விலை ரூ. 1-14-0

நிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

---

## வடுவூர் K. துரைசாமி ஐயங்கார் நாவல்கள்.

| | பாகங்கள் | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|---|
| பூ சந்திரோதயம் | 4 | 7—8 | காளிங்கராயன் கோட்டை 2 பாகங்கள் | 4—0 |
| கல்யாணி | 3 | 4—8 | விலாசவதி 2-பாகங்கள் | 3—0 |
| சதாரகோகிலம் | 3 | 6—0 | பாலாமணி | 2—8 |
| திவாசாமியார் ல்யலீலைகள் | 2 | 5—0 | மங்கையர் பகட்டு | 0–12 |
| ராவினோதப்பரதேசி | 2 | 5—0 | லீலாவினோத குதூகலம் | 2—4 |
| னகா | 2 | 3—0 | பன்னியூர் படாடோப சர்மா அல்லது மயனுலக மதமயக்கம் | 2—4 |
| னகாம்புஜம் | 2 | 2–12 | மிஸிஸ் லைலாமோஹினி அல்லது மயன்லீம் | 2–12 |
| கும்பகோணம் வக்கீல் | 2 | 3—0 | இராஜேந்திர மோகனா | 1—4 |
| வித்தியாசாகரம் | | 1—4 | துரைக்கண்ணம்மாள் | 2—4 |
| திவான்லொடபடசிங் | | 0–12 | மாயசுந்தரி | 0–12 |
| திலோத்தமா | | 0–12 | | |
| மாணிக்கவாசகர் | | 0—8 | | |
| வஸந்தமல்லிகா | | 1—8 | | |

விலாசம்:—ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

# நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

| ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை. | ரூ. | அ. | | ரூ. |
|---|---|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகம் | 9 | 10 | துயரானன் கதை | 0 |
| கற்பகச் சோலையின் அற்புதக் கொலை | 1 | 4 | பூலோக லக்ஷ்மி கதை | 0 |
| | | | கனகரத்தினம் | 0 |
| | | | கண்டிராஜநாடகம் | 0 |
| டெற்கொள்ளைக்காரன் 2 பாகம் | 3 | 4 | நளின சுந்தரி | 0 |
| மதனாம்பாள் 2-பாகம் | 3 | 0 | கம்பராமாயண சங்கிரகவசனம் | 2 |
| லோகநாயகி | 1 | 0 | குசேலோபாக்கியான வசனம் | 1 |
| விளையாட்டுச்சாமான் | 1 | 6 | ஸ்ரீபாலன் | 0 |
| பவளத்தீவு 2-பாகங்கள் | 3 | 0 | உதயணன் | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 0 | 14 | தசக்கிரீவன் | 0 |
| இந்திராபாய் | 2 | 8 | போஜ சரித்திரம் | 0 |
| அமராவதி 2-பாகங்கள் | 4 | 0 | சதானந்தர் | 1 |
| மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 | ஜீவகன் வசனம் | 1 |
| கற்கோட்டை | 2 | 0 | கர்ணன் சரிதை | 0 |
| பூங்கோதை | 0 | 10 | பீஷ்ம விஜயம் | 0 |
| வீரநாதன் | 0 | 12 | கீர்த்திசிங்கன் | 0 |
| கனகபூஷணம் 2 பாகமும் | 3 | 8 | மூப்பெருந்தாசர் | 0 |
| கமலசேகரன் | 1 | 12 | அரிச்சந்திரன் சரிதை | 0 |
| தினகரசுந்தரி | 1 | 0 | நீலக்கொடி | 0 |
| ரத்தினபுரிரகசியம் 7 பாகமும் | 13 | 14 | மணவாளன் | 0 |
| சந்திராபாய் | 2 | 0 | பரசுராமன் | 0 |
| இராஜாமணி | 2 | 0 | சிசுபாலன் | 0 |
| இரத்தினபாய் | 1 | 12 | அங்கதன் | 0 |
| மதனபூஷணம் | 1 | 0 | தசாவதாரம் | 0 |
| சுவர்ணாம்பாள் | 0 | 12 | கிருஷ்ணன் தூது வசனம் | 0 |
| தேவசுந்தரி | 1 | 4 | சண்டோபாக்யானம் | 0 |
| குணசுந்தரன் | 0 | 12 | கருணாகரரும் சத்தியசீலரும் | 0 |
| பத்மாவளி | 0 | 14 | சத்தியவசனி | 0 |
| ஆனந்தவல்லி | 2 | 0 | விமலன் | 0 |
| மின்சார மாயவன் | 1 | 8 | கண்ணபிரான் | 0 |
| ஆனந்தசிங்கின் அஷ்டஜயங்கள் | 1 | 12 | செய்யுட்பாடத்திரட்டு | 0 |
| அர்ஜுனசிங், சுந்தர் | 0 | 2 | நாலுமந்திரி கதை | 0 |
| கைவல்லிய நவநீத வசனம் | 1 | 8 | மங்களேசுவரன் | 0 |
| சகோதரவாஞ்சை | 0 | 7 | நக்கன் | 0 |
| | | | சீமந்தனி | 0 |
| தத்வ சங்க்ரஹ ராமாயணம் | 4 | 0 | நான்குகோடி | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 | மதிமோசவிளக்கம் | 0 |
| | | | மெய்க்காதலி | 0 |
| விவேகானந்தர் | 4 | 0 | மேனகையினுக்கி கதை | 0 |
| தமிழ் பெருமையா மெய்கா | 3 | 0 | வீரசாலன் ஞானேந்திரி | 0 |
| மாதவி மாதவன் 2 பாகம் | 2 | 0 | மகேந்திரன்மணி கதை | 0 |
| மலையாள பகவதி | 1 | 0 | கோமளவல்லி கதை | 0 |
| அற்புதாவதீத ரம்பை | 1 | 0 | விகடவல்லி கதை | 0 |
| அகட விகட விவாச விநோதம் | 0 | 10 | தாலிகட்ட மறந்த கதை | 0 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற (ரிஜிஸ்டர்டு.)

## "சகுந்தலா" கூந்தல் வளரும்


### பரிமளத் தைலம்




டின் 1-க்கு விலை அணா 12

இத்தைலத்தின் பரிமளம் எவருக்கும் இன்பத்தை யளிக்கும். இது கூந்தலை சீக்கிரமாக வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணியச் செய்யும். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல வியாதிகளையும் நிவர்த்தி செய்யும். கண்ணில் நீர்வடிதல், தலையில் புண், மயிர் வெடிப்பு, மயக்கம், சுற்றல், தேக நமைச்சல், சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், மனோ சஞ்சலம், ஞாபகமறதி இவைகளைப் போக்கடித்துத் தேக ஆரோக்கியத் தந்து வாசனையை உண்டாக்கும். இந்தத் தைலம், பல வனமூலிகை சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதில் ஒரு டின் தைலம் வாங்கிப் பார்த்தால் இதன் அருமை விளங்கும்.

## கிருஷ்ண சஞ்சீவி




தலைநோய், பாரிச வாய்வு, சுளுக்கு, புண்கள், கட்டிகள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள் கொட்டின விஷம் முதலியவைகளைத் தீர்ப்பதில் இது முதன்மை பெற்றது. நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியைத் தடவி நன்றாய் இரண்டு மூன்று நிமிஷங்கள் வரை தேய்த்தால், அது மாயமாய் ஓடிவிடும். இளங் குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கும் இதை உபயோகிக்கலாம். இதன் புட்டிகள் ஆயிரக்கணக்காகச் செலவழிந்து கொண்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும், பிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும். இதன் விலை புட்டி 1-க்கு அணா 8. டஜன் 1-க்கு ரூ. 5.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால் பெட்டி நெ. 167

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# "பிரசண்ட விகடன்"

## ஒரு ஹாஸ்ய மாதப் பத்திரிகை



இதில் சிறப்பாக அரசியல், சமூக வியல், சமயவியல் சம்பந்தமான எல்லா விஷயங்களும் விலாப் புடைக்கச் சிரிக்கச் செய்யும் தோரணையில் தமாஷாகவும், வேடிக்கையாகவும், விநோதமாகவும், கேலியாகவும் வெளிவரும். ஏராளமான அபூர்வ அதி விசித்திரப் படங்கள் பத்திரிகையை அலங்கரித்து வரும். தேச சமூக விடுதலைக்கு உழைப்பது. இன்றே சந்தாதாரராகச் சேர முந்துங்கள்.

ஆண்டுச் சந்தா தபால் கூலி யுட்பட உள் நாடு ரூ. 0—12—0.
வெளி நாடு ரூ. 1—4—0.

தனிப்பிரதி விலை அணா ஒன்று.

குறிப்பு:—ஏஜண்டுகளாக விரும்புவோர் நமது காரியாலயத்திற்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளலாம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம் புஸ்தகசாலைகளிலும் "சுதேசமித்திரன்" புஸ்தக சாலைகளிலும், எல்லா ஊர்களிலுமுள்ள ஏஜண்டுகளிடமும் "பிரசண்ட விகடன்" ஒரு அணாவுக்கு விற்கப்படும்.

ஏஜெண்டுகள் இல்லாத ஊருக்கு ஏஜண்டுகள் தேவை.

மானேஜர், "பிரசண்ட விகடன்" ஆபீஸ்.
நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்.